www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI


உள்ளே......

* காத்திருந்த வேளையில்....
* போராட்டமுறையில்...
* தமிழ் கலாச்சாரத்தின் வெற்றி
* சங்கர் ராஜியுடன் ஒரு செவ்வி
* நல்லூர் அரசாளும் பெருமாளே...
* சொற்சதுரங்கம்



ஓசை :1
ஒலி :4

ஆங்கீரஸ ஸ்ரீ ஆடி மீ 30ந் திகதி (14 - 27.8.1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


# கொழும்பில் அரசியல் கொந்தளிப்பு

# இராணுவ தலைவர்கள் பலியின் எதிரொலி

(நமது கொழும்பு நிருபர்)

**யாழ்ப்பாணத்தில் பத்து உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதையடுத்து கொழும்பில் அரசுக்கு எதிராக பலத்த கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இராணுவ வீரர்களின் இறுதிமரியாதையில் அமைச்சர்கள் தாக்கப்பட்டு வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. நிலைமையை சமாளிக்க பொலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர்.**

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்தின, கமாண்டர் மோகன் ஜயமகா உட்பட மற்றும் ஏழு இராணுவ வீரர்கள் ஊர்காவற்றுறை



அராலியடித்துறையில் அமுக்க கண்ணிவெடியில் இம்மாதம் 8ஆம் தேதி காலை கொல்லப்பட்டார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இக்கொலைகளுக்கு உரிமை கோரியிருப்பதாக பாரிசிலுள்ள லோறன்ஸ் திலகரை ஆதாரம்காட்டி அதே தினம் செய்தி ஸ்தாபனம் ஒன்று செய்தி வெளியிட்டது.

செய்திகளின்படி, வடபகுதிக்கான படைத்தளபதி கொப்பேகடுவ, யாழ்ப்பாண கமாண்டர் விமலரத்தின, வடபகுதி கடற்கடைத்தளபதி ஜயமகா ஆகியோர் 8ஆம் தேதி காலை ஊர்காவற்றுறைப் பகுதியில் பாதுகாப்பு தளங்களை சோதனையிட்ட பின்னர் கடந்த பல மாதங்களாக இராணுவத்தினதும் ஈபிடிபியினதும் கட்டுப்பாட்டிலிருந்த இப்பிரதேசத்தில் புலிகளின் ஊடுருவல் தொடர்பான செய்தியையடுத்து புதிய இராணுவ நடவடிக்கைகளுக்கு திட்டமிடவிருந்தனர்.

மூன்று இராணுவ வண்டிகளில் பல்வேறு இடங்களுக்கும் சென்ற இவர்கள் கணிசமான அளவு நேரத்தை அவர்களின் இந்த இராணுவ திட்டமிடல் நடவடிக்கையில் செலவிட்டார்கள். இதனை முடித்துக் கொண்டு பலாலி விமானத்தளத்துக்கு செல்வதற்காக தமது விமானத்துக்கு திரும்புகையில் இரண்டாவது வாகனத்தில் வந்த விமலரத்ன முதலாவதாகச் சென்ற வாகனத்தை நிறுத்தும்படி கூறினார். தமது நடமாட்டத்தை புலிகள் நோட்டமிட்டிருக்கலாமென்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதலாவது காரில் எல்லோரையும் ஏறும்படியும் கூறினார். விமலரத்தின சாரதி ஆசனத்திலும் ஜயமகா நடு ஆசனத்திலும் அமர்ந்தனர். முதல் வாகனத்திலிருந்த மேஜர்கள் ரஞ்சித் ரூபசிங்க, றோகன் இந்துருவேவ ஆகியோர் மற்றைய இரு கார்களிலும் ஏறினர்.

காலை சுமார் 10 மணிக்கு அவர்கள் அராலித்துறையை அடைந்தபோது சடுதியாக முதலாவது வாகனம் அமுக்க கண்ணி வெடியில் வெடித்துச் சிதறியது. விமலரத்தின, ஜயமகாவும் கேணல் பலிபகன (கஜபா படை கமாண்டர்), கேணல் ஸ்டீபன் (சிங்க படை கமாண்டர்), கேணல் ஆரியரத்தின (சிங்கபடை), மேஜர் நளின் டி அல்விஸ் (கொப்பேகடுவவின் உதவியாளர்), லெப்டினன்ட் லங்கா திலக (கடற்படை), லெப்டினன்ட் விஜயபுர (கடற்படை), சாரதி விக்கிரமத்தின ஆகியோரும் ஸ்தலத்திலேயே மாண்டார்கள்.

மற்றைய வாகனங்களில் வந்த இரு மேஜர்களும் தப்பித்துக் கொண்டார்கள்.

கொப்பேகடுவ அவரது கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார். விமான மூலம் கொழும்புக்கு கொண்டு விரையப்பட்ட அவரது இதயத்தை மீள இயக்குவிப்பதில் டாக்டர்களின் முயற்சிகள் பயனற்றுப் போகவும் பி.ப.2.30மணிக்கு அவர் காலமானார். அவரது மூளையும் ஈரலும் பலமாக பாதிக்கப்பட்டிருந்தன.

அந்த அமுக்க கண்ணிகள் பாதுகாப்புப்படைகள் ஊர்காவற்றுறையை மீள கைப்பற்றமுன்னர் புலிகளால் வைக்கப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் விஷயமறிந்த வேறு வட்டாரங்கள், இது குடாநாட்டிலிருந்து இங்கு ஊடுருவிய புலிகளினால் அண்மையில் வைக்கப்பட்டதென்றே தெரிவித்தனர். எப்படியெனினும் இவை இரண்டுமே பாதுகாப்புப் படைகள் மீதும் வடபகுதியில் அவர்களோடு இணைந்துள்ள ஈபிடிபி மீதும் பழியையே சுமத்துகின்றன.

அது பழைய வெடியானால் இவ்வளவுகாலமும் அதைக் கண்டு பிடிக்க அவை ஏன் தவறின? அண்மையில் வைக்கப்பட்டதானால் மீட்கப்பட்ட பிரதேசத்தில் அவர்களின் ஆற்றலின்மையை இது வெளிப்படுத்தவில்லையா? இந்த வினாக்கள் பகிரங்கமாக எழுப்பப்படுகின்றன.

வட-கிழக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட அதி உயர்ந்த இராணுவ அதிகாரி கொப்பேகடுவ. 1990 டிசம்பரில் மேஜர் ஜெனரல் லக்கி விஜேரத்தின, பிரதி பொலிஸ் மா அதிபர் நிச்சாட் விஜயசேகர ஆகியோர் திருகோணமலை மாவட்டத்தில் கண்ணிவெடி ஒன்றில் கொல்லப்பட்டனர். இவர்கள் தான் இதுவரை கொல்லப்பட்ட உயர் அதிகாரிகளாகவிருந்தார்கள்.

இராணுவத்தில் நான்காவது சிரேஷ்ட உயர் அதிகாரியான கொப்பேகடுவ(53), 1993இல் இராணுவத்தில் இரண்டாவது நிலைக்கு உயர்த்தப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. கமாண்டர் ஜயமகா(43) கடற்படையில் நான்காவது உயர் அதிகாரியாவார்.

இராணுவ அதிகாரிகளின் இந்த கொலைச் செய்தி, குறிப்பாக கொப்பேகடுவவின் செய்தி நாடு முழுவதையும் அதிர்ச்சியிலாழ்த்தியது. அரசு துக்க தினமாக பிரகடனஞ்செய்யவோ அல்லது அரச மரியாதை அளிக்கவோவிட்டாலும் நாடளாவிய துக்கம் அனுஷ்டிக்

(2ம் பக்கம் பார்க்க)



இலங்கையின் பிரபல கர்நாடக இசைக்கலைஞர் திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் இசைவிருந்தளிக்கிறார். இம்மாதம் முதலாந்தேதி நடைபெற்ற இக்கச்சேரியில் திருமதி ருத்ராணி பாலகிருஷ்ணன் வயலினும், திரு முத்து சிவராசா மிருதங்கமும், திரு கந்தையா சிதம்பரநாதன் மோர்சிங்கும், திரு அ.கணநாதன் கடமும் வாசித்தனர்.

# பூந்தமல்லி சிறையை தகர்க்க புலிகள் திட்டம்!

(சென்னை நிருபர்)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 26 கைதிகளும் அடைக்கப்பட்டிருக்கும் பூந்தமல்லி சிறைக்கூடத்தை தகர்க்கும் திட்டத்தோடு தீவிரவாத விடுதலைப்புலிகள் 15 பேர் கொண்ட குழுவொன்று பயங்கர ஆயுதங்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாட்டுக்குள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் உடனடியாகத் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு உள்துறைச் செயலாளருக்கு மத்திய அரசிடமிருந்து எச்சரிக்கை வந்திருக் கிறது. ராஜீவ் கொலைவழக்கை முறியடித்து கைதிகளை விடுவிக்க எடுத்துக் கொண்ட கடைசி நடவடிக்கை இதுவென்று புதுடில்லி வட்டாரத்தில் கருதப்படுகிறது.

பூந்தமல்லி சிறைச்சாலையில் வைத்தே கடந்த ஜூன் 3ம் தேதி

(2ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூந்தமல்லி.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி சித்தீக் முன்னிலையில் 26 குற்றவாளிகளும் ஆஜர் செய்யப் பட்டு பொதுமக்கள் பார்க்காத வகையில் மறைவாக பூர்வாங்க விசாரணை நடைபெற்றது. அடுத்த விசாரணை, அதுவும் மறைவாகவே இம்மாதப் பிற்பகுதியில் நடை பெறும். அதற்கிடையில் எல்லாக் குற்றவாளிகளுக்கும் சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரி கையைக் கொடுத்து வைக்க வேண் டும் என்றும் நீதிபதி உத்தரவிட் டிருக்கிறார்.

தமிழ்நாட்டினுள் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இன்னும் சாதாரணமாகவே இருக்கிறதென்றும் அவர்கள் தமது சகாக்களுடன் பகிரங்கமாகவே தொடர்புகள் வைத் திருக்கிறார்கள் என்றும் மத்திய அரசு வட்டாரங்களில் நம்பப்படு கிறது. ஆனால் தமிழ்நாடு பொலீஸ் வட்டாரங்களிலும், கரையோர பாதுகாப்புப் பொலீஸ் வட்டாரத் திலும், மற்றும் வட்டாரங்களிலும் தீவிரவாதப் புலிகளின் நடமாட்டம் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

# கொழும்பில் அரசியல்.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

இன வேறுபாடுகளுக்கப்பால் புளொட், ஈபிஆர்எல்எவ், ஈபிடிபி, ஈரோஸ், ரெலோ ஆகிய இயக்கங்களும் ஏனையவையும் டென்ஸில் இனவாதத்துக்கு அப்பாற்பட்டவர் என்று புகழாரம் சூட்டின.

அரசு விடுமுறையாக அறிவிக்கா விட்டாலும் கொழும்பிலும் மற்று மிடங்களிலும் கடைகள் பூட்டப் பட்டன. றொஸ்மீட் பிளேஸிலுள்ள கொப்பேகடுவவின் இல்லத்தில் சனிக்கிழமையிலிருந்தே பெருந்திர ளான மக்கள் கூடத் தொடங்கி னார்கள். 10ஆம் தேதி பிற்பகல் நடைபெற்ற அவரது இறுதி ஊர்வலத்தில் முன்னெரப்போதுமே கண்டிராதவிதத்தில் 5 லட்சத்துக்கு மதிகமானோர் கலந்து கொண்டார் கள்.

தங்களது தேசிய வீரர் உரிய முறையில் கௌரவிக்கப்படவில்லை என்று அரசுமீது ஆத்திரமுற்ற மக்கள் ஊர்வலம் முடிந்ததும் கற்கள் முதலியவற்றால் அமைச்சர்கள் மீதும் அரசு ஆதரவாளர்கள் மீதும் தாக்கி னார்கள். மாகாண சபைகளுக்கான அமைச்சரும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க, தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ.கே.ரணசிங்க மற்றும் பல அரசு ஆதரவாளர்கள் இதில் காயமுற்றனர். அரசு ஆதரவு பத்திரிகையாளர் ஒருவர் உட்பட பல பௌத்த குருமாரும் கூட இச்சம்பவத்தில் ஆத்திரமுற்ற பொதுமக்களால் தாக்கப்பட்டனர்.

3 பொலீஸ் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் பல அமைச்சு-அரசு வாகனங்கள் நொருக்கப்பட்டன. சனநெரிசலைக் கலைக்க பொலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தனர். கனத்தை மயானத்தின் இரும்புவேலி சாய்ந்ததில் 15பேர் காயமுற்றனர். இதுதவிர வேறு அசம்பாவிதம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

கொப்பேகடுவ, விமலரத்தின, ஜயமகா ஆகியோருக்கு முறையே லெப்டினன்ட் ஜெனரல், மேஜர் ஜெனரல், றியர் அட்மிரல் ஆகிய விருதுகள் அவர்களின் மரணத்தின் பின்னர் வழங்கப்பட்டன.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து!



பிரம்மஸ்ரீ வாகீஸ்வர சர்மா தம்பதிகளின் செல்வப்புதல்வன் வித்யாதரன் தனது முதலாவது பிறந்தநாளை 11.8.1992இல் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அன்பு அண்ணா கணேஷ்விதுஷன், சித்தப்பா, விசாகன் அண்ணா, மற்றும் உறவினர்கள், நண்பர்கள், சிறிலங்காவிலிருக்கும் தாத்தா, பாட்டி, அப்பம்மா, மாமாமார், சித்திமார், மாமிமார் அனைவரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

28, THE DRIVE
THORNTON HEATH

# மிருதங்கத்தில் அரங்கேறும் ஆங்கிலேயர்

(நமது நிருபர்)

லண்டனில் முதன்முதலாக ஆங்கி லேயர் ஒருவரின் மிருதங்க அரங் கேற்றம் நடைபெறுகிறது.

பிரபல மிருதங்க மேதை காரைக் குடி கிருஷ்ணமூர்த்தியின் சிஷ்யரான பீட்டர் லொகெற் இம்மாதம் 29ஆம் தேதி அரங்கேறுகிறார்.

றைஸ்லிப் பின்வே வின்ஸ்டன் சேர்ச்சில் மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இவ்வரங்கேற்றத்தில் இந்தியாவி லிருந்து வந்திருக்கும் இளம் வித்துவான் திரு வி.நாகராஜன் பாட்டுக்கு பீட்டர் மிருதங்கம் வாசிப்பார்.

நடன, லய, பாடலுக்கான இசை நிறுவனத்தின் ஆதரவில் இந்த அரங்கேற்றம் நடைபெறுகிறது.




**SHOP FOR SALE**

Groceries/Video Shop in Greenford, Periwale for sale (with Accom.) Taking £1500 pw Lease 9 Years Only £22000

Phone: (081) 997 4623


## பண்ணிசைக் கச்சேரி

(நமது நிருபர்)

கலாபவனம் நுண்கலை நிறுவனத்தின் சார்பில், லண்டன் வந்துள்ள கலைமாமணி முத்து கந்தசாமி தீக்ஷிதரின் பண்ணிசைக் கச்சேரி இம்மாதம் 23ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு குறொய்டன் சுப்பர் றோட் கீத் கிளாக் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது.

## குமாருக்கு 55வயது

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் காலஞ்சென்ற தமிழ்த்தலைவர் திரு ஜி.ஜி.பொன் னம்பலத்தின் புதல்வருமான திரு குமார்.பொன்னம்பலம் தமது 55ஆவது பிறந்த தினத்தை இம்மாதம் 12ஆம் தேதி கொண்டாடினார்.

## கொழும்பில் ரி.என்.கிருஷ்ணன்

(கொழும்பு நிருபர்)

இந்திய சுதந்திரத்தின வைபவங்களில் நிகழ்ச்சியளிப் பதற்காக இந்தியாவின் பிரபல வயலின் மேதை பேராசிரியர் ரி.என்.கிருஷ்ணன் அவரது குழுவின ருடன் இலங்கை வந்துள்ளார்.

இந்துசமய, கலாச்சார அமைச்சின் அழைப்பில் 14ந் தேதி வந்த திரு கிருஷ்ணன் 19ஆம் தேதி வரை தங்கியிருப்பார்.

## யாழ். பாடசாலைகளின் கிரிக்கட் போட்டி

(நமது நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவி லான இவ்வாண்டு கிரிக்கட் போட்டி இம்மாதம் 31ஆம் தேதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது.

கரோ வூட்கொக்ஹில் ஜோன் பிலம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் சிதம்பரா, ஹாட்லி, யாழ்ப்பா ணக்கல்லூரி, மத்தியகல்லூரி, யாழ் இந்து, கொக்குவில் இந்து, மகாஜனா, மானிப்பாய் இந்து, ஸ்கந்தவரோதயா, சென் ஜோன்ஸ், சென்.பற்றிக்ஸ், யூனியன் கல்லூரி ஆகியன பங்குபற்றுகின்றன.


**தமிழோசை**

**சந்தா படிவம்**

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.

(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ____________________

Address: ____________________

Postcode: ____________________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO

THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM


## பி.பி.சி.இல் செவ்வி



(நமது நிருபர்)

கடந்த சில நாள்களாக லண்ட னில் தங்கி ஆன்மீக பணிகளில் ஈடுபட்டிருக்கும் இலங்கை பருத் தித்துறை சாரதா சேவாசிரமத்தின் தலைவர் சுவாமி சித்ருபானந்தா பி.பி.சி.யின் தமிழோசை கலைய கத்தில் தமிழ்கூறும் நல்லுலகுக்கு செவ்வி ஒன்றை அளித்தார். தமிழோ சையின் தயாரிப்பாளர் திரு ஆர்.மகாதேவன் சுவாமி களைச் செவ்வி கண்டார்.


**London Tamil Academy**

We are pleased to announce that the University of Cambridge Local Examination Syndicate will conduct its examination in Tamil(Syllabus Y, Code 3206) on 26th November 1992 at our examination centre which is Sudbury Primary School, Perrin Road, Wembley Middx.

Private candidates, parents and voluntary Schools who wish to enter and participate in the examination may contact The Tamil Academy at the address below. Last date for receipt of applications by the Academy is 16th September 1992.

Regular classes in English Language and Mathematics on Saturdays from 9.30AM to 11.30AM at Sudbury Primary School. Next academic year commences Saturday 12th September 1992. **Fees for the first term is free for the first 100 students registering before 5th September.**

**Dr R Niththyananthan**
Director, London Tamil Academy,
c/o 179 Norval Road
North Wembley, Middlesex HA0 3SX
Tel: 081 904 3937




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சரம்

**03-08-92**

### கல்விப்பணிப்பாளர்

இலங்கையில் மாகாண அமைப்பு முறை அமுலிற்கு வந்து 4 ஆண்டுகளின் பின்னர் அதன் அடிப்படையில் அமைந்த வட-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு தியாகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

### படையினர் பலி

மட்டு.கரடியனாறு காட்டில் தேடுதலில் ஈடுபட்டிருந்த படைகள் மீது விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 15ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

**04-08-92**

### இராணுவத்தினர் பலி

வவுனியா பிரப்ப மடுவில் கடமை மாற்றத்திற்காக கால் நடையாக சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**05-08-92**

### அந்நியம்

இந்தியாவில் தங்கி உள்ளதால், தான் அரசியலில் இருந்து அந்நியப்படுவதாக முன்னாள் மாகாண சபை முதல்வர் திரு வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார்.

**06-08-92**

### அகதிகள்

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் இந்திய அரசு இணக்க அடிப்படையின் கீழ் 132, இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் இருந்து விமானமூலம் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### இளைஞர் கைது

கொழும்பு, நாரேன்பிட்டி, பாமன் கடைப் பகுதிகளில் அதிகாலை பொலீசார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 150 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை பகுதிகளில் 200 தமிழர்கள் வரையில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

**07-08-92**

யாழ் குடாவில் இருந்து மக்கள் வெளியேறும் தற்போதைய பிரதான பாதையான 'கிளாலி' ஆழ்கடல் பாதையில் கடற்படை பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் இப்பாதையும் முடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

**08-08-92**

### தடை

யாழ்ப்பாணம் செல்ல முயன்ற ஜப்பானிய பிக்கு ஒருவர் நொச்சி மோட்டையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு, கொழும்பு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

### தீக்கிரை

இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டு, வவுனியா தாண்டிக் குளம் அகதி முகாமில், தங்க வைக்கப்பட்டிருந்த சுமார் 200 தமிழ் அகதிகளின் கொட்டில்கள் மர்மமான முறையில் தீக்கிரையாகியுள்ளன. மர்மம் இதுவரை துலங்கவில்லை.

### திருப்பி அனுப்பப்படுவர்

இலங்கையின் வட-கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடைபெற்றாலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவுவதாலும் தமிழ் மக்களுக்கெதிராக அரசு பாரபட்சம் காட்டாததாலும்- சுவிற்சர்லாந்தில் தஞ்சம் கோரியுள்ள 30 ஆயிரம் இலங்கை அகதிகளும் படிப்படியாக திருப்பி அனுப்பப்படுவர் என, இலங்கையில் உள்ள சுவீஸ் நாட்டுத்தூதுவர் திரு அன்ட்ரே வி.கிரேப்பின்றீட் தெரிவித்துள்ளார். திருப்பி அனுப்பப்படும் போது சுவீஸ் அரசு தீர்மானிக்கும் ஒரு தொகை பணமும் நட்ட ஈடாக வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**09-08-92**

### கோஷ்டி தாக்குதல்

புனானை மைலந்தனை தமிழ் கிராமம் அதிகாலை வேளையில், இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டு 31 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். 10 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**11-08-92**

மட்டக்களப்பு-கரடியனாறு மோதல் ஒன்றின் எதிரொலியாக, அப்பகுதியில் வயலில் வேளாண்மை செய்து கொண்டிருந்த 26 தமிழர்களை பாதுகாப்புப் படைகள் கொண்டு சென்றுள்ளன.

இவர்களில் 6 பேர் துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட, மேலும் இருவர் தப்பி ஓடியுள்ளனர். மிகுதி 18 பேர் பற்றிய தகவல் இதுவரை தெரிய வரவில்லை.

### தலைமை அதிகாரி

மேஜர்ஜெனரல் பாலரட்ணராஜா இலங்கை இராணுவ தலைமை அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

80ஆயிரம் பேர் கொண்ட இராணுவப்படைத் தளபதிக்கு அடுத்த பதவியான இப்பதவியில் இருந்த மேஜர் ஜெனரல் ஸ்டான்லி.டி.சில்வா ஓய்வு பெற்றுள்ளார்.

### அழைத்துச் செல்லப்பட்டனர்

இந்திய தனுஷ்கோடி-கச்சதீவு இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்த 20 இந்திய மீனவர்கள்-இலங்கை கடற்படையால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

### புதிய கப்பல் சேவை

திருகோணமலைக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் புதிய பயணிகள் கப்பல் சேவை இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கிறது. சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கப்பல் இதற்கென தயார்படுத்தப்படுகிறது.

## புதிய கடவுச் சீட்டுகள்

இலங்கையில்- கம்பியூட்டர் முறையில் அச்சிடப்படும் புதிய கடவுச்சீட்டு (Passport) இம்மாதம் 3ஆம் தேதி முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நாள் ஒன்றிற்கு 1,200 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்க ஏற்பாடாகியுள்ள இப்புதிய முறையின் கீழ்- வெளிநாடுகளில் கடவுச்சீட்டு விநியோகம் 3ம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இலங்கை தூதராலயங்களில் விண்ணப்பிக்கப்படும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் யாவும் இராஜ தந்திர தபால் பொதிகளில் கொழும்பு அனுப்பப்பட்டு அங்கிருந்து விநியோகிக்கப்படும்.

லண்டனில் மிகவும் பாதுகாப்பான அச்சகம் ஒன்றில் இப்புதிய கடவுச்சீட்டுக்கள் அச்சிடப்படுகின்றன. இலங்கை கடவுச்சீட்டு என்றதுமே, வெளிநாடுகளில், பிரயாண நிலைய அதிகாரிகளின் சந்தேகக் கண்கள் அகல விரிவது இனிகுறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜெயலலிதாவின் தூதுவர் பாரிஸில் புலிகளுடன் பேச்சு

(சென்னை நிருபர்)

ஜெயலலிதாவின் இரகசிய தூதுவர்கள் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளைச் சந்தித்திருக்கிறார்கள். ஜெயலலிதா புலிகளால் தாக்கப்படாமலிருக்க பேச்சுவார்த்தை மூலம் ஏற்பாடு நடந்திருக்கிறது. அதனால் இப்போது தஞ்சாவூர் கடற்கரை வழியாக யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் மருந்துகளும் டீசலும் போக ஆரம்பித்திருக்கின்றன என்று அரசு அதிகாரிகள் என்னிடம் கூறியிருக்கிறார்கள்"- இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

"விடுதலைப்புலிகள் மீது நடவடிக்கை எடுக்காததற்காக ஜெயலலிதா மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப் போகிறேன். கருணாநிதியும் ஜெயலலிதாவும் இல்லாத மூன்றாவது அணியொன்றை உருவாக்குவதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். இதில் நான் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன்"- இவ்வாறு அவர் அந்தப்பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# கலகக்காரரை கலைக்க பொலிசார் கண்ணீர்ப் புகை

(கொழும்பு நிருபர்)

கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பிரிவு இராணுவ கமாண்டர்மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தினவின் இறுதி மரியாதையில் கலந்து கொண்டு கலகம் விளைவித்தவர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர்.

பொரளை கனத்தை மயானத்தில் 12ஆம் தேதி நடைபெற்ற இந்த இறுதி வைபவத்தில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டார்கள். அமைச்சர்கள், அரசாங்க ஆதரவாளர்கள் ஆகியோர்மீது இவர்கள் கற்கள் மற்றும் பொருள்களை வீசினர். வீடமைப்பு நிர்மாண அமைச்சரும் ஐ.தே.க. பொதுச் செயலாளருமான திரு சிறிசேன கூரே தாக்கப்பட்டார். பொலிசார் ஆகாயத்தில் சுட்டபடி சனக்கூட்டத்திலிருந்து அவரைக் காப்பாற்றிச் சென்றனர். அங்கு காணப்பட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் அவரது ஆதரவாளர்களும் எவ்வித தாக்குதலுக்குமுள்ளாகவில்லை. சிலர் அவரைக்கண்டு ஆரவாரித்தார்கள். இதே நிலையே அவர் 10ம் தேதி கொப்பேகடுவவின் இறுதியாத்திரைக்கு வந்தபோதும் காணப்பட்டது.

# இராணுவ அதிகாரிகள் கொலை விசாரணை கமிஷன் நியமனம்

(கொழும்பு நிருபர்)

அராலியடியில் 10 இராணுவ அதிகாரிகளினதும் கொலைபற்றி விசாரிக்க, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு ஐ.எம்.இஸ்மாயில் தலைமையில் தனிநபர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவினால் 11ம் தேதி நியமிக்கப்பட்ட இக்குழு, ஏனையவிடயங்களோடு, பாதுகாப்புப்படையினரின் நடவடிக்கைகளிலும் ஏதாவது தவறுதல்கள் இருந்தனவா என்பது குறித்தும் விசாரிக்கவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் மரணச்சடங்கில் கனத்தையில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்தும் பொலிசார் முழு அளவிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அங்கு இடம்பெற்ற வன்செயல்கள் யாவும் அரச விரோத சத்திகளால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாக அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## செலாவணி கட்டுப்பாட்டில் தளர்வு

இலங்கை அரசின் தொடர்சியான பொருளாதார தாராளமயமாக்கல் கொள்ளகைக்கு இணங்க இலங்கை மத்திய வங்கி வெளிநாடு களுக்கு பயணம் மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கான செலாவணிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தியுள்ளது. வெளிநாடுகளுக்கு விடுமுறைக்காக செல்லும் இலங்கையர்கள் எடுத்துச் செல்லும் பணத்தின் தொகையை அதிகரிக்க அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 800 அமெரிக்க டாலர்களும் (சிறுவர்-400) ஏனைய நாடுகளுக்கு 7,500 டாலர்களும் (சிறுவர்-3750) வருடமொன்றுக்கு எடுத்துச் செல்லலாம்.

# புலிகளுக்கு ஆஜராக ஜெத்மலானி மறுப்பு

(கொழும்பு நிருபர்)

இந்தியாவின் பிரபல அரசியலமைப்பு, குற்றவியல் வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி, விடுதலைப் புலிகள் ஒரு சட்டவிரோத அமைப்பு என்று பிரகடனப்படுத்துவதற்கு போதிய ஆதாரங்கள் இருகின்றனவா என்று ஆராயவிருக்கும் புது டில்லி சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) விசாரணை மன்றத்தில் புலிகளின் நலனைக் கவனிப்பதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டார்.

புலிகளுடன் தொடர்புடையதான அமெரிக்காவைச் சேர்ந்த உலக விவகார நிறுவனத்தின் கோரிக்கை தொடர்பாகவே அவர் இந்த மறுப்பைத் தெரிவித்தார். இந்திரா காந்தி கொலையில் குற்றஞ்சுமத் தப்பட்ட சீக்கியருக்காக ஆஜரானார் என்பதனாலேயே இவரை இவர்கள் அனுகியதாக தெரிகிறது. புலிகள் இயக்கத்தை ஏன் தடைசெய்யக்கூடாது என்பதற்கான காரணங்களை எழுத்து மூலம் தெரிவிக்குமாறு மேற்படி விசாரணை மன்றம் ஜூலை முதலாம் தேதி விடுத்த அறிவிப்பை தாம் எதிர்வாதிடப்போவதாக அமெரிக்கா, பிரிட்டனிலுள்ள புலிகளுடன் தொடர்பான வட்டாரங்கள் விசாரணை மன்றுக்கு தெரிவித்திருந்தன.

நீதிமன்ற அறிவிப்புகள் யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் தலைமை அலுவலகத்துக்கும், அதன் லண்டன் அலுவலகத்துக்கும் லண்டனிலுள்ள புலிகள் இயக்க உத்தியோகத்தர் திரு கே.ஆர்.சேகருக்கும் வழங்கப்பட்டன. நீதிமன்ற அறிவிப்பின்படி இந்தியாவிலுள்ள ஒரு வழக்கறிஞரே இதன்மீது வாதிட முடியும்.

## காலமானார்

(கொழும்பு)

'ஆத்மஜோதி' சஞ்சிகையின் கௌரவ ஆசிரியரும் அதன் சர்வதேச பதிப்பின் நிர்வாக ஆசிரியருமான திரு இராமச்சந்திரனின் மனைவியார் திருமதி சின்னத்தங்கம் இராமச்சந்திரா ஆகஸ்ட் 9ஆம் தேதி கொழும்பில் காலமானார்.

பாரிஸ் இன்டர்போலைச் சேர்ந்த இலங்கையின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு ஆர்.சுந்தரலிங்கம், உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த பிரபல கண் மருத்துவ நிபுணர் டாக்டர் ஆர்.பரராஜசிங்கம் ஆகியோரின் தாயார் இவர். இறுதிக்கிரியைகள் 15ஆம் தேதி கொழும்பில் நடைபெறும்.

## பத்திரிகையாளர் காலமானார்

(கொழும்பு நிருபர்)

இலங்கையின் பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவரான திரு எஸ்.ஜீவன்.புஷ்பரத்தினம் இம்மாதம் 11ஆம் தேதி மாரடைப்பால் கொழும்பில் காலமானார்.

57 வயதான திரு புஷ்பரத்தினம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமான அநுபவம் வாய்ந்த பத்திரிகையாளர் ஆவார். ஏரிக்கரை நிறுவனத்தில் பணியாற்றிய அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்தி அறிவிப்பாளராகவும் தயாரிப்பாளராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்

# இவ்வார அரசியல் களகண்ணோட்டம்

எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் மக்களுக்காகத்தான் காவல்படையே தவிர காவல்படைக்காக மக்கள் இல்லை.காவல்படையைத் திருப் திப்படுத்த அரசாங்கம் நடத்தப் படுவதுமில்லை. இந்தப்பொது விதிமுறையை மீறிய 'கோர்ணல்கள்' மேஜர் ஜெனரல்கள் சிலரைச்சில காலம் ஏமாற்றிக்கொண்டு 'ஆட்சி' நடத்தலாம். ஆனால் காலப் போக்கில் அவர்கள் 'மண்கவ்வி' த்தான் தீரவேண்டும் என்று வரலாறு சான்று பகன்றிருக்கிறது. உதாரணத்திற்கு:

ஆபிரிக்கக்கண்டத்தின் பல்வேறு குடியரசுகளில் வருடத்திற்கு ஒரு தடவை அல்ல (வாரத்திற்கு ஒரு தடவை!) நடக்கும் அதிரடிப் புரட்சிகள் கோர்ணல்கள் நடத்தும் "கூ"! இறுதியில் அது கூழ் முட்டையாகிப் போகும் பரிதாபம்! உலகின் மிக இளைய தலைவர் என்று விபரிக்கப்பட்டுக் கொண்டு- சியரா லியோனில் மூன்று மாதங் களுக்கு முன் அதிரடிப்புரட்சியில் ஆட்சியைக் கைப்பற்றினார் 27 வயதான கப்டன் வலன்டைன்! அவரது 'ஆட்சி' எத்தனை நாட் களுக்கு என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

ஆன்மீக அமைதி ஒரு புறமும் அரை நிர்வாண விலைமகளிர் மறுபுறமும் பரவி வியாபித்துள்ளது தாய்லாந்து நாடு. முடியாட்சி நடக்கும் இந்த நாட்டில் மன்னரை யும் மகாராணியையும் சாஷ்டாங்க மாக விழுந்து நமஸ்கரிக்கிறார்கள் மக்கள். மன்னர் முன் முழங்காலிட்டு நின்றுதான் யாரும் பேசுவார்கள் (புண்ணிய பூமியாம் பாரதத்தில் தோன்றி இன்று நம்மிடையேவாழும் பெரியார்கள், யோகிகள், மகான் கள்- "-வெறும் மனிதர்கள் தானே! அவர்களை ஏன் நாம் விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்? சேச்சே! மனிதர்களை மனிதர்கள் காலில் விழுந்து வணங்குவதா?" என்று குரல் எழுப்பும் "சீர்திருத்த வாதிகள்" தாய்லாந்தை சற்று கவனிக்க வேண்டும்.)

தாய்லாந்தில் சில மாதங்களுக்கு முன், ராணுவம் கட்டவிழ்த் துக்கொண்டு ஓடியது. மக்களை மாக்களாக நடத்தி சுட்டுப்பொசுக் கியது. அரசியலில் வழக்கமாக தலையிடாத மன்னர் தலையிட்டார். ராணுவத்தலைவரையும் மக்கள் கிளர்ச்சித்தலைவரையும் வரவ ழைத்தார். மன்னர் ஆசனத்தில் அமர்ந்திருக்க இந்த இருவரும் அவ ரது காலடியில் முழந்தாளில் நின் றார்கள். (குற்றச் செய்த மாணவர்கள் வாத்தியார் முன் நிற்பதைப்போல!) மன்னர் தற்காலிக ஆட்சி ஒன்றை அறிவித்தார். புதிய பிரதமர் ஒருவரை நியமித்தார். கலவரங்கள் ஓய்ந்தன!

இவ்வாரம் புதிய பிரதமர் விடுத்துள்ள அறிவித்தலின்படி, தாய்லாந்து ராணுவத்தின் உயர் தளபதிகள் பலர் பதவி இறக்கப் பட்டு 'சில்லறைப் பதவிகளுக்கு' தொலைதூர இடங்களுக்கு அகற்றப் பட்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் பிரதமர் சுல்பி கார் அலி பூட்டோவினால் தளபதி யாக நியமிக்கப்பட்ட ஜெனரல் ஜியா, பிரதமர் பூட்டோவை பதவி யிலிருந்து கவிழ்த்து பின் தூக்கு மேடையில் தொங்கவிட்டு புதல்வி பெனாசிர் அவர்களை நாடு கடத்தியது தெரிந்த செய்தி. கேலிக் குரிய ராணுவ ஆட்சியை நடத்திய ஜெனரல் ஜியா விமான விபத்தில் எப்படி இறந்தார் என்பது இன்று வரை மர்மம் தான்! ஜியாவின் மரணத்தைத் தொடர்ந்து பெனாசிர் அம்மையார் ஆட்சிபீடம் ஏறியதும் பின்னர் தேர்தலில் தேர்ந்தெடுக் கப்பட்டு இப்போது திரு நவாஸ் ஷெரிப் பிரதமராக ஆட்சி நடத்து வதும் ஜனநாயகத்திற்கு நல்ல செய்திகள்.

ஜனநாயகத்தின் தாய்நாடு எனப்படும் பிரிட்டனில் மக்க

## கட்டுக்கடங்காத கா~~வல்~~டை துருப்புகள்

ளாட்சியை ராணுவம் கவிழ்த்து விட்டு ராணுவ ஆட்சியை நிறுவுவது அடுத்த நூறு இருநூறு ஆண்டுக ளுக்கு சிந்தித்ததும் பார்க்க முடியாத ஒரு விஷயம். முடியாட்சியை, தமது நாடாளுமன்றத்தை, தமது சுதந்திரத்தை உயிரினும் மேலாக மதிப்பவர்கள் பிரிட்டிஷ் மக்கள்.

பிரிட்டனைப்பற்றி அதிகம் சொல்வானேன்? உலகின் "மிகப் பெரிய ஜனநாயக நாடு!" என்று பிரிட்டிஷ் மக்களால் ஏற்றுக்கொள் ளப்பட்ட ஒருநாடு, பிரிட்டிஷ் பத்திரிகை வானொலி ரெலிவிஷன் நிறுவனங்கள் அடிக்கடி பாராட்டிக் கௌரவிக்கும் ஒரு நாடு 'பாரதம்'! இந்தியாவில் கூட துருப்புகள் கட்டுக்கடங்காமல் ஓடி அரசியல் வாதிகளை சிறையில் தள்ளிவிட்டு ராணுவ ஜெனரல்களின் ராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படல் இந்தத்தலை முறையில் நடக்கவே நடக்காத ஒரு விஷயம்.

இலங்கையில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் ராணுவ, போலீஸ் மற்றும் விமானப்படை அதிகாரிகள் பலர் ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு ராணுவ ஆட் சியை ஏற்படுத்த 'சதி' செய்ததும், உரிய காலத்தில் 'சதி' அம்பலமாகி அத்தனை பெரும் தளபதிகளும் ஜெனரல்களும் கைது செய்யப்பட்டு விசேஷமாகக் கூட்டப்பட்ட ஒரு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட தும் இன்றைய இலங்கையின் இளம் தலைமுறையினர் பலர் அறிந்திராத செய்தி.

முன்னாள் யூகோஸ்லாவிய நாட் டில் பொஸ்னியாவுக்கும் சேர்பியா வுக்கும் இடையில் நடக்கும் சண்டையில் கூட நடப்பது கட்டுக் கடங்காத காவல் துருப்புகள்- காடைத்துருப்புகள் செய்யும் அட்டகாசங்கள்தான். ஆங்கில அகராதியில் இல்லாத வார்த்தை ஒன்று அடிக்கடி அடிபடுகிறது! IRREGULARS- 'ராணுவவீரர் அல்லாதோர்!' என்று இவர்களை விபரித்திருக்கிறது சேர்பிய அரசு! அதாவது பொஸ்னியாவில் பொஸ்னிய முஸ்லீம் மக்களை சித்திரவதை செய்வோர்- அவர் களின் உடமைகளை பறிப்போர்- வீட்டையும் நாட்டையும் அபகரித் துக்கொண்டு அவர்களை அகதி களாக முகாம்களுக்கு அனுப்பு வோர்- சேர்பிய ராணுவத்தினர் அல்லர்-சேர்பிய 'IRREGULARS' என்று நொண்டிச்சாக்கு சொல்லி தப்ப முற்படுகிறது - ஈவிரக்கமற்ற சேர்பிய ஆட்சி.

உண்மையில் இந்த அட்டகாசங் கள் புரிவோர், கனரக பீரங்கிகளை வைத்து குழந்தைகளை சுடுவோர்- ஒரு குழந்தையின் மயான ஊர்வ லத்தில் குண்டு வைப்போர்- எல்லாமே சேர்பியாவின் கட்டுக் கடங்காத காடைத்துருப்புகள் தான். சுமார் 6 வாரங்களுக்கு முன் இதே கட்டுரையில் நான் பொஸ்னியா வைப்பற்றி எழுது கையில் "அரக்கர் களிடமிருந்து சீதையை மீட்க வானரப்படை வந்தது போல- சேர்பிய அரக்கர்களிடமிருந்து தம்மை காப்பாற்ற மேற்குலகின் வானூர்திப்படை வரவே வராதா என்று பொஸ்னியாவின் அப்பாவிப் பெண்களும் குழந்தைகளும் கண் களை மறைக்கும் கண்ணீர்த்திரை ஊடாக வானத்தை அடிக்கடி அண்ணாந்து பார்க்கிறார்கள்!..." என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த அப்பாவி பொஸ்னியர்களின் விருப்பம் விரைவில் ஈடேறும் அறிகுறிகள் இப்போது தென்படு கின்றன.




கப்டன் வலன்டைன்

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் 1945 வாக்கில் காணப் பட்ட சித்திரவதை முகாம்களைவிட கொடூரமான முகாம்கள் பொஸ்னி யாவின் வடபகுதியில் சேர்பிய அரக்கர்களால் நடத்தப்படுவதாக திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தி

## தாச்சர் பிரதமராக இருந்தால் சேர்பியாவின் கதை வேறாகவிருக்கும்

ருக்கின்றன. குழந்தைக்கு பாலூட் டும்போது சுட்டுக்கொல்லப் பட்ட தாய்; மலசலகூடத்தில் வைத்து அடித்து உதைக்கப்பட்ட வயிற் றோட்ட நோயாளி; எலும்பும் தோலுமாய் காட்சியளிக்கும் முகாம் அகதிகள். ("இந்த நோஞ்சான் அகதிகள்- முஸ்லீம்கள்! இவர்கள் பன்றி இறைச்சி சாப்பிடுவதில்லை; உங்களுக்குத் தெரியாதா? அதுவும் இது நோன்பு மாதமாக்கும்!"- என்று கேலி செய்யும் சேர்பிய காவலர்கள்)



பொஸ்னிய அகதிகள் ரயில்களில் வெளியேற்றம்

இந்தச் செய்திகளை அறிந்து அமெரிக்க பிரிட்டிஷ் பிரெஞ் ஜேர்மன் மக்கள் கொதிக்கிறார்கள். பத்திரிகைகள் ரெலிவிஷன் ஆகியன கொந்தளிக்கின்றன. ஆனால் அரசி யல் தலைவர்கள் இன்னும் சிந்திக் கிறார்கள். விமானப் படையை, ஹெலிகொப்டர்களை அனுப்ப லாமா என்று சிந்திக்கிறார் அமெ ரிக்க அதிபர் புஷ்.

"சற்றுப் பொறுங்கள்! பத்திரிகையாளர்கள் சொல்வது எழுதுவது எல்லாவற்றையும் நாம் நம்பவேண்டுமா என்ன?... நெருக்கடி சற்று ஓயட்டும். அதற்குப்பின் மனிதாபிமான உதவியை தரை மார்க்கமாக அனுப்புவோம்" என்று பிரிட்டன் சொல்கிறது. பிரான்சும் பிரிட்டனுக்கு ஒத்துப்பாடுகிறது.

பிரிட்டனின் முன்னாள் 'இரும் புத்தலைவி'- சிம்மக்குரல் சீமாட்டி தாச்சர் அம்மையார் மட்டும் "அனுப்புங்கள் படைகளை இப்

(5ம் பக்கம் பார்க்க)

**விமல் சொக்கநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலக அரங்கில்
## இவ்வார அரசியல் கண்ணோட்டம்

(4ம் பக்க தொடர்ச்சி)

போதே! இனியும் பிரிட்டன் தாமதித்தால் மரியாதையீனம் மட்டுமல்ல, பெரும்பணச் சேதமும் கூட. அகதிப்பிரச்சனை, பயங்கரவாதப் பிரச்சனை இதர நாடுகளுக்குள் கசியும் ஆபத்து மட்டுமல்ல இந்த தகராற்றில் வேறு நாடுகளும் சேரக்கூடிய பேரபாயமும் இருக்கிறது!..." என்று எச்சரித்தார்.

1981ம் ஆண்டில்- எங்கோ தொலைதூரத்தில் பிரிட்டனின் இறைமைக்கு உட்பட்டிருந்த சின்னஞ்சிறு பாக்லந்து தீவின் மீது- அயல்நாட்டு ஆர்ஜென்டீனாவின் 'அற்பத்தலைவன்' ஒருவன் (ராணுவ ஜெனரல்!) உரிமை பாராட்டிவிட்டான் என்பதற்காக அவனுடன் போர் தொடுத்து பிரிட்டனின் வல்லமைமிக்க கப்பல் படையை, விமானந் தாங்கிக் கப்பல்களை, (இளவரசர் ஆண்ரூ சகிதம்) போர்முரசு கொட்டி அனுப்பி வைத்த பிரதமரல்லவா அவர்? இன்று அவர் இங்கிலாந்தின் பிரதமராக இருந்திருந்தால் சேர்பியாவில் நடந்திருப்பதே வேறு!

இன்று உலகநாடுகளிலேயே பிரிட்டன் மட்டும்தான் ஐ.நா.பாதுகாப்புக்கழகத்தின் உறுப்புரிமை நாடாக இருக்கிறது- ன்ர்ட்டே வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனத்தின் உறுப்புரிமை நாடாக இருக்கிறது. ஐரோப்பிய குடும்பத்தின் உறுப்புரிமை நாடாக மட்டுமல்ல அதன் இவ்வாண்டுத் தலைவராகவும் இருக்கிறது. மேற்கு ஐரோப்பிய வட்டாரத்திலேயே மிகப் பெரிய ராணுவம்- மிகுந்த அனுபவ முதிர்ச்சி பெற்ற ராணுவம்- பிரிட்டிஷ் ராணுவம்! ஆனாலும் பிரிட்டன் தயங்குகிறது.

சேர்பிய அரக்கத்தலைவன் இரத்த வெறி கொண்ட சுலோபடான் மிலோ சேவிக்கும் அவனது பயங்கரவாத அடியாள் கும்பலின் தலைவர் 'டாக்டர்' கரடிக்கும் பொஸ்னியாவை சேர்பியாவின் ஒரு பகுதியாக இணைத்து வருகிறார்கள். 'இனச்சுத்திகரிப்பு' செய்வதாக கூறி முஸ்லிம்களை நாட்டைவிட்டு அடித்து விரட்டி விடுகிறார்கள்.

இந்த சித்திரவதையைத் தடுக்க- சேர்பியர்கள் மீது- அவர்களின் ஆயுதங்கள் மீது குண்டுத்தாக்குதலை மேற்கு நாடுகள் நடத்த வேண்டும். பொஸ்னிய மக்களுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டும். பொஸ்னியத் தலைநகர் சறயேவோவை பாதுகாக்கும் 60ஆயிரம் மக்களிடம் 20 ஆயிரம் துப்பாக்கிகள் மட்டுமே இருக்கின்றன.

உலகின் வறிய மக்களுக்கு மட்டுமல்ல- பலஹீனமான மக்களுக்கு- துன்புறுத்தப்படும் மக்களுக்கு- எப்போதுமே நேசக்கரம் நீட்டி அரவணைக்கும் கருணையுள்ள நாடு பிரிட்டன். இனியும் பொறுக்கக் கூடாது என்று இப்போது கூக்குரல்கள் பல நாடெங்கிலும் எழுப்பப் பட்டு வருகின்றன. இதற்கிடையே பொஸ்னிய முஸ்லிம்கள் மீதான இந்த அநீதிகள் பற்றி தட்டிக்கேட்க எந்த முஸ்லிம் நாடும் இதுவரை முன் வரவில்லை. (அவரவருக்கு தலை நிறைய அவரவர் பிரச்சனை!) ஆனால் சில தினங்களுக்கு முன் ஈரானும் பாகிஸ்தானும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இந்த கொடுமைகளை எதிர்த்து குரல் எழுப்பியுள்ளன.

# தென்னாபிரிக்காவில் நிகழும் மாமியார் நாத்தனார் ரகளை

"ஆட்சி நடத்துவது பற்றி காட்டு மிராண்டிகளுக்கு- கறுப்பர்களுக்கு என்ன தெரியும்?..."

இப்படிச் சொன்னவர் இன்னாளில் சிம்பாப்வே என்று பெயரிடப்பட்டுள்ள முன்னாள் றொடீசியாவின் தலைவர் வெள்ளை இன தீவிரவாதி இயன் சிமித்.

"அடுத்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு றொடீசியாவில் கறுப்பர்கள் ஆட்சி ஏற்படுவதை என்னால் சிந்தித்தும் பார்க்க முடியாது!..." என்று எக்காளமிட்டவர் பிரதமர் இயன்சிமித். கறுப்பர்களை பெரும்பான்மையாகக் கொண்ட றொடீசியா நாட்டில் ஆட்சி நடத்தும் 'உரிமை' சிறுபான்மை வெள்ளையர்களுக்கு மட்டுமே இருக்கிறது என்று கூறியவர் இயன்சிமித். தமது நாட்டில் தலையிடபிரிட்டனுக்கு உரிமை இல்லை என்று கூறி ஒரு தலைப் பட்சமாக- பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தை பிரகடனம் செய்தவர் இயன்சிமித். இப்படியெல்லாம் அவரைச்சொல்ல வைத்தது அந்த நாட்டின் நிலத்தின் கீழிருந்த நில வளம்! செம்புச் சுரங்கங்கள்! அந்த நாட்டின் வித்துக்களான கறுப்பு இன மக்களிடமிருந்து வாக்குரிமையைப்பறித்தெடுத்து ஆட்சி நடத்தி வந்தார்- ஒல்லாந்து நாட்டின் வந்தேறு குடிப்பரம்பரையைச் சேர்ந்த சிமித்!

1975ம் ஆண்டு வாக்கில் இலண்டனில் சோம்ஸ் (SOAMES) பிரபு தலைமையில் லங்கஸ்டர் கேட் (LANCASTER GATE) மகாநாடு கூட்டப்பட்டது. பயங்கரவாதிகள் என்று சிமித்தினால் பிரகடனம் செய்யப்பட்ட கறுப்பு இனத்தலைவர்கள் முகாபே, ஜோசுவா, எங்கோமோ (NKOMO), சித்தோலி(SITOLI) போன்றோருடன் அமர்ந்து பேசும்படி பிரிட்டனால் நிர்ப்பந்திக்கப்பட்டார்

றொடீசியப் பிரதமர் சிமித்! பேசினார். தேர்தல் நடந்தது. அனைவர்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. தேர்தலில் முகாபே வெற்றிபெற்றார் கூட்டாட்சி அமைத்தார். றொடீசியா என்று பெயரை ஸிம்பாப்வே என்று மாற்றினார். மக்களாட்சியின் ஜனநாயகத் தலைவராக விளங்குகிறார் கறுப்பு இனப்பிரதமர் முகாபே. 'இரண்டாயிரம் ஆண்டுகள்!" என்ற இயன் சிமித் கூறியதீர்க்க தரிசனம் பொய்த்தது! இரண்டே இரண்டு ஆண்டுகளில் றொடீசியாவில் கறுப்பு இன ஆட்சி மலர்ந்தது. பதினைந்து இருபது வருடங்களுக்கு முந்திய இந்த 'வரலாறு' எல்லாம் "இவ்வார" அரசியல் கண்ணோட்டத்தில் எதற்கு?- என்று நீங்கள் கேட்கலாம். காரணம் இருக்கவே இருக்கிறது. ஆபிரிக்க கண்டம் முழுவதுமே பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு காலனித்துவஆட்சிகள் மறைந்து உள்ளூர் கறுப்பு இன ஆட்சிகள் ஏற்பட்டாலும் இரண்டே இரண்டு நாடுகள் மட்டும் விதிவிலக்காகின்றன. ஒன்று றொடீசியா மற்றது தென்ஆபிரிக்கா!

றொடீசியாவில் நடந்த சிறுபான்மை வெள்ளை இன ஆட்சி ஒரு அடக்குமுறை ஆட்சி. இனத்துவேஷ ஆட்சி தென் ஆபிரிக்க நாட்டில் பல வருடங்களாக நடந்து வருகிறது. அந்த நாட்டில் பிறந்த கறுப்பு இனமக்கள் வெள்ளை இனத்தவர்களோடு ஒன்றாக உட்கார முடியாது, சாப்பிட முடியாது, நீந்த முடியாது, பயணஞ்செய்ய முடியாது. கறுப்பர் எல்லோருக்கும் தனியான 'மூன்றாந்தர' உணவு விடுதிகள், ரயில் வண்டிகள் இப்படி! இந்த நிலையை எதிர்த்து அண்ணல் மகாத்மா காந்திஜி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அவருக்கு என்ன நடந்தது என்பதை புத்தகங்களில் படித்தோம். ஆனால் ரிச்சர்ட் அட்டன்பரோவின் "காந்தி" திரைப்படத்தில் வெள்ளையரின் ரயில் பெட்டியிலிருந்து காந்திஜி தூக்கி எறியப்பட்ட காட்சியை கண்டு திடுக்கிட்டோம்.

காந்திஜிக்கு பிறகு வந்த பல தலைவர்கள்- கறுப்பு இனத்தவர்கள் தொடர்ந்து குரல் எழுப்பினார்கள். சிறையில் தள்ளப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் 'பயங்கரவாதி' என்று பெயர் சூட்டப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகளாக சிறையில் வதைக்கப்பட்ட தற்போதைய கறுப்பு இனத்தலைவர் நெல்சன் மண்டேலா. தன் இளமை, தன் வாலிபம் அனைத்தையுமே தென் ஆபிரிக்கச் சிறையில் வீணாக செலவிட்டார் மண்டேலா. தென் ஆபிரிக்க வெள்ளை இன ஆட்சியின் கெடுபிடிக்கு காரணம் சாதாரண நிலவளமல்ல. மண்ணாசை அல்ல செம்பாசை அல்ல பொன்னாசை ஐயா! பொன்னாசை!

தென் ஆபிரிக்கா- பொன் விளையும் பூமி! தென் ஆபிரிக்காவின் சுரங்கங்களில் தங்கம் விளைகிறது! பிரிட்டிஷ் சவரின் தங்க நாணயத்தைப்போல தென்னாபிரிக்க- குறூகர் றான்ட்கள் பெறுமதி மிக்கவை.

எனவே இந்த தங்கச்சுரங்கங்களை 'காட்டு மிராண்டி கறுப்பு இனத் தவர்களுக்கு' விட்டுக் கொடுக்க வெள்ளை இன (வந்தேறு குடிகளுக்கு) மனசு வருமா என்ன? போராட்டம் தொடர்கிறது.

முன்னைய கெடுபிடி ஆட்சியாளர்கள் போத்தா போன்றவர்களை விட தற்போதைய அதிபர் டி கிளேக் ஒரு பக்குவவாதி- மென்போக்குவாதி. மண்டேலாவை கடும் சிறைக்கோட்டத்திலிருந்து விடுவித்து தம்முடன் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்து உலக நாடுகளின் பாராட்டைப் பெற்றவர் டிகிளேக். அப்பாதீட்டு (APARTHEID) அதாவது "உன் அப்பா- தீட்டு!" என்று குறை சொல்லி கறுப்பர்களை தென் ஆபிரிக்கா தள்ளி வைத்ததால், உலக நாடுகள்- தென் ஆபிரிக்காவை உலக நாடுகள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்தன- தள்ளி வைத்தன.

இப்போது மண்டேலாவுக்கும் அதிபர் டி கிளேக்குக்கும் இடையில் நடக்கும் சமரசப் பேச்சுவார்த்தைகள் 'காதலர்களுக்கிடையில் கூடல் சில நாள், ஊடல் பலநாள்'- என்ற போக்கில் பிரிவதும்- கூடுவதும் பின்முறிவதுமாக நடைபெற்று வருகின்றன.

இளசுகளுக்கிடையில் நடக்கும் கொஞ்சலை சகித்துக்கொள்ள சக்தியற்ற மாமியார்- நாத்தனார் போன்றோர்- வீட்டில் ரகளை ஏற்படுத்தி இளசுகளைக் குழப்புவது போன்ற சம்பவங்களும் தென்னாபிரிக்காவில் நடக்கின்றன.

மாமியார்: தென்னாபிரிக்க காவல்படை(கட்டவிழ்த்த காடைப் படை)

நாத்தனார்: தென்னாபிரிக்க தீவிர

## கூடல் சிலநாள் ஊடல் பலநாள்

வலதுசாரி வெள்ளைஇன நிறத்துவேஷ இயக்கம். (அதன் தலைவர் ஹிட்லரின் வாரிசு- யூஜீன் ரெறி பிளாஞ்)

கறுப்பு இன சேரிகளில் அடிக்கடி நுழையும் தென்னாபிரிக்க போலிஸார்- இளைஞர்களை கைது செய்து செல்கிறார்கள். பிறகு அவர்களை உயிருடன் காண்பது கிடையாது. பிணத்தைத்தான் காண்கிறோம் என்பது பரவலான குற்றச்சாட்டு. ஆயுதம் தாங்காத நிராயுத பாணி கறுப்பு இன மக்கள் மீது தென்னாபிரிக்க காவல்படை சுட்டு, பலரைக் கொன்றது கொன்று வருவது அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

இந்த போலிஸ் துர்ப்பிரயோகங்கள் பற்றி- அத்துமீறிய செயல்கள் பற்றி பலமுறை தாம் எழுதியும் அதிபர் டிகிளேக் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் டாக்டர் கிளக்மான் என்ற புகழ்பெற்ற வெள்ளை இன டாக்டர்- தென்னாபிரிக்க டாக்டர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர்! பல சடலங்களில் தாம் மரணப் பரிசோதனை நடத்தியதாகவும் அவர் கூறியிருக்கிறார்!

காவல்படை கட்டவிழ்த்து திரிகிறதா? அதன் மீதுள்ள கட்டுப்பாட்டை அதிபர் டி கிளேக் கைவிட்டுவிட்டாரா? அல்லது அவரேதான் இந்த குழப்பங்களை நடத்துகிறார் என்றெல்லாம் இப்போது கேள்விகள் எழுப் பப்பட்டுள்ளன.

எது எவ்வாறாயினும் சமரசப் பேச்சுக்கள் நடைபெறும் இடைக்காலத்தில் தென்னாபிரிக்காவின் காவல்படையினர் "இடைக்கால தேசிய ஒற்றுமை அரசு" ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படவேண்டும் என்றும் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.



தென்னாபிரிக்க கறுப்பு இன சேரிகளுள் பொலீஸ் அட்டகாசம்

இதற்கிடையே தென்னாபிரிக்க- இனத்துவேஷ ஹிட்லர் கும்பலின் தலைவர் ரெறி பிளாஞ் தென் ஆபிரிக்க 'சன்டே டைம்ஸ்' பத்திரிகை நிருபர்- வியப்புமிகு அழகி ஜானியுடன் கொண்டிருந்த ரகசிய "கிசுகிசு" உறவுகள் அக்குவேறு ஆணிவேறாக- பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் விபரிக்கப் பட்டன.

பிரிட்டிஷ் ரெலிவிஷன் நிறுவனத்திற்கு எதிராக- அழகி ஜானி தொடர்ந்திருந்த மான நஷ்ட வழக்கில் இவ்வார ஆரம்பத்தில் ஜூரிகள் தீர்ப்பளித்தார்கள்! அறம் கூறும் அவையத்தோர் அறம் கூறி தீர்ப்பளித்தார்கள். இந்தவழக்கு பற்றிய சுவாரஸ்யமான விபரங் களையும் இந்த வழக்கிற்கும் தென்னாபிரிக்க அரசியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும் அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.



ஆதரவாளர்கள் புடைசூழ நெல்சன் மண்டேலா

## காதல்

ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல்
ஆலமரத்திலிருக்கும் குருவிகளுக்கும் காதல்
நிலவுக்கும் வானுக்கும் காதல்
நீருக்கும் நெருப்புக்கும் கூட காதல்- ஆனால்
முதலாளிக்கும் தொழிலாளிக்கும்
பணக்காரனுக்கும் ஏழைக்கும்
வராத இந்தக் காதல்- இதனால்
நீங்காத வறுமையின் மேல்
நாம் கொண்ட காதல்.

-சுகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## எனது திறனாய்வு வழிகாட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 1930 டிசம்பரில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையும் தொடர்ந்து ஜனவரியில் லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையும் எழுதிவிட்டு முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாட்களில் எதிர்பாராத சில இலக்கிய நண்பர்களின் சகவாசம் கிடைத்தது. அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இரண்டு இருந்தன. அதில் பயின்றுகொண்டிருந்த சில மாணவர்களின்நட்பும், அவர்கள் மூலமாக ஆசிரியர் சிலரது நட்பும் கிடைத்தபோதுதான் எனது பிற்காலத் தமிழ் இலக்கியத் தகுதிக்கும் விமர்சன விருப்புக்கும் வித்திடப்பட்டது என்று சொல்ல வேண்டும். ஏற்கனவே வீட்டில் எனது தந்தையார் சேர்த்து வைத்திருந்த சங்க இலக்கிய, சைவசமயப் புத்தகங்களும் குறிப்புகளும் ஓரளவு இலக்கியப் பரிச்சயத்தை ஏற்படுத்தியிருந்தன. இப்போது ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் பல புதிய தகவல்களைத் தந்தார்கள். அதேசமயம் அவர்கள் என்னிடமிருந்து ஆங்கிலக் கவிதைகளின் நுட்பங்களைத் தெரிந்துகொண்டார்கள். இவ்வாறு இலக்கியப் பரிவர்த்தனை செய்துகொண்ட நாட்களில் மேல்மட்டக் குழுவொன்றின் நட்பும் தொடர்பும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளர்களாயிருந்த மூன்றுநண்பர்கள்: கணபதிப்பிள்ளை, கைலாசபதி, நடராஜா மூவரும் அந்த நாட்களில் இணைபிரியாத இலக்கிய சகாக்கள். கணபதிப்பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர். அத்துடன் தமிழாசிரியர் பயிற்சியும் பெற்றவர். வடமொழி தெரிந்தவர். ஆங்கிலம் தெரியாது, ஆனால் கண்ணும் காதும் எப்போதும் திறந்திருக்கும். கைலாசபதி லண்டன் பல்கலைக்கழகத்தின் பி.ஏ, பி.எஸ்சி. பட்டதாரி. அத்துடன் தமிழ் இலக்கியத்திலும் சைவ சித்தாந்தத்திலும் திறமைசாலி. இன்று அவரது உருவத்தை நினைக்கும்போது பின்னாளில் நான் சந்தித்த இலக்கிய நண்பர் கு.ப.ராஜகோ பாலன் போன்றிருப்பார். பேச்சிலும் நடையிலும் உருக்கி வார்த்தது போலிருப்பார். நடராஜன் கொஞ்சம் சலசலப்பு அதிகம். கல்கத்தா பி.ஏ. தமிழ்ப்புலவர் மட்டுவில் வேற்பிள்ளையின் புதல்வர். இந்த மூவரும் இணைபிரியாத தோழர்கள். நாடகம் பார்ப்பார்கள். சீட்டாடுவார்கள். மற்றும் வேளைகளில் இலக்கிய விமர்சனம் செய்வார்கள். யாழ்ப்பாணம் பெரியகடை காங்கேசந்துறை றோட்டிலிருந்த சைவாள் ஹோட்டலில் தோசை சாப்பிட வருவார்கள். அந்த ஹோட்டலில்தான் நான் அவர்களை சந்தித்தேன். உயர் இலக்கிய மூலமாகவல்ல, அப்பொழுதுதான் யாழ்ப்பாணத்தில் புதிதாக அறிமுகமான ஆனந்தவிகடன் பத்திரிகை மூலமாக என்றால் வியப்பாயிருக்கும். அந்த அறிமுகம் பின்னால் சுமார் நாற்பது ஆண்டுக்காலம் வளர்ந்து நெருங்கிய இலக்கிய உறவையும் நட்பையும் கொடுத்ததை நினைத்துப் பார்க்கிறேன்.



சென்னையில் எஸ்.எஸ்.வாசன் ஆரம்பித்து நடத்திய ஆனந்தவிகடன் பத்திரிகை தமிழ் இதழ் வரலாற்றில் அந்த நாட்களில் ஒரு புதுமையாக இருந்தது. (இன்றைய தமிழ்ச் சஞ்சிகை உலகம் எவ்வளவோ மாறிவிட்டது. ஒப்பிடுவதற்கு இடமில்லை). அசாதாரணமான ஹஸ்யச் சித்திரங்களும், அதே ஹாஸ்யப் பாணியில் அரசியல் செய்திகளும் வாசகர்களுக்கு புதுமையாயிருந்தன. யாழ்ப்பாணத்தில் அந்த நாட்களில் இந்துசாதனம், சத்தியவேத பாதுகாவலன் என்ற இரண்டு பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்தன. இவ்விரண்டும் சமய சம்பந்தமான வெளியீடுகள். ஈழகேசரி அப்பொழுதுதான் ஆரம்பித்த அரசியல் இதழாக நடந்தது. அந்தச் சூழ்நிலையில்தான் ஆனந்தவிகடன் புதுமாதிரியாக யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கியது. இந்தப் புதிய தமிழ் இதழ் யாழ்ப்பாணத்தில் புதிய வாசகர்களைத் தேடிக்கொண்டது. புதிய வாசகர்கள் என்று சொல்லும்போது எண்ணிக்கையில் அல்ல, தரத்தில் என்று சொல்ல வந்தேன். பெரும்பாலும் பள்ளி ஆசிரியர்கள். 1938ல் யாழ்ப்பாணத்துக்கு முதன்முறையாக வந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி தமது பயணக் கட்டுரையில் யாழ்ப்பாண மக்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, "யாழ்ப்பாணத்தில் ஒருவர் தட்டுத் தடுமாறித் தடுக்கி விழுந்தால் ஒரு பண்டிதர்மேல்தான் விழவேண்டிவரும்" என்று எழுதியிருந்தார்.

பண்டிதர் கணபதிப்பிள்ளையை காப்பி ஹோட்டலில் சந்தித்தபோது என் கையிலிருந்த ஆனந்தவிகடன் பத்திரிகையைப் பார்த்துவிட்டு அதைப் புரட்டிப் பார்க்க விரும்பினார். பின்னர் நட்புரிமையோடு பத்திரிகைத் தமிழைப்பற்றியும் புதிய எழுத்துநடை பற்றியும் நண்பர்கள் பேசிக்கொண்டோம். அன்றிலிருந்து ஆரம்பித்த நட்புறவு பல ஆண்டுகள் நீடித்தது. முந்திய தலைமுறைகளில் பெரும் பெரும் தமிழ்ப் புலவர்களை யாழ்ப்பாணம் கொடுத்திருந்தது. வடமொழி தென்மொழிப் புலவர்கள் பலர். தமிழ் இலக்கணத்தைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணப் புலவர்கள் தனி மதிப்பைப் பெற்றிருந்தனர். யாழ்ப்பாணம் கணேசையர் தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களுக்கும், பழைய உரையாசிரியர்களின் உரைகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து, புதியஉரைவிளக்கக் குறிப்புகளோடு நான்கு தொகுதிகளாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பதைத் தமிழுலகம் பாராட்டி வரவேற்றிருக்கிறது. அந்தப் பரம்பரையில் வந்தவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை. மேல்மட்டப் பண்டிதர் ஆனாலும் தமிழ் இலக்கியத்தில் புதுமையை வரவேற்று அதற்கும் ஓர்அங்கீகாரம் கொடுத்தவர் கணபதிப்பிள்ளை. கல்லூரி மாணவர்களுக்கு இலக்கியத் திறனாய்வு கற்பிக்கும்போது அந்த நாட்களில் ஆனந்தவிகடன் தலையங்கக் கட்டுரைகளையும் இலக்கிய விமர்சனத்தில் எடுத்து ஆராய்வார் என்று அன்றைய மாணவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். (இவரைப் போலவே பின்னால் பேராசிரியர் தெ.போ.மீனாட்சிசுந்தரனாரும் புதுமை மரபில் ஈடுபாடுகொண்டவர் என்பதை நான் நேரில் அறிவேன்). பின்னர் நான் ஈழகேசரியில் கடமை பார்த்த நாட்களில் கணபதிப்பிள்ளையின் கேண்மை மிக நெருக்கமாயிருந்தது. ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் துறவியாக வாழ்ந்தார். 1978ம் ஆண்டு சென்னையில் வசித்த நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது அந்த மாமனிதரைச் சந்தித்தேன். காலம் கடந்ததாயிருந்தாலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் (கலாநிதி) பட்டம் வழங்கிப் பாராட்டியது. அவர் இப்போது இல்லை. அவர் புகழ் இருக்கிறது. என் நெஞ்சைவிட்டகலாத இலக்கியப் பெருமகன் அவர்.

## வெட்க இரவுகள்

கொட்டை பறித்து
கோதுழுத்தும் வௌவால்களால்,
வாழ்விழந்து மண்சேரும்
வேம்புப் பழங்களின் ஓலம்;
"டக்-டக்" கென்று கூரை பிளக்க....
சபைதேடி அலைகின்ற
யாரோ ஒரு சங்கீதக்காரனுக்காக,
இரவிரவாக(ச்) சுதிசேர்த்து சுகம்கெடுக்கும்
நுளம்புகளின் இரைச்சல்;
"நொய்" யென்று காதைக் கடிக்க....
எங்கோகேட்ட "பட் பட்"டுக்காய்
ஓசைப்படாமல் ஊர்ந்துவரும்
சப்பாத்து மனிதங்களுக்கு "சலாம்" சொல்லும்
நாய்களின் நாவுரைப்பு;
"வள்" ளென்று வான் பறக்க....

யன்னலுக்குள் தலைவிரித்த
பக்கத்துத் தென்னையிலே
ஏறிநின்று சலசலப்பது பூனையோ யாரோவென்று
பார்க்கக் கூட துணிச்சலற்ற
பயந்தாங்கொள்ளி எனக்காக,

இடைக்காலத் தகராற்றால்
தாய்வீடு சென்ற என்
மின்சார சம்சாரத்துக்காய்
நான் செய்து கொண்ட இந்த
"சின்னவீட்டு" செட்டப் மட்டும்,
எத்தனை உண்மையாய்
என்முன்னேயே உருகி உருகி
வெண்முத்தாய் வீழ்கிறாள்.

இடையிடையே கேட்குமந்த
"வீர்...வீர்..." விசிலடிப்பால்
அழைக்கப்படும் யாரோவுக்கும்,
அவளுக்குமாக நான் அசைகின்றேன்.

...............சனியன்
பதுங்கிக் கிடந்த எலியொன்று
பாய்ந்து எழ,
படுத்திருந்த பானை அதில்
தடக்கி விழ,
பாதிஉயிர் உடல் மீற
மீதியோடு "கவர்" எடுத்து,
பின் மெதுவாக எழுகின்றேன்.

நிறைவுதர நீளமாய் பெருமூச்சு;
எதுவுமே இல்லையென்று
யன்னலுக்குள் நிலவு நின்று
சமாதானம் சொன்னபோது,
பெரிதாக வெட்கம்.

இதுவும் ஒரு வெட்க இரவு;
எத்தனை காலமாய் மீண்டும் மீண்டும்.

இவை எங்கள் இரவுகளின்
நீண்டகால உறவுகள்;
இந்த இரவுகளும் எங்களின்
நீண்டகால உறவுகள்.

இத்தனை துணிச்சலாய் வருமிந்த
வெட்க இரவுகள்;
இவை மட்டும் இப்போதைக்கு
விடிவதாக இல்லை!

**-யதார்த்தன்.**

## உரைகல்

28.7.92.

ஆசிரியர் அவர்கட்கு!

'தமிழோசை'க்கு எனது வாழ்த்துக்கள்.

ஓசையின் இரு ஒலிகளும் எனக்கு எட்டின. நன்றாகவே இருந்தன. இருந்தும் சற்று செய்திகள் குறைவாக உள்ளதால் சஞ்சிகை போன்று காணப்படுவதாக எண்ணுகிறேன். அத்துடன் இலங்கை இந்திய செய்திகளை விட, இந்திய இலங்கைச் செய்திகள் இருப்பதாகவும் தென்படுகிறது.

மேலும் கலை, இலக்கியத்திற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்ததனையிட்டு மிகுந்த மகிழ்ச்சி. அடுத்த ஆசிரியர் தலையங்கம் சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

தொடர்ந்து நடுநிலைத் தன்மையினைப் பேணி சரியான கருத்தினையும், உண்மைச் செய்திகளையும் எமக்கு பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.

வைத்தி.

வாசகர் அபிப்பிராயம்

"தமிழோசை" முதல் இதழ் கிடைக்கப் பெற்றேன். விநாயகர் பற்றி காஞ்சி பெரியவரின் பேச்சு, பத்மா சுப்பிரமணியத்தின் சம்பாஷணை, மகராஜபுரம் சந்தானத்தைப்பற்றிய செய்தித் தொகுப்பு ஆகியவைகளை ஒருங்கே பார்க்கும்போது உங்கள் பத்திரிகை ஒரு முழுமையான படைப்பு என்பதைக் காட்டகிறது. சுவாமி விபுலானந்தரின் பூர்வாசிரமத்தைப்பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக எழுதப் பட்டிருக்கிறது. இந்த வகையில் தொடர்ந்து "பழைய நினைவுகளை" வரவேற்கிறோம். வைத்தியலிங்கத்தின் சிறுகதையும், உலகத் தமிழர் பற்றிய நூல் மதிப்புரையும் பிற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு உபயோகமானவை. உங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி)
கோயம்புத்தூர், இந்தியா.

ஆசிரியர் அவர்கட்கு,

"தமிழோசை" அருமையான பத்திரிகை. அழகான பத்திரிகை. அடக்கமான பத்திரிகை. முதல் வந்த மூன்றும் முத்தானவை. தொடர்பவையும் அப்படியே அமைய எனது ஆசிகள்.வழமையாக எழுதுகின்ற சங்கரண்ணா, விமல் சொக்கநாதன் நல்ல எழுத்தாளர்கள். சிவபாதசுந்தரம் அவர்களின் அநுபவங்களை ரசிக்கலாம். யாழ்ப்பாணத்தான், மனிதனும் மர்மமும் நன்றே அமைந்தன. நார்மாவை கண்ணுள் நிறுத்திய ஓவியருடைய திறமையை பாராட்ட வார்த்தைகள் இல்லை. தொடர்ந்தும் இப்படியே வெளிவரட்டும்.

நான்காவது இதழில் என்னென்ன வருமோ என்ற ஆவலுடன்

உங்கள் அபிமான வாசகர்
சி.ஜெயதேவி.
Eastham

ஆசிரியர் அவர்கட்கு,

தமிழோசை இதழ் மிகவும் தரமான இதழாக வெளிவருகின்றமை, தமிழ் பேசும் தலைமுறையினர்க்கு ஒரு வரப்பிரவாதம் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும் ஆன்மிகத்திற்கும் பங்களிப்பு செய்து வருவதால் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றது.

நன்றி

பற்குணராசா.
FRANCE.

"தமிழோசை" தக்க தருணத்தில் வெளியிடப்பட்டுள்ள இதழ். தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களுக்கு, லண்டன் நகர் வாழ் தமிழர்களின் கலை இலக்கியப் படைப்புக்களை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு. தமிழ்நாட்டு அரசியல்பற்றிய செய்திக்குறிப்பு சூடாகவும் சுவையாகவும் இருந்தது. விபுலானந்தர் பற்றிய கட்டுரை புதிய செய்திகளை அறிந்துகொள்ள உதவியாயிருந்தது. தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் நடத்தும் நாடகவிழா காண ஆவல். இந்த நாடகக் குழுவுடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நாடகக் குழுவின் நாடகப் பணிபற்றி அறிய விருப்பம். "தமிழோசை" இதழைத் தொடர்ந்து அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

பேராசிரியர்
அ.சிவக்கண்ணன்
மதுரை.

"தமிழோசை" வெளிநாட்டிலிருக்கும் எங்களைப்போன்ற தமிழர்களுக்கு மற்றொரு வெளிநாட்டிலிருந்து உலகமெங்கும் உள்ள தமிழர்களைப்பற்றி அறிய மிக்க நல்ல வாய்ப்பாகும்.

ராஜேஸ்வரி ராமசுப்பிரமணியம்
பாரெயின்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

# பூவும் பொட்டும்

சில நாட்களின் முன்னர் இலங்கை தொலைக்காட்சி ‘ரூபவாஹினி’யில் ஆங்கிலச் செய்தி வாசித்த பெண் அறிவிப்பாளர் நெற்றியில் பொட்டுடன் காணப்பட்டார் என்ற காரணத்தினால், ஒளிபரப்பைத் திடீரென நிறுத்தி வைத்து, பின்னர் பொட்டை அகற்றிவிட்டு நிகழ்ச்சி தொடர்ந்ததாகவும், இச்சம்பவம்பற்றி விசாரணையும் விவாதமும் நடந்து, பொது விதியாக தமிழ் அறிவிப்பைத் தவிர்ந்த மற்றைய நிகழ்ச்சிகளில் பொட்டு வைத்துக்கொண்டு செய்தி வாசித்தலாகாது என்றும், ஏனைய எந்த நிகழ்ச்சிகளிலும் பொட்டு, பூணூல், சிலுவை, இஸ்லாமிய தொப்பி முதலிய சமய சம்பந்தமான இலச்சினைகளை நிலைய ஒளிபரப்பாளர் அணியக்கூடாது என்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக லண்டன் சன் ரைஸ் ரேடியோ தமிழ் ஒலிபரப்பில் செய்தி ஒன்று ஒலிபரப்பானது.

பொட்டுப் போடுவதும் பூச்சூடுவதும் தமிழருடைய அநாதியான பழக்கம். மணமான பெண்களை வாழ்த்தும்போது ”பூவோடும் பொட்டோடும் வாழ்க” என்றுதான் வாழ்த்துவார்கள். வயது முதிர்ந்த பெண்கள் “நான் பூவோடும் பொட்டோடும் போய்விட வேண்டும்” என்று விரதமிருந்து வேண்டிக்கொள்வதையும் பார்க்கிறோம். பூவும் பொட்டும் தமிழ் இந்துப் பெண்களுக்கே உரிய சின்னங்களாயிருந்தும் அவை இப்போது எல்லாப் பெண்களினதும் அழகு சாதனங்களாக ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது. இந்துப் பெண்கள் மாத்திரமல்ல கிறிஸ்தவர்களும் இவற்றை அணிவதைப் பார்க்கிறோம். முக்கியமாக சினிமாத்திரையில் காட்சி கொடுக்கும் நடிகையர் இவற்றை அணியத் தவறுவதில்லை. அந்த வகையில் சினிமாவையே பின்பற்றும் தொலைக் காட்சி நங்கையரும் பொட்டும் பூவுமாக அலங்காரம் செய்தார்கள். இலங்கையில் பல சிங்களப் பெண்கள், சினிமாவிலும், நாடகத்திலும், பரதநாட்டியத்திலும் இந்தப் பொட்டையும் பூவையும் அணிந்தே வந் தார்கள்; வருகிறார்கள். ரூபவாஹினிக்கு மாத்திரம் இப்போது திடீரென்று என்ன வந்துவிட்டது?

சரி, சிங்கள பெண்கள் அந்தப் புதிய விதிக்குக் கட்டுப்படட்டும். நமது பெண்கள், முக்கியமாகக் குடியேறியிருக்கும் மேலை நாடுகளில், குங்குமம் கிடைக்காதபோது, ஒட்டுப் பொட்டையும், மல்லிகை கிடைக் கவில்லையானால் காகிதப் பூவையுமாகுதல் அணிந்துகொண்டால் கலாசார அழகு மகிழ்வூட்டும். இவை சுமங்கலிக்கு அடையாளம்.

# இராணுவ தலைவர்கள் கொலை
## அரசுக்கும் பங்கு உண்டா?

(நமது நிருபர்)

இலங்கையில் உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதில் இலங்கை அரசாங்கத்துக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று லண்டனில் இலங்கை நவசமசமாஜக்கட்சியின் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார ‘தமிழோசை’க்கு தெரிவித்தார்.

சம்பவம் நிகழ்ந்த விதத்தையும் முன்னைய பின்னணிகளையும் வைத்துப் பார்க்கையில் அரசாங்கமும் இராணுவத்தின் ஒரு பிரிவும் இதனைத் திட்டமிட்டுச் செய்திருக்கலாம் என்று சந்தேகிப்பதற்கு நியாயமிருக்கிறது என்று தெரிவித்த அவர், கேணல் கொப்பேகடுவவின் இறுதி மரியாதையின் போது கனத்தை மயானத்தில் எழுந்த பொதுமக்களின் குமுறல் இதனை மேலும் வலுப்படுத்துகிறது என்றார்.

பதவி உயர்வு உட்பட்ட பல்வேறு விடயங்களில் கடந்த சில காலமாக இராணுவத்தினுள் கருத்து வேறுபாடுகள் நிலவியே வந்தன, என்று கூறிய திரு நாணயக்கார எப்படியெனினும் உயர் அதிகாரிகள் பலரின் இந்த இழப்பு அரசாங்கத்துக்கு பிரச்னையாகவே அமையும் என்றும் ஒரு மனச்சலிப்பை படையினரிடையே ஏற்படுத்தும் என்றும் சொன்னார்.

விடுதலைப்புலிகள் இதற்கு உரிமை கோரியுள்ளனர். இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சு நடத்திவரும் அவர்கள் அரசுக்கு விடுத்த ஒரு நிபந்தனையின்பேரிலும் இது நிகழ்ந்திருக்கலாம் என்றார் அவர். இதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரேயொரு சிங்கள அரசியல் கட்சித்தலைவரான திரு வாசுதேவ நாணயக்கார, இனப்பிரச்னைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் இது வெறும் கண்துடைப்பே என்றும் உருப்படியான பலன் எதனையும் இது ஒருபோதும் தரமாட்டாது என்றும் சொன்னவர் மலையக, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் ஜனநாயக இடதுசாரி இயக்கங்கள் இணைந்து உருவாகும் புதிய அரசியல் சத்தியே இலங்கையில் இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காணும் என்றார்.

# போராட்ட முறையில் ஒரு புதுமுறை கண்டவர்

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு நாள். கூட்டுபடைத் தலைமையகத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தேன். சற்று குள்ளமான–திடகாத்திரமான அதிகாரி ஒருவர் காரிலிருந்து இறங்கினார். பழக்கமான முகம் அது. மேஜர் ஜெனரல் டென்ஸில் லஷ்மன் கொப்பேகடுவ அவர். பரஸ்பர வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்ட பின்னர் அவர் பொறுப்பாகவிருந்த வடபகுதியின் பொதுவான நிலமையைப்பற்றி சுருக்கமாக பேசினோம். வழக்கம் போலவே அலாதியான நம்பிக்கை அவரிடம் இருந்தது. கையிலே மா சேதுங்கின் பெரிய நூல் ஒன்றையும் அவர் வைத்திருந்தார். மறைந்த சீனத் தலைவரின் இராணுவ நடவடிக்கைகளையும் யுக்திகளையும் மீளவொரு தடவை படிப்பதற்காக நண்பர் ஒருவரிடம் இரவல் வாங்கி வருகிறேன் என்றார்.

‘பிரதான எதிரியை அடையாளம் காண்பது; சஞ்சலப்படும் நடு படையினரை இல்லாமல் செய்வது; மற்றையவர்களை நண்பர்களாக்கி அதன் மூலம் எதிரியைத் தோற்கடிப்பது; பொது எதிரிக்கு எதிரான எல்லா சத்திகளையும் ஒன்றுபடுத்துவற்புறுத்தும் ஒரு வழிமுறை மாத்திரமே அது. எந்த தீர்வானாலும் அது நிச்சயமாக அரசியல் தீர்வாக–எல்லாக் கட்சிகளும் இணைந்து சமரச மேசையில் எடுக்கப்படும் தீர்வேதவிர, நிச்சயமாக களத்தில் எடுக்கப்படும் தீர்வு அல்ல என்ற நிலை அவருடையது.

இந்தக்கொள்கை, எப்படியெனினும், புலிகளுக்கெதிரான கடும் இராணுவ நடவடிக்கைகளிலிருந்து டென்ஸிலைத் தடுக்கவில்லை. ஆனால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மற்றையவர்களிலிருந்து வித்தியாசமான ஒரு வடிவத்தை அவர் உருவாக்கினார்; குறிப்பாக பொதுமக்களிலிருந்து புலிகளை (பிரதான எதிரி) வேறுபிரித்தறியக் கூடியவராக இருந்தார். அவரை தெரிந்தவர்கள் அறிந்திருந்தபடியே இது முழு தமிழ்மக்களுக்கு மெதிரான போர் அல்ல என்று நம்பவைத்து பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதில் அவர் கடினமாக ஈடுபட்டார். அதனால்தான், சிலர் கூறுவது போன்று ஆயிரக்கணக்கான மக்களை இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கும் பாரிய குண்டுவீச்சுகள், பாரபட்சமற்ற விமான தாக்குதல்கள் போன்றவற்றில் தனது மேலதிகாரி

## மாவோவின் போர்முறைச் சித்தாந்தம்

வது’- மாவோவின் நூலிலிருந்து அவர் பொழிப்பாகக் கூறியவை இவை.

டென்ஸில் மாக்ஸிச வாதி அல்ல. ஆனால் திருமதி சிறிமாவோவுக்கும் காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பேகடுவவுக்கும் உறவினர் என்பதால் ஐ.தே.க.அதிகாரபீடம் அவரை சுதந்திரக் கட்சி ஆதரவாளர் என்று அடிக்கடி சந்தேகித்து வந்தது. ஆனால் என்னைப்பொறுத்தவரையில் டென்ஸில் மாவோவின் அரசியல் இராணுவ சிந்தனைகளில் தீவிர நம்பிக்கை கொண்டவராகவே தெரிகிறார். கடந்த சில ஆண்டுகளாக வடக்கில் அவரது நடவடிக்கைகளைக் கவனிக்கையில் மாவோவின் கோட்பாடுகளை மாறுபட்ட சந்தர்ப்பங்களில் அவர் பிரயோகிக்க முயன்றார் என்றேபடுகிறது. ஜப்பானிய, சியாங் கைஷேக்குக்கு எதிராக ஒரு புரட்சி போராட்டத்தை நடாத்திய கம்யூனிஸ கொரில்லாக்களுக்காக மாவோ இந்த யுத்தகால கோட்பாடுகளை வரைந்திருந்தார். டென்ஸில் பிரிவினையைக் கோரும் ஆயுதமேந்திய தீவிரவாதிகளுக்கு எதிராக ஓர் அரசாங்கம் போராடும் யுத்தத்தில் இதனை பிரயோகிக்க முயன்றார்.

இனப்பிரச்னைக்கு இராணுவ நடவடிக்கையினால் மாத்திரம் உறுதியான ஒரு தீர்வைக்கண்டுவிட முடியாது என்ற திடமான எண்ணத்தை டென்ஸில் கொண்டிருந்தார் என்பதில் மறைவு எதுவுமில்லை. புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு

களுடனும் சகாக்களுடனும் அவர் அடிக்கடி கருத்துவேறுபாடு கொண்டும் சண்டையிட்டும் வந்தார். தாக்குதல் மேற்கொள்ளப்படவிருக்குமிடங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு முன்னெச்சரிக்கை அளிப்பதிலும் அவர் நியாயமாகவேயிருந்ததாக இவர்கள் கூறுகிறார்கள்.

விமானத்திலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசுவதையும் இவரது அதிகாரிகள், இவை, புலிகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கே உதவுமென வாதிட்டிருக்கிறார்கள். இருப்பினும் இப்படியான எதிர்புகளிடையேயும் பொது மக்கள் இழப்பைப் கூடுமானவரை குறைத்தே தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள டென்ஸில் முயன்றார்.

வடக்கு–கிழக்கில் புலிகளுக்கு எதிராக புளொட், ரெலோ, ஈஎன்டிஎல்எவ், ஈபிடிபி போன்ற இயக்கங்களை ஒன்றுபடுத்தியதிலும் இவரே, முக்கிய பங்கு வகித்ததாக விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்–இது மாவோவின் மற்றொரு போராட்ட யுக்தி.

களத்தில் அவரது மரணத்தின் மறுநாளே கண்டிய மலைநாட்டின் சிங்கள பௌத்தரான டென்ஸில் சிங்கள இனத்தின் நவீன தலைவரானர். படைவீராக எப்போதும் முன்னணியில் நின்றும் வடக்கில் தனது படையினரை களத்தில் தாமே நேரடியாக வழிநடத்தியும் வந்த டென்ஸில், சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் தனது நாட்டுக்காகவும் அதன் ஒருமைப்பாட்டுக்காகவும் போராடி தன் உயிரை ஈந்த துட்டகைமுனுவின் புதிய அவதாரம். தென்பகுதி முழுவதும் அநுட்டிக்கப்பட்ட துக்கம் இதனைச் சாற்றும். செய்திப்பத்திரிகைகளில் வெளிவந்த அவரின் புகைப்படங்களைக்கூட பார்த்திருக்காதவர்களும் கண்ணீர்விட்டு அழுதார்கள். அரசியல் தலைவர்களின் இறுதிமரியாதைகளில்கூட இவ்வளவு திரளானோர் கலந்து கொண்டதில்லை. இந்த ஜனத்திரள் டென்ஸிலுக்கு அவர்களின் ஆற்றொணா அநுதாபத்தை மாத்திரம் சாற்றி நிற்கவில்லை; சிங்கள மக்களுக்கு பிரேமதாச

## சிங்கள மக்களுக்கு டென்ஸில் ஒரு துட்டகைமுனு

அரசு மீதான அதிருப்தியையும், அவர்களது எதிரியான விடுதலைப் புலிகள்மீது ஸ்திரமற்ற அவரின் கொள்கை மீதான நிராகரிப்பையும் கூடவே சாற்றுவதாக இருந்தது. கனத்தையில் அமைச்சர்கள் அரசாங்க ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதும், பொலீஸ் வாகனங்களுட்பட்ட அரச வாகனங்கள் சேதமாக்கப்பட்டதும் அரசு மீதான இந்த எதிர்ப்பை மேலும் வெளிப்படுத்துகிறது. இராணுவ வாகனங்கள் எதுவும் தாக்கப்படவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இராணுவத்தினர் தேசிய பாதுகாவலர்கள்.

தெற்கில் ஏற்பட்ட இந்தத் துயரத்தின் கொந்தளிப்பு மீண்டுமொரு 1983 ஜுலையை உருவாக்கி விடுமோ என்று இயல்பாகவே எதிர்பார்க்கப்பட்டது. அந்த கறுப்பு ஜுலையின் ஆரம்பவைப வமும் இதே கனத்தை மயானத் தில்தான் ஆரம்பமானது. ஆனால் இம்முறை சிங்கள மக்கள் தமிழரைப் பொறுத்தவரை, பொலநறுவை, நீர்கொழும்பு, வெள்ளவத்தை ஆகிய இடங்களில் நிகழ்ந்த சிறுசிறு சம்பவங்களைத் தவிர, அமைதியாகவே நடந்து கொண்டார்கள்.

அங்கு ஆத்திரமுற்றிருந்த மக்கள் தமது இலக்கில் நிதானமாகவேயிருந்தார்கள். அல்லாவிடில் இலங்கையில் மீண்டும் ஓர் இரத்த ஆறு ஓடியிருக்கும்.

டென்ஸிலின் மரணம் ஒரு விதத்தில், பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் சமாதானத் தீர்வுக்கான ஒரு சாத்தியத்தை திசைதிருப்பி விட்டது. இம்மாதம் 11ஆம் தேதி கூடவிருந்த தெரிவுக்குழு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடக்கு–கிழக்கு இணைப்புக்கும் டென்ஸிலின் மரணம் அநேகமாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இணைப்புபற்றிய பேச்சுக்கு மிதவாத தலைவர்களும் இனி பின்னிற்கவே செய்வர். இப்போதைய நிலைமைகளின்படி இனி மாகாணங்களுக்கான அதிகார பரவலாக்கல் பற்றியே பேச்சுவார்த்தைகள் நிகழலாம்.

ஆக, இராணுவ அரங்கத்தில், இரண்டு பிரிகேடியர்களும் வட பகுதி பாதுகாப்பு படைகளின் கமாண்டர் விஜய விமலரத்தினவும் மிதவாதிகளாக அறியப்பட்டவர்கள். இவர்களின் மறைவின்மூலம் மிதவாதிகள் அகற்றப்பட்டு விட்டனர். எனின், அடுத்து என்ன? புலிகளின் அழுக்கவெடி இராணுவத்தினரை பின்னடைய வைக்குமா? அல்லது நிதி, மனித விலை எதுவானாலும் முழு அளவிலான ஒரு தாக்குதலுக்கு அவர்களுக்கு உறுதியளிக்குமா?

ஏ.ஸி.எம்.சாலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரதத்தின் ஜனாதிபதிகள்

# ராஜேந்திரபிரசாத் முதல் வெங்கட்ராமன் வரை

ராஜேந்திர பிரசாத் முதல் வெ ங் க ட ரா ம ன் வரைஎஸ்.டி.சர்மா வுக்கு முன்பு 10பேர் ஜனாதி பதியாக பதவி வகித்து இருக்கிறார்கள். அவர் களைப் பற்றிய சிறு குறிப்பு இது:-

சென்னை நிருபர்



ராஜேந்திரபிரசாத்

இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத். இவர் 1884-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் தேதி பீகாரில் பிறந்தார். பாட்னா பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது மாணவர் தலைவராக இருந்தார். 1925-ம் ஆண்டு சட்டத் துறையில் எம்.எல்.பட்டம் பெற்றார். பாட்னா பல்கலைக்கழக செனட் உறுப்பினராக பல ஆண்டுகள் இருந்தார். காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினராக பல ஆண்டு கள் இருந்தார். பம்பாய் காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், கல்கத்தா கமிட்டி தலைவராகவும் இருந்து இருக்கிறார். 1942-ம் ஆண்டு ஆகஸ்டு இயக்கத்தில் சேர்ந்ததற்காக சிறையில்அடைக்கப்பட்டார்.1945-ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். 1947-ம் ஆண்டு மத்திய மந்திரிசபையில் சேர்ந்து உணவு மந்திரி ஆனார். பிறகு உதவி ஜனாதிபதி ஆனார். 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ந்தேதி முதல்1962-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி வரை ஜனாதிபதியாக இருந்தார். 1963-ம் ஆண்டு மரணம் அடைந்தார்.




ராதாகிருஷ்ணன்

இந்தியாவின் 2-வது ஜனாதிபதி தத்துவமேதை எஸ்.ராதாகிருஷ்ணன். இவர் 1888-ம் ஆண்டு செப்டம்பர் 5-ந் தேதி திருத்தணியில் பிறந்தார். திருப்பதியில் பள்ளி படிப்பை முடித்த ராதாகிருஷ்ணன், வேலூர் ஊரிஸ் கல்லூரியில் படித்தார். பிறகு சென்னையில் தத்துவ பாடத்தில் உயர் கல்வி கற்றார். சென்னை பிரசிடென்சி கல்லூரியில் தத்துவ விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் இருந்தார்.

1949-ம் ஆண்டு முதல் 1952வரை ராதாகிருஷ்ணன் ரஷியாவில் இந்திய தூதராக இருந்தார். அப்போது ரஷிய சர்வாதிகாரி ஸ்டாலினை 2 முறை சந்தித்து உரையாடியவர் என்ற பெருமை ராதாகிருஷ்ணனுக்கு கிடைத்தது.

1952-ம் ஆண்டு துணை ஜனாதி பதியாக தேர்ந்து எடுக்கப்பட்டார். 1957-ம் ஆண்டு மீண்டும் துணை ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப் பட்டார். 1962-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி ராதாகிருஷ்ணன் ஜனாதிபதிஆனார். 1967-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி வரை அந்த பதவியில் நீடித்தார். 1975-ம் ஆண்டு சென்னையில் அவர் மரணம் அடைந்தார்.



ஜாகீர்உசேன்

மூன்றாவது ஜனாதிபதியான கல்விமான் ஜாகீர்உசேன் 1897-ம் ஆண்டு ஐதராபாத்தில் (பாகிஸ் தான்) பிறந்தார். அலிகார் பல்க லைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் ஜேர்மனியில் உள்ள பெர்லின் நகர் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி துறையில் டாக்டர் பட்டம் பெற்றார்.

1920-ம் ஆண்டு நடந்த ஒத்து ழையாமை இயக்கத்தில் ஜாகீர் உசேன் சேர்ந்தபோது அவ ருக்கு மகாத்மாகாந்தியுடன் நட்பு ஏற்பட் டது.

1952-ம் ஆண்டு அவர் மாநிலங் களவை உறுப்பினராக நியமிக்கப் பட்டார். 1957-ம் ஆண்டு அவர் பீகார் கவர்னர் ஆனார். 1962-ம் ஆண்டு துணைஜனாதிபதிஆனார். 1967-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி ஜனாதிபதி ஆனார்.1969-ம் ஆண்டு மே மாதம் 3-ந்தேதி அவர் இயற்கை எய்தினார். அதுவரை ஜனாதிபதியாக இருந்தார்.




வி.வி.கிரி

ஜனாதிபதியாக இருந்த ஜாகீர் உசேன் மாரடைப்பால் மரணம் அடைந்ததை தொடர்ந்து உதவி ஜனாதிபதியாக இருந்த வி.வி.கிரி தற்காலிக ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

ஒரிசா மாநிலம் பெர்ஹாம்பூரில் 1894-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி வி.வி.கிரி பிறந்தார். அங்குள்ள கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார். பிறகு அயர் லாந்து பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்து சட்டதுறையில் பாரிஸ்டர் ஆனார். வெளிநாட்டில் இருந்து திரும்பியதும் வி.வி.கிரி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.பிறகு தொழிற் சங்க தலைவராக புகழ் பெற்றார். அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசை உருவாக்கியவர் வி.வி.கிரி. இரண்டுமுறை அதன் தலைவராக இருந்தார்.

1937-ம் ஆண்டு சென்னை ராஜ்ய சட்டசபை உறுப்பினர் ஆனார். பிறகு தொழிலாளர் நல மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

1952-ம் ஆண்டு எம்.பி ஆனார். மத்திய மந்திரிசபையில் தொழிலா ளர் நலமந்திரி ஆனார். உத்தரபிரதேசம், கேரளா, மைசூர் ஆகிய மாநிலங்களில் கவர்னராக இருந்தார். 1967-ம் ஆண்டு மே மாதம் துணை ஜனாதிபதி ஆனார். 2 மாதம் தற்காலிக ஜனாதிபதியாக இருந்தார். 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 24-ந்தேதி ஜனாதிபதி ஆனார். 5 ஆண்டு அந்த பதவியில் நீடித்தார். 1980-ம் ஆண்டு சென்னையில் உள்ளஅவரின் வீட்டில் காலமானார்.



இதயதுல்லா

1969-ம் ஆண்டு 2மாதங்கள் தற்காலிக ஜனாதிபதியாகபதவி ஆற்றியவர் எம்.இதயதுல்லா. 1905-ம் ஆண்டு மத்திய பிரதே சத்தில் உள்ள பெதுல் என்ற இடத்தில் பிறந்த இதயதுல்லா ரெய்பூர், நாக்பூர் ஆகிய நகரங்களில் படித்து இளநிலை பட்டம் பெற்றபிறகு லண்டன் சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பட்டம் பெற்றார். அதையடுத்து சட்டத்துறையில் பாரிஸ்டர் ஆனார்.

சட்டத்துறையில் அவர் ஆற்றிய சேவை மறக்க முடியாதது.1968-ம் ஆண்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆனார். 1979 முதல் 1984ம் ஆண்டு வரை துணை ஜனாதிபதி யாக இருந்தார். முன்னதாக 2 மாதம் தற்காலிக ஜனாதிபதியாக பொறுப்பு வகித்தார்.



பி.டி.ஜாட்டி

6மாதங்கள் தற்காலிக ஜனா திபதியாக இருந்தவர் பி.டி.ஜாட்டி.

## பழைய ஜனாதிபதிகள்

இந்தியாவில் இதுவரை ஜனாதிபதியாக இருந்தவர்கள் பெயரும் அவர்களது பதவிகாலமும் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1) | ராஜேந்திரபிரசாத் | 26-1-50 | முதல் |
| | (பிறப்பு 1884 இறப்பு 1963) | 13-5--62 | வரை |
| 2) | ராதாகிருஷ்ணன் | 13-5-62 | முதல் |
| | (1888-1975) | 13-5-67 | வரை |
| 3) | ஜாகீர்உசேன் | 13-5-67 | முதல் |
| | (1897-1969) | 3-5-69 | வரை |
| 4) | வி.வி.கிரி | 3-5-69 | முதல் |
| | (1884-1980) | 20-7-69 | வரை |
| | | (தற்காலிகம்) | |
| 5) | இதயதுல்லா | 20-7-69 | முதல் |
| | (பிறப்பு 1905) | 21-8-69 | வரை |
| | | (தற்காலிகம்) | |
| 6) | வி.வி.கிரி | 24-8-69 | முதல் |
| | (1884-1980) | 24-8-74 | வரை |
| 7) | பக்ருதீன்அலிஅகமது | 24-8-74 | முதல் |
| | (1905-1977) | 11-2-77 | வரை |
| 8) | பி.டி.ஜாட்டி | 11-2-77 | முதல் |
| | (1913) | 25-7-77 | வரை |
| | | (தற்காலிகம்) | |
| 9) | சஞ்சீவரெட்டி | 25-7-77 | முதல் |
| | (1916) | 24-7-82 | வரை |
| 10) | ஜயில்சிங் | 25-7-82 | முதல் |
| | (1916) | 25-7-87 | வரை |
| 11) | ஆர்.வெங்கடராமன் | 25-7-87 | முதல் |
| | (1910) | 25-7-92 | வரை |



பக்ருதீன் அலிஅகமது


இந்தியாவின் 5-வது ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது.1905-ம் ஆண்டு மேமாதம் 13-ந் தேதி பிறந்த பக்ருதீன்அலி அகமது டெல்லியில் பள்ளி கல்லூரி படிப்பை முடித்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தார். பிறகு லண்டனில் சட்டத்துறையில் உயர்பட்டம் பெற்றார். 1928-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அசாம் பிரதேச கமிட்டி உறுப்பினராகவும் அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினராகவும் பதவி வகித்தார்.

அசாம் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். மாநில மந்திரியாக இருந்தார். அசாம் அரசு உயர் வழக்கறிஞர் (அட்வகேட் ஜெனரல்) ஆனார்.

1966-ம் ஆண்டு மத்திய மந்திரி ஆனார். 1974-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-வது ஜனாதிபதியாக பதவி ஏற்றார். 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மறைந்தார். அதுவரை ஜனாதிபதியாக இருந் தார்.

கர்நாடக மாநிலம், பிஜப்பூர் மாவட்டம், ஜாம் கண்டி தாலுகா சாவால்கி என்ற இடத்தில் 1912-ம் ஆண்டு செப்டம்பர் 10-ந் தேதி பிறந்தவர் பி.டி.ஜாட்டி. சட்டவல்லு னரான ஜாட்டி ஜாம்கண்டி என்ற சிறிய மாநில முதன்மந்திரியாக இருந்தார். மாநிலங்கள் பிரிப் பதற்கு முன் பம்பாய் சட்டசபை முதன்மந்திரியாக இருந்தார். பிறகு மைசூர் சட்டசபை முதன்மந்திரியாக இருந்தார்.

1974-ம் ஆண்டு முதல் 1979-ம் ஆண்டு வரை துணை ஜனாதிபதி யாக இருந்தார். 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் வரை தற்காலிக ஜனாதிபதியாக பதவி வகித்தார்.



சஞ்சீவரெட்டி

ஆந்திராவில் உள்ள அனந்தப்பூர் மாவட்டம் இல்லூரு என்ற கிராமத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர் சஞ்சீவ ரெட்டி.

(14ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் கலாசாரத்தின் வெற்றி?

'தமிழ்ச் சஞ்சிகைகள் வெளியிட்டு வரும் கீழான எழுத்துகள் பற்றி ஓயாமல் அலட்டிக் கொள்கிறீர்களே; ஐயா, எந்த மொழியில்தான் கீழானவை இல்லை, ஆபாசம் இல்லை?' என்று என் நண்பர் எழுதியிருந்தார். இன்றைய பாஷையில், 'சாடியிருந்தார்' என்று சொல்லவேண்டும்.

வாசகர் பலவீனங்களைத் தந்திரமாகச் சுரண்டும் நோக்கம் கொண்ட மலின எழுத்துகள் தமிழில் மட்டும்தான் பெற்றுப் பெருகுகின்றன என்று நான் சொல்லவில்லை. கீழானவை எல்லா மொழிகளிலும் பெருகிக் கொண்டிருக்கின்றன. அளவிலும் தரமற்றவைதான் எங்கும் அதிகம். தரமற்றவைக்குத்தான் வாசகர்களும் அதிகம். அப்படி என்றால் தமிழ்ச்சூழல் சார்ந்து நிற்கும் தனியான பிரச்சனை என்ன? தனிக்கவலைகள் என்ன?

### மூன்று பிரச்னைகள்

தமிழ்க் கலாசாரச் சூழலில் விசேஷ அழுத்தம் பெறும் மூன்று பிரச்னைகள் உள்ளன:

1. தமிழ்க் கலாசார இதழ்கள் தரமான படைப்புகளைப் பிரசுரிக்காமல் ஒதுக்கிவிடுகின்றன.

2. தரமற்றவை, தரமானவையாக மதிப்பிடப்பட்டு நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் அரவணைப்பில் சமூக கௌரவம் பெறுகின்றன.

3. தரமற்றவை முன்வைக்கும் மதிப்பீடுகள்தாம் உண்மையானவை என்ற மயக்கம் வாசகர் மத்தியில் பரப்பப்படுகிறது.

விஷயங்களை எளிமைப்படுத்தி, விரிந்த தளத்தில் வாசகர்களைச் சந்தித்து, அவர்களை உய்விக்கும் நோக்கம் கொண்டவையாக வெகு

> ஆக, தமிழில் தரமான எழுத்தாளனின் வெளிப்பாடு நூற்றுக்கணக்கில் விற்கும் சிற் றிதழ்களில் மட்டுமே சாத்தியம் என்றாகிவிட்டது.

ஜன இதழ்கள் தம்மை வர்ணித்துக் கொண்டு வந்திருக்கின்றன. அந்த முகமூடி இப்போது கிழிந்து விட்டது. அரசியல், சினிமா சார்ந்த வம்புகள், பாலுணர்வைத் தூண்டும் எழுத்துகள், படங்கள் இவை தாம் இவற்றின் இன்றைய தொழில் தந்திரங்கள். தரமான கவிதையோ, தரமான சிறுகதையோ, தரமான நாவலோ இவற்றில் வெளிவரும் சாத்தியம் மிகக் குறைவு. அறிவார்ந்த கட்டுரைகளை இவை ஒதுக்கி வெகுகாலம் ஆகிவிட்டது. சென்ற ஐம்பது வருஷங்களில் தமிழில் தரமான படைப்பாளிகள் பலர் தோன்றியிருக்கின்றனர். தரமான பிறமொழி இந்தியப் படைப்புகளுக்கு நிகரான கவிதைகளையும், சிறுகதைகளையும், நாவல்களையும், அறிவியல் கட்டுரைகளையும், ஆராய்ச்சி கட்டுரைகளையும் எழுதியிருக்க 'ின்றனர். இவர்களது படைப்புகளைத் தமிழ்ச் சஞ்சிகைகள் பெரிதும் ஒதுக்கியிருக்கின்றன. இப்படைப்புகள் சார்ந்த தகவல்களைக்கூட ஒதுக்கியிருக்கின்றன. ஆக, தமிழில் தரமான எழுத்தாளனின் வெளிப்பாடு நூற்றுக்கணக்கில் விற்கும் சிற்றிதழ்களில் மட்டுமே சாத்தியம் என்றாகிவிட்டது.

### பிற மொழிகளில்....

நவீன சிந்தனைகளின் தாக்கம் கொண்ட மலையாளம், கன்னடம், ஹிந்தி, உருது, வங்காளி போன்ற மொழிகளில் விரிந்த விற்புனை கொண்ட தரமான சஞ்சிகைகள் உள்ளன. இவை தரமான படைப்புகளையும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிவார்ந்த கட்டுரைகளையும் வெளியிடுகின்றன. ஆக, இம் மொழிகளில் தரமான படைப்புகள் லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடையும் வாய்ப்பைப் பெற்றவையாக இருக்கின்றன. படைப்பாளிகளும் அறிவுஜீவிகளும் மொத்த சமூகத்திற்கும் அறிமுகமானவர்களாகவும் இருக்கின்றனர். சமூகத்தின் சாரமான பகுதி, மதிப்பீடுகளைத் தீர்மானிக்கும் அறி

**சுந்தர ராமசாமி**

வார்ந்த கலாச்சாரத் தலைமை, தரமான எழுத்துக்களைப் படிப்பின் மூலம் இனங்கண்டு கொள்கிறது. சமூகத்தின் மறு பகுதி, தரமான

> தமிழில் வணிக சஞ்சிகைகளில் வெளிவரும் மூன்றாம் தர எழுத்துகள் அரசாங்கப் பரிசுகள் பெறுகின்றன. அகாடமிப் பரிசுகள் பெறுகின்றன. பல்கலைக்கழகப் பரிசுகள் பெறுகின்றன. பாடப் புத்தகங்களாக்கப்படுகின்றன. ஆராய்ச்சிகளுக்காகத் தேர்வு செய்யப்படுகின்றன.

எழுத்துகள் மீது அறிவார்ந்த தளம் கொண்டிருக்கும் மதிப்பை ஏற்றுக்கொள்கிறது. இம்மொழிகளில் வெளிவரும் தரமான இதழ்களும் லாப நோக்கம் கொண்டவை என்பதால் விரிந்த விற்பனையைக் கருதி, தரமானவற்றோடு நடுத்தரமான எழுத்துகளையும் இடைகலந்து வெளியிடுகின்றன. ஆனால் தமிழ்ச் சஞ்சிகைகள்போல் வாசகர்களைச் சுரண்டும் நோக்கம் மட்டுமே கொண்ட ஆபாசங்களை இவை வெளியிடுவதில்லை.

### ஆபாச இதழ்கள்

தமிழைப்போல் பிறமொழிகளிலும் ஆபாச இதழ்கள் உள்ளன. மலையாளத்தில் வெளிவரும் ஆபாச இதழ்கள், தமிழைவிட ஆபாசமானவை. பலமடங்கு விற்பனையும் கொண்டவை. ஆனால் இவற்றிற்கு முகமூடிகள் கிடையா. போலி கௌரவங்கள் இல்லை. அந்தச் சமூகத்தைச் சார்ந்த கலாசாரத் தலைமை இவற்றின் செயல்பாடைக் கீழான காரியமாக மதிப்பிடுகிறது. தரமான எழுத்தாளர்கள் இவற்றில் எழுதுவதில்லை. அரசாங்கம், கல்வி, மதம், அரசியல், நூலகம், ஆராய்ச்சி சார்ந்த துறைகள் இவற்றை முற்றாக ஒதுக்கிவிடுகின்றன. இவ்விதழ்களில் வெளிவரும் எழுத்துகள் அரசாங்கப் பரிசுகள் பெறுவதில்லை. பல்கலைக் கழகங்களின் அரவணைப்புக்கு ஆளாவதில்லை. வெகுஜன ஊடகங்களின் கௌரவங்களைப் பெறுவதில்லை. இவ்விதழ்கள், சமூகமுன்னேற்றம் பற்றி, ஒழுக்க நெறிகள் பற்றி, மோட்சம் பற்றி, தர்மம் பற்றி, வாழ்வின் சரிவுகள் பற்றி, சமூக ஊனங்கள் பற்றிப் பேசுவதில்லை. தம்மை இவை வெறும் வணிக முயற்சிகளாக வரையறுத்துக் கொண்டிருக்கின்றன. தரமான இதழ்களும், அவை

> 'மக்களின் ஆதரவும் பல்கலைக்கழகங்களின் ஆதரவும் பெற்ற ஒன்று எப்படி ஐயா, தர மற்றதாக இருக்க முடியும்?'

வெளியிடும் தரமான படைப்புகளுமே சமூக மதிப்புப் பெற அருகதையானவை என்பதை அவை கூசாமல் ஏற்றுக் கொள்கின்றன.

### முகமூடிகள்

தமிழில் தரமற்ற இதழ்களுக்கு முகமூடிகள் உள்ளன. இவற்றின் நோக்கம் பாமர வாசகனின் உணர்ச்சிகளைச் சுரண்டுவது. இருப்பினும் தர்மத்தின் கொடியை நாட்டத்துடிப்பது போல் பாவனை. அரசியல், அறிவியல், கலாசாரம், கல்வி, மதம், போன்ற துறைகள் சார்ந்த துணுக்கு விமர்சனங்ளை வெளியிட்டுச் சமூக வாழ்வின் சகல முகங்கள் பற்றியும் கவலைகள் கொண்டிருப்பது போல் நாடகம். இந்த நாடகத்தை வெற்றிகரமாக விற்பதற்கு நம் அறிவார்ந்த-கலாசாரத் தலைமையின் சுயநலம் உதவுகிறது. தரமற்ற சஞ்சிகைகள் மூலம் விளம்பரம் பெற விரும்பாத எழுத்தாளர்களோ, அரசியல் தலைவர்களோ, கல்வித்துறை நிபுணர்களோ, அறிவுவாதிகளோ, திரைப்பட இயக்குநர்களோ தமிழில் இல்லை. நடிகையின் அரை நிர்வாணமும் மாமுனியின் சன்மார்க்கப் பொன்மொழிகளும் எதிரெதிர் பக்கங்களில்- இதழை மூடவே கூச்சம் ஏற்படும்படி- வெளியிடப் படுகின்றன.

முற்றும் துறந்த முனிவர்களால்கூட ஆபாசங்களை உதற முடியவில்லை என்றால், ஆசாபாசங்களில் உழலும் ஜீவன்கள் எம்மட்டு? தமிழில் வணிக சஞ்சிகைகளில் வெளிவரும் மூன்றாம் தர எழுத்துகள் அரசாங்கப் பரிசுகள் பெறுகின்றன. அகாடமிப் பரிசுகள் பெறுகின்றன. பல்கலைக்கழகப் பரிசுகள் பெறுகின்றன. பாடப் புத்தகங்களாக்கப்படுகின்றன. ஆராய்ச்சிகளுக்காகத் தேர்வு செய்யப்படுகின்றன. அரசியல் கலாசாரத் தலைமைகளுக்கும், நிறுவனங்களின் தலைமைகளுக்கும் சஞ்சிகைகள் துணுக்கு விளம்பரங்கள் தருகின்றன. சஞ்சிகைகளின் கீழான போக்குகளை நிறுவனங்கள் உயர் நெறிகளாக மாற்றுகின்றன. இதன் மூலம் வாசகர் தளத்தில் சிக்கல் எடுக்க முடியாதமயக்கங்கள் உருவாக்கப்

> இன்று இந்தியாவில், பல பிற மொழிகளில், தன் தாய்மொழியில் வெளியாகும் சஞ்சிகைகளை மட்டுமே படிக்கும் தரமான வாசகன், ஆங்கிலச் சஞ்சிகைகளைப் படிக்கும் தரமான வாசகனுக்கு நிகராக விஷய ஞானம் கொண்டவனாக இருக்கிறான். நவீனப் பிரக்ஞை கொண்ட அந்த வாசகனோடு, தமிழ் வாசகனை ஒப்பிடும்போது, தமிழ் வாசகனின் பின்தங்கிய நிலை அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

படுகின்றன. தரமானவற்றைத் தரமற்றவற்றிலிருந்து பிரிக்கும் கோடுகள் துடைத்து அழிக்கப்படுகின்றன. 'மக்களின் ஆதரவும் பல்கலைக்கழகங்களின் ஆதரவும் பெற்ற ஒன்று எப்படி ஐயா, தரமற்றதாக இருக்க முடியும்?' என்ற கேள்வியை வாசகன் வீசுகிறான்.

### சஞ்சிகை புத்தி

இந்தக் கேள்வியை எழுப்பக்கூடிய வாசகன், தமிழ்ச் சஞ்சிகைகள் மட்டுமே படிக்கக்கூடியவனாக இருப்பான் என்றால், அவனுடன் விவாதத்தை நிகழ்த்துவதே மிகச் சிரமமான காரியமாகும். தரமற்ற எழுத்துகளை ஒருவன் உணரவும், சுய மதிப்பீடு செய்யவும், தரமான படைப்புகளிலிருந்து கிடைக்கும் அனுபவங்களைச் சிறிதேனும் பெற்றிருக்க வேண்டும். இந்த அனுபவத்தைத் தமிழ்ச் சஞ்சிகைகள் மூலம் பெற அவனுக்கு வாய்ப்பே இல்லை. மேலும் அவனுடைய சிந்திக்கும் ஆற்றலும், புரிந்து கொள்ளும் ஆற்றலும் அரை நூற்றாண்டாகத் தொடர்ந்து மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. மிக உன்னதமான, ஜீவாதாரமான நெறிகளைத் தீர்மானிக்கும் விஷயங்களில்கூட, சில்லறையான கிளுகிளுப்பையும் அற்பத் தமாஷுகளையும் எதிர்பார்க்கும் 'சஞ்சிகைப்புத்தி' அவனிடம் வேரூன்றிவிட்டது. தமிழகத்திலோ, இந்தியாவிலோ, அல்லது உலகத் தளத்திலோ உருவாகி வரும் துறைகள் சார்ந்த அறிவுகள் பற்றியோ, வளர்ச்சிகள் பற்றியோ, அவனுக்கு எதுவும் தெரிவதில்லை. ஆனால் இன்று இந்தியாவில், பல பிற மொழிகளில், தன் தாய்மொழியில் வெளியாகும் சஞ்சிகைகளை மட்டுமே படிக்கும் தரமான வாசகன், ஆங்கிலச் சஞ்சிகைகளைப் படிக்கும் தரமான வாசகனுக்கு நிகராக விஷய ஞானம் கொண்டவனாக இருக்கிறான். நவீனப் பிரக்ஞை கொண்ட அந்த வாசகனோடு, தமிழ் வாசகனை ஒப்பிடும்போது, தமிழ் வாசகனின் பின்தங்கிய நிலை அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. 'மக்களால் வரவேற்கப்படுவதும், நிறுவனங்களால் போற்றப்படுவதுமான ஒன்று, எப்படி ஐயா, உயர்வானதாக இல்லாமல் இருக்க முடியும்?' என்ற கேள்வியையும் அவன் எழுப்புகிறான். கலாசார அவலங்களுக்கு இரையாகி, சிறுத்துச் சிறுமைப்பட்டுப் போனவனையே, அந்த அவலங்களைத் தற்காக்கும் கருவியாகவும் மாற்றியிருப்பது சீரழிந்த தமிழ்க் கலாசாரத்தின் பரிபூரண வெற்றியாகும்.

நன்றி: தினமணி

# காங்கிரஸ் ஆட்சியை மூப்பனார் அமைப்பாரா?


தொய்வாக இருந்து கொண்டிருந்த தமிழ்நாட்டு அரசியலில் திடீரென்று கொஞ்சம் சூடெற்றியிருக்கிறார் காங்கிரஸ் பிரமுகர் ஜி.கருப்பையா மூப்பனார்.

'தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்டிலை விட்டு இறங்கியதற்கு வெள்ளிவிழா காணும் நிலையில் இருக்கும் காங்கிரஸ் கட்சியை மீண்டும் ஆட்சியில் அமரவைப்பார் மூப்பனார்' என்று ஒரு புது நம்பிக்கையை அந்தக் கட்சி வட்டாரத்தில் ஏற்படுத்தும் விதமாக, ஆகஸ்ட் புரட்சிப் பொன் விழா நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார்.

'மானத்தோடு-மரியாதை யோடு வாழ்வோம்', 'கூட்டணி என்றாலும் மரியாதை இருக்க வேண்டும்', ஆட்சியின் முறைகேடுகளை எதிர்த்துச் சண்டைபோட வேண்டும்' என்றெல்லாம் மூப்பனார் பேசியுள்ள பேச்சு, 'அ.தி.மு.க. ஆட்சிக்கு உண்மையான எதிர்க்கட்சியாக இனி காங்கிரஸ் செயல்படும்' என்ற கருத்தைத் தெரிவிப்பதாக அமைந்திருக்கிறது.

கூட்டணி அரசியலைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகவே பேசிய மூப்பனார்; 'காமராஜர் காலத்தில் கூட்டணி கிடையாது. அதை இந்திரா தொடங்கி வைத்தார். கூட்டணி கிடையாது. அதை இந்திரா தொடக்கி வைத்தார். கூட்டணி என்றாலும் ஒரு மரியாதை வேண்டும்' என்று தெரிவித்தார். தி.மு.க.-அ.தி.மு.க.-வைப் பொறுத்தவரையில், 'இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்ற காமராஜரின் கருத்தை இப்போது மூப்பனார் கையில் எடுத்திருப்பதாகத் தான் சொல்ல வேண்டும். இப்போதும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருக்கிறது. அஜீத்சிங் கோஷ்டியின் ஆதரவு நிச்சயிக்கப்பட்டால், அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஆதரவு அவ்வளவு அத்தியாவசியமானதாக இல்லாமல் போகலாம்.

'சண்டை போட்டுத்தான் ஆக வேண்டும் என்றால் போடுங்களேன்' என்று பிரதமர் நரசிம்மராவ் கூறிவிட்டதாக மூப்பனார் பேசியிருக்கும் சூழ்நிலையில் ஜெயலலிதாவுக்கு எதிராகக்கூட 356-வது சட்டத்தை



காங்கிரஸ் பயன்படுத்த வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. சட்டம்-ஒழுங்கு முதல் லஞ்ச ஊழல் வரை காரணம் காட்டவும் பல விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக காங்கிரஸ் யாருக்கு எதிராகவெல்லாம் 356-வது சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கிறதோ அந்தக் கட்சிகளெல்லாம் அடுத்த ரவுண்டில் மறுபடி உயிர்பெற்று வந்த வரலாறும் மூப்பனார் மறக்க முடியாத வரலாறேயாகும். இப்படிப்பட்ட நிலைமையில், 356-வது சட்டம் போன்றவற்றையும் பயன்படுத்தாமல்- மக்களிடம் கிராமம் கிராமமாகச் சென்று, தமிழக நலன்களைப் பாதுகாக்க ஏற்ற கட்சி காங்கிரஸ்தான்' என்று அவர்களைத் தகுந்த காரணம் காட்டி ஏற்கவும் செய்து, கட்சியை வளர்த்து ஆட்சியைப் பிடிப்பதற்கு மூப்பனார் களத்தில் இறங்கியிருக்கிறார் என்று கருதினால்- உண்மையிலேயே சுவாரஸ்யமான சவால் தான்!

நமது
சென்னை நிருபர்

# தெய்வம் தந்த வீடு.....

சென்னையின் நடைபாதைகளில் வசிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை மட்டுமே சுமார் இருபத்தேழாயிரத்துக்கும் மேல் இருக்கும் என்று கூறுகிறது ஒரு புள்ளிவிபரம். இந்தச் சிறுவர்கள் அனைவருமே தத்தம் பெற்றோருடன் நடைபாதையில் வசிப்பவர்களா என்றால் இல்லை. பெரும்பாலும் பெற்றோரை இழந்த ஆதரவற்ற குழந்தைகள், குடும்ப வறுமை மற்றும் மனஸ்தாபத்தினால் வீட்டைப்பிரிந்து வந்தவர்கள், சினிமா ஆசையினால் சென்னைக்கு ஓடி வந்தவர்கள் என்று அனைத்து ரகத்தினரும் இருக்கிறார்கள். எத்தனையோ குப்பைக் காகிதங்கள் சேகரிக்கும் சிறுவர்கள் இன்று டிரைவர்களாகவும், மெக்கானிக்குகளாகவும் உருவாகியிருக்கிறார்கள். குப்பைத் தொட்டிகளில் காகிதம் சேகரித்துத் தன் வயிற்றுப்பாட்டைக் கவனித்தபடியே (சினிமா மேலுள்ள ஆசையால்) தனியார் திரைப்படப் பயிற்சி நிலையம் ஒன்றில் டைரக்ஷன் படித்து முடித்த இளைஞரும் கூட இவர்களில் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SHANKAR

## On Our First Anniversary

*We take the opportunity of expressing our gratitude and most sincere thanks to the thousands of you who gave us your patronage over the past twelve months and solemnly promise that in the years to come we will serve you in the same manner.*

## VISIT US TODAY

GENEROUS DISCOUNTS!

*In every thing*

**RETAIL AND WHOLESALE**

***RICE, RICE FLOUR, CURRY POWDER ETC. * JAMS, CORDIALS, FRUIT DRINKS ETC. *FROZEN SEA FOOD *FRESH VEGETABLES *SRI LANKAN KITCHEN UTENSILS AND DINING SETS *SAREES, SARONGS AND DRESS MATERIALS *SRI LANKAN AND SOUTH INDIAN NEWSPAPERS AND MAGAZINES *AUDIO & VIDEO CASSETTES AND CDs IN TAMIL, SINHALA, TELUGU AND MALAYALAM**

**SHANKAR & CO LTD**

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX. U.K.

TEL: 081-426-8960 FAX: 081-861 5248


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# வெளிநாட்டு தலையீடு இன்றி இனப்பிரச்னைக்கு தீர்வு கடினம்

## சங்கர் ராஜி செவ்வி

'ஈரோஸ்' இயக்கத்தின் தலைவர் திரு சங்கர் ராஜி அண்மையில் லண்டன் வந்திருந்தார். அண்மையிலே உருவாக்கப்பட்ட ஏழுகட்சிக் கூட்டிலே தம்மையும் இணைத்துக்கொண்டு நாலு அம்சத் திட்டம் ஒன்றிலே அரசாங்கத்துடன் தமிழரின் சில அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணமுயலும் அவரிடம், அங்குள்ள தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் அதில் அவரது இயக்கம் குறித்தும் சிலவற்றை கேட்டோம். - மாலி

**'ஆயுத போராட்டம்' என்பதை 'ஈரோஸ்' கைவிட்டு விட்டதாக அண்மையில் இலங்கைப் பத்திரிகை ஒன்றில் நீங்கள் தெரிவித்திருந்ததைப் பார்த்தோம். அப்படித் தானே?**

ஆம்; எங்களது அரசியல் இலக்கை அடைவதற்கு ஆயுதப்போராட்டம் ஒரு வழிமுறை என்பதை நாம் கைவிட்டுவிட்டோம். 1987 இல் ஏற்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு விளைவாக



ஆயுத ஒப்படைப்பு ஏற்பட்டது. எனின் பிரதான அரசியல் ஓட்டத்தில் எம்மை இணைத்துக்கொண்டு, அதன் மூலம் ஒரு தீர்வை அடையலாமா என்று எண்ணுகிறோம். கூடுதலாக இந்திய அரசின் நிர்ப்பந்தம்தான் எமது இந்த நடவடிக்கைக்கு காரணம். இந்தப்பாதையில் முழுக்க முழுக்க வெற்றி கிடைக்கும் என்று நாம் நம்பவில்லை. இருப்பினும் இதற்குக் காரணமான இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் அடிப்படைத் தீர்வுகளுக்கான சில அம்சங்கள் இருக்கின்றன, இந்திய அரசாங்கம் பின்னணியில் நிற்கிறது என்பதால் இந்த முடிவுக்கு நாம் அப்போது வந்தோம்.

**இப்படியொரு முடிவுக்கு வந்ததையிட்டு இப்போது நீங்கள் வருத்தப்படுகிறீர்களா?**

ஆயுத ஒப்படைப்பு என்பது வரலாற்றில் எங்குமே வெற்றிகண்ட ஒன்றல்ல. பொதுவாக 50 வீதமானதை ஒப்படைத்துவிட்டு, மீதி 50 வீதத்தையும் பாதுகாப்புக்காக வைத்துக் கொள்வதுதான் எங்கும் உண்டு. இப்போது ஜனநாயக ரீதியில் சில பேச்சுவார்த்தைகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இவை உற்சாகமாக இல்லாவிட்டாலும் உதாசீனப் படுத்தப்படவில்லை. அப்படி எமது ஜனநாயக முயற்சிகள் தோல்வியை நோக்கும் என்றால் எமது முடிவையிட்டு நாம் வருத்தமுறும் நிலை ஏற்படவே செய்யும்.

**உங்களது கட்சியின் பாராளுமன்ற நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன?**

இப்போது 'ஈரோஸ்' எம்.பிக்கள் இருவர் இருக்கிறார்கள். அந்த நிலைமை ஓர் உள் பிரச்னை. அல்லாவிட்டால் 13 எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் இருந்திருப்பார்கள். அவர்கள் அங்கு என்ன சாதித்திருப்பார்கள் என்பது வேறு விடயம். ஆனால், 1990 யூனில்'இனி பாராளுமன்ற பங்களிப்பு இருக்கக் கூடாது' என்ற வற்புறுத்தல் புலிகளிடமிருந்து வந்தது.

**விடுதலைப்புலிகளுக்கும் உங்களுக்குமிடையே ஏதாவாது உடன்பாடுகள்- புரிந்துணர்வுகள் உண்டா?**

எழுத்துமூல உடன்பாடு எதுவும் இருந்ததில்லை. இந்திய இராணுவம் ஒருபுறமும், விடுதலைப்புலிகள் ஒரு புறமுமாக இருந்த அந்த நேரத்தில் எமது தேர்தல் பங்களிப்பு சந்தர்ப்ப சூழ்நிலையால் ஏற்பட்ட ஒன்றே. அப்போது 'ஈரோஸ்' தேர்தலில் பங்குகொள்ளாவிட்டால் பாரதூரமான விளைவுகள் இந்திய இராணுவம்- ஏனைய அமைப்புகள்- மாநில அரசு ஆகியவற்றிடையே எழக்கூடிய ஒரு நிலைமை இருந்தது. இதைத் தவிர்க்கவும்- எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை என்று ஒரு நிலை வரும்போது அதற்கு ஏற்றாற் போலவும் தான் இந்த முடிவைநாம் எடுத்தோம். அப்போதுகூட புலிகள் ஒரு சில இடங்களில் ஆதரவு, ஒருசில இடங்களில் முடிவெடுக்காத நிலை, ஒருசில இடங்களில் எதிர்ப்பு என்ற நிலை இருந்தது. மக்களும் இதனை அறிவார்கள்.

**இரு இயக்கங்களிடேயும் தலைமைப்பீடங்களுடன் ஏதாவது உடன்பாடுகள் உண்டா?**

இல்லை. உடன்பாடு இல்லை. ஆனால் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தினோம். எமது நிலைப்பாடு, ஏன் நாங்கள் தேர்தலில் நிற்கிறோம் என்பதுபற்றி தெரியப்படுதினோம். ஆனால் அது சரி-பிழை; செய்யுங்கள்- செய்யாதீர்கள் என்று அவர்களும் சொல்லவில்லை. அதைக்கேட்டு நடக்கும் ஒரு நிலையில் நாமும் இருக்கவில்லை.

ஆரம்பத்திலிருந்தே, 1975-76 இலிருந்தே ஈரோஸ்- புலிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. அதுமட்டுமல்ல, சில திட்ட அடிப்படையில் ஒரு கட்டத்தில் நாம் ஒன்றாக செயல்பட்டோம். எதிர்காலத்தில் ஒரே அமைப்பாக ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கும் என்ற ஓர் எதிர்பார்ப்பும் அப்போது இருந்தது; ஆனால் இடையிலே ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்கிற அமைப்பு வடிவமொன்று சென்னையிலிருந்து செயல்பட்டு வந்தபோது ஈரோஸ், எல்ரிரிஈ, ஈபிஆர்எல்எவ், ரெலோ என்பன அதிலிருந்தன.

அப்படியாக, ஈரோஸுக்கும் புலிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தே வருகிறது. தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி புலிகள் பகிரங்கமாக அறிக்கை விடுத்திருந்த ஒரு வேளையில் நாம் தேர்தலில் நிற்க முனைந்தோம். எனவே, அத்தகைய

# இராணுவரீதியான தமிழ் வெற்றி இன்று மாறிவிட்டது

ஒரு சூழலில் மோதல்கள் ஏற்படாதிருக்கும் வகையில் சில தொடர்புகளை நாம் அவர்களுடன் கொண்டேயிருந்தோம்.

**புலிகள் பலம் வாய்ந்தவர்கள்; அதனால் ஒரு தந்தரமாக அவர்களுடன் உறவு வைத்திருக்கிறீர்கள் என்றால்...?**

இயக்க நலனை- தோழர்களைப் பாதுகாக்க வேண்டும்; அதே நேரத்தில் குறிக்கோளை முன்னெடுப்பதற்கு என்னென்ன வழிவகைகளை கையாள வேண்டுமோ அவற்றையும் கையாள வேண்டும். அதில் ராஜதந்திரம்- சூட்சுமங்கள் இருக்கலாம்; மறுக்கவில்லை. ஆனால் அதனால் புலிகளை தவறான ஒரு பாதையில் கொண்டு சென்று விடவேண்டும் என்ற மாதிரியான ஒரு நோக்கம் ஒருபோதும் இருக்கவில்லை.

**இந்த நடவடிக்கைகள் எல்லாம் ஈரோஸின் ஒருமித்த கருத்தானவையா?**

கருத்துவேறுபாடுகள் எங்கும் உண்டு. ஜனநாயகபோக்கு எமது அமைப்பில் தாராளமாக இருக்கிறது. தனிமனிதன் கட்சி; அல்லது சர்வாதிகாரத்தனம் என்ற நிலைமை எம்மிடம் இல்லை. மத்திய குழுவிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கும். ஆனால் முடிவெடுக்கும்போது கலந்தாலோசித்து- கட்டுப்பட்ட- இயக்க முடிவாகவே அவை இருக்கின்றன.


மற்றைய இயக்கங்களை பகிஷ்கரிக்கும்படி கூறி, அல்லது அவற்றைத் தடைசெய்த நிலையில், 'ஈரோஸ் செயல்படக்கூடாது' என்ற நிலை புலிகளைப் பொறுத்தவரையில் '90 யூன் வரை இருந்ததில்லை. வேறுபாடுகள்- பிரச்னைகள் இருந்தன. ஆனால் அவற்றைப் பேசித் தீர்த்துச் செல்கின்ற நிலை இருந்தது- மக்கள் மத்தியிலும் அந்த எதிர்பார்ப்பு இருந்தது. புலிகளும் ஈரோஸும் இராணுவம், அரசியல் என்ற ரீதியில் ஒருவிதமாக பிரச்னையை முன்னெடுப்பார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தது.

**'90 யூனில் ஏன் அந்த மாற்றம் வந்தது?**

இந்திய இராணுவத்தை வெளியேற்றியதிலிருந்து, புலிகள் இனி அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நிலை வந்த போது, ஈரோஸ் பாராளுமன்றத்தில் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக பிரதிநிதித்துவமும் தலைமையும் தன்னுடையதே என்று காட்டிக் கொள்வது இடையூறானது. 'வேறு இயக்கங்கள் இருக்கக்கூடாது' என்பதை ஒரு நிபந்தனையாக வைத்தே புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தையை நிகழ்த்தினார்கள்.

**புலிகளுடைய இப்போதைய நிலைமை என்ன?**

புலிகள் தொடர்ந்து போராடினாலும் இராணுவ வெற்றி அவர்கள் பக்கம் இருக்காது என்பது எல்லோரும்- அநேகமாக அரசியல் ஆலோசகர்கள் ஏற்றுக்கொள்கின்ற நிலைமை. முழுக்க முழுக்க இராணுவ ரீதியான தமிழரின் வெற்றி என்பது இன்று மாறிவிட்டது. பேசித்தான் ஒரு தீர்வுக்கு வரவேண்டும் என்ற நிலையே இன்று இருக்கிறது.



**எப்படி அந்த பேச்சுவார்த்தை அமைய வேண்டும்?**

இன்றைய நிலையில் போராட்டத்தில் பங்களித்த எந்த இயக்கத்தையும் தள்ளிவைக்க இயலாது. அவர்களின் எதிர்கால பங்களிப்பு எப்படியிருக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். ஆனால் பேச்சுவார்த்தை என்னும் போது அதில் எல்லோரும் பங்குகொள்ள வேண்டும். அதற்காக எல்லோரும் ஒரே மேசையில் இருந்தே பேசவேண்டும் என்பது இல்லை. பூர்வாங்க பேச்சுகளை வேண்டுமானால் புலிகளுடன் தனித்தும் பேசலாம். ஆனால் ஒரு முழு அளவிலான பேச்சுக்கள் எல்லோரும் இணைந்தாகவே இருக்கவேண்டும்- இருக்கும்.

**தொடர்கின்ற இப்போராட்டத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள். சாதித்தவை... சாதிக்க தவறியவை என்ன?**

தமிழ் சமூகம் ஒரு பொறுப்பு வாய்ந்த தலைமையை உருவாக்க வில்லை. அதில் அவர்களுடைய ஈடுபாடு இருக்கவில்லை. 1983இல் போராட்டம் சடுதியாக வீக்கமடைந்து இந்தியாவின் அரவணைப்பும் இருந்த அவ்வேளையில் மக்களின் நேரடிப்பங்கு இருக்கவில்லை.

**அப்படியான வாய்ப்பு அவர்களுக்கு இருந்ததா?**

வெளிநாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்குத்தான் அப்படியொரு தலைமையை வார்த்தெடுக்கும் வாய்ப்புகள் அப்போது இருந்தன. அப்படி பொறுப்பு வாய்ந்த ஒரு தலைமை இல்லாமைதான் இந்தியாவும் பின்னர் நம்மை பயன்படுத்துவதற்கு வாய்ப்பாகியது. இந்த நிலையில், இயக்கங்களுக்கிடையே நேரடி மோதல்களை உருவாக்கி புலிகள் தாமே இன்று பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்கள். ஆனால் ஏகபோக தலைமையையும் உரிமையையும் என்பதை ஈரோஸ் எப்போதுமே ஏற்றுக்கொண்டதில்லை. மக்கள் முடிவு செய்ய வேண்டியது அது.

மற்றையது, மனோதிடம், தியாகம், விசுவாசம் என்பன எல்லாம் இருந்தாலும் எம்முடைய போராட்டத்தில் ஒரு நீண்டகால திட்டம் இருக்கவில்லை. ஈழம் ஒன்று உருவாகலாம் என்பதில் ஓர் ஊறுதியான நம்பிக்கை இருந்ததே தவிர சர்வதேச ரீதியில் அது எப்படியிருக்கும் என்பதில் நாம்

(14ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காத்திருந்த வேளையில்...

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைப்பற்றிப் பேசப்படும் கீர்த்தி-அபகீர்த்திகளின் பின்னணியில், ஒரு எம்.எல்.ஏ.யிடம் வேலைக்கு சிபார்சு தேடிப்போய்க் காத்திருந்த ஓர் இளைஞன் நேரில் கண்ட காட்சிகளை வருணிக்கும் கதை இது. இதில் கதையம்சம் என்று எடுத்துச் சொல்ல எதுவுமில்லை. எம்.எல்.ஏ.வீட்டு வாசலில் புளியமரத்து நிழலில் காத்திருந்தவர்களின் அநுபவங்களை வருணிக்கும் காட்சிதான் இது.

சிறுகதை

கனிவண்ணன்

அவனைப் போலவே இன்னும் பலர் காத்திருந்தார்கள். அதிகாலையிலேயே வந்திருந்தால் பார்த்திருக்லாம். இந்நேரம் வீட்டிற்கும் திரும்பியிருக்கலாம் இங்கே வர வேண்டாம், வரக்கூடாது என்றே முதலில் எண்ணினான். அப்பா போட்டசத்தமும் கூச்சலும் அவனை இங்கே கொண்டு வந்து நிற்க வைத்துவிட்டது.

“இந்தக் காலத்தில் ஒரு எம்.எல்.ஏ. சிபாரிசு லேசுப்பட்டகாரியமா! அவனவன் பண மூட்டையோட அலையுறான். நம்ப ஜாதிக்காரர், அதனாலே ஒரு பைசா வாங்காம ரெக்கமெண்ட் செய்ய சம்மதிச்சிருக்கார். ஒரு தடவை பார்த்திட்டு வர்றதினாலே குறைஞ்சிடமாட்டே. ‘நான் இன்னாரு மகன். அப்பா உங்களைப் பார்த்திட்டு வரச்சொன்னார்’னு ஒரு வாய் வார்த்தை சொல்லிட்டு வந்தாத்தானே மரியாதை” அவன் முகத்தை நேரிட்டுப் பார்க்காமல் கத்தினார். அவர் மேலும் சொன்ன வார்த்தைகள்...

கோழி கூவியபோதே கருப்புக் காப்பியுடன் எழுப்பிவிட்டாள் அம்மா. கோனார் ஆறு மணிக்கு வருவார். பிறகு புறப்பட்டால் கள்ளி சொட்டு காபி குடித்துவிட்டுப் போகலாம்.

“பொழுது விடிஞ்சதும் கிளம்புறேனே, அம்மா.”

“இப்பேயே போனாத்தான் அவர் வெளியே புறப்படறத்துக்குள் பார்த்துடலாம். நம்ம போல மனுஷரா... எவ்வ ளவோ வேலை இருக்கும். எத்த னையோ பெரிய மனுஷங்க பார்க்க வந்திருப்பாங்க. சுருக்கா போயிட்டு வெயிலுக்கு முன்ன திரும்பு.”

எரிச்சலுடன் எழுந்தான். முகங் கழுவி சட்டையைப் போட்டான். அம்மா டம்ளருடன் நின்று கொண்டிருந்தாள். திரும்பிப் பார்க்காமல் வேலிப் படலைத் திறந்து வேகமாக அடித்துச் சாத்திவிட்டு தெருவில் நடந்தான்.

‘கேவியெம்” சைக்கிள் கம்பெனி கோதண்டம் என்ற கோது கயிற்றுக் கட்டிலில் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். தூக்கத்தைக் கெடுக்க பாவமாக இருந்தது. மெதுவாக எழுப்பினான்.

“அண்ணே...அண்ணே..”

“யாரு,” கோது கண்ணைக் கசக்கினார். “வேலனா...?’

“ஆமாம். சைக்கிள் ஒன்னு வேணும்.”

“இந்த நேரத்திலே எங்கே கிளம்பிட்டே?” தலையணையின் கீழிருந்த சைக்கிள் கடை சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தார்.

“ஏழாம் நம்பர் நல்லாயிருக்கும். அதை எடுத்துக் கிட்டுப்போ.”

கதவைத் திறந்து லைட்டைப் போட்டான். பெருச்சாளிகள் விழுந்தடித்து ஓடின. ஏழாம் நம்பர் சைக்கிளை வெளியே எடுத்து, கதவை மூடி பூட்டினான். கோதுவின் தூக்கத்தைக் கலைக் காமல் தலையணையைத் தூக்கி சாவியை வைத்துவிட்டுப் புறப் பட்டான்.

வேகமாக வந்திருந்தால் ஆறு ஆறரைக்கு வந்திருக்கலாம் ஐந்து மைல் தூரம். அதிகமாகப் போனால் ஒரு மணி நேர ஓட்டம். வலப்பாற்றைக் கடக்கும்போது பொழுது விடிந்தது. காலைக் கடனை முடித்துக்கொண்டான். அதிகாலை அமைதியை அனுபவித்தான். எதிரே யாரும் வரக் கூடாது என்று வேண்டிக் கொண்டான். எல்லாருமே துக்கம் விசாரிப்பது போல கேள்வி கேட்கிறார்கள்.

“இன்னும் சும்மாதான் இருக்கியா?”

“கடவுள் கண்ணைத் திறக்கமாட்டேங்கிறானே!”

“உங்க அப்பாவைப் பார்த்தா பாவமா இருக்கு. எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வெச்சாரு...”

ஆறுதலுடன், நம்பிக்கை தரும் படியாய் யாரும் இதுவரை பேசியதே இல்லை.

இப்போதெல்லாம் யார் என்ன கேட்டாலும் பதில் சொல்வதில்லை என்ற முடிவெடுத்திருந்தான். எல்லாக் கேள்விகளுக்கும் புன்னகையே பதில். அது சோகம் கலந்ததா, உணர்ச்சியற்றதா என்று யாரும் யோசித்ததில்லை. ‘பாவம். தம்பி மனம் ஒடைஞ்சு போயிருக்கான்’ என்று நினைத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

அய்யனார் கோவில் திடலைத் தாண்டினான்.

“யாரு தேவர் மவனா. காலங்காத்தாலே எங் கேப்பா கிளம்பிட்டே?”

திரும்பிப் பார்த்தான். கிரீச் கிரீச் சைக்கி ளில் மாட்டுத் தரகர் முத்தையா. சமீப காலத்தில் நல்ல வேட்டை. சிலோன் கைலி பளபளத்தது. அதன் மேல் கையகல பச்சை நிற பெல்ட்.

மழையில்லாததால் புல் பூண்டு கருகிப் போனதாலும், தீவனம் விற்ற விலைக்கு பயந்துப் பலரும் கால்நடைகளை விற்றுக் கொண்டிருந்தார்கள். எல்லாம் அடிமாடுகளாக மேற்கு நோக்கிப் போயின.

அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் “யாவாரம் எப்படி அண்ணே இருக்கு?” என்றான்.

ஆமாம் போ. அடிமாடு பிடிக்கிறதெல்லாம் ஒரு தொழிலா?” அலுத்துக் கொண்டார்.

“அது போவட்டும். நீ எங்கே இந்நேரத்திலேயே கிளம்பிட்டே?”

“எம்எல்ஏ ஐப் பார்க்கப் போறேன். ஒரு வேலை விஷயமா அப்பா போயிட்டு வரச் சொன்னாங்க. பஞ்சாயத்து யூனியன்லே வேலை காலியா இருக்காம்.”

“அப்பா நேத்து சொன்னிச்சு. நீயும் எங்கே எங்கேயோ அலைஞ்சுதான் பாக்குற. ஒன்னும் திகையமாட்டேங்குதே.”

அவன் சைக்கிளை வேகமாக மிதித்தான். ஈடு கொடுக்க முடியாமல் முத்தையா பின்தங்கி விட்டார். திரும்பிப் பார்த்தான். கண் பார்வையிலிருந்து மறைந்திருந்தார்.

இதுவரை ஒரு இடத்துற்குக் கூட வேலைக்காக அவன் அலைந்ததில்லை. அதனால் எந்த பயனும் இல்லை என்று அவன் நம்பினான்.

தேர்தலின் போது மிகக்குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் எம்எல்ஏ ஜெயித்தார். அவர் ஜெயித்ததே தன்னால்தான் என்று அப்பாவின் எண்ணம். அப்பாவிற்கு ஊரில் மரியாதை உண்டு. ஒவ்வொரு வீடாகச் சென்று கூறினார். “அவரு நம்ம ஜாதிக்காரர். ஜெயிச்சார்னா நமக்கு நன்மை செய்வார்- அவர் பேச்சைமதித்து எல்லாரும் ஓட்டுப் போட்டார்கள். இருநூத்திப் பத்து ஓட்டில் எம்எல்ஏ ஆனார். பாராட்டுக் கூட்டத்திற்கு வந்திருந்தவரிடம், ‘எம்மவன் பிகாம் படிச்சிட்டு நாலு வருஷமா வீட்டிலே இருக்கான். நீங்கதான் ஒரு வழி செய்யணும்”- அப்பா கைம்மாறு கேட்டார்.

“உங்களுக்கு இல்லாமலா... நீங்க இல்லாட்டி நான் ஏதுங்க. இந்தப் பதவியே நீங்க போட்டது. எங்கேயாவது வேலை காலியா இருந்து தெரிஞ்சுதுன்னா உடனே வாங்க மத்ததை நான் பாத்துக்கறேன்.” எம்எல்ஏயின் வார்த்தைகளைக் கேட்டதும் அப்பா உச்சி குளிர்ந்து போனார்.

அப்பாவும் ‘அதுதான் சரி’ என்றெண்ணினார். ‘எம்எல்ஏ பல ஜோலிக்காரர். அவருக்கு எங்கே வேலை காலியா இருக்குமென்று தெரிய நியாயமில்லை. நாம்தான் கண்டுபிடிக்கணும்.’

அப்பாவின் ஆத்மார்த்த ஸ்நேகிதர் போஸ்ட் மாஸ்டர். அவரிடம் ஆலோசனை கேட்டார். இரயில்வே நிலையம் போனார். ஸ்டேஷன் மாஸ்டரிடம் அழாத குறையாக முறையிட்டார். அவரோ தமாஷ் பேர்வழி. “தேவரே விஷயம் தெரியுமா! நம்மது சென்ட்ரல் கவர்மெண்டு, எம்எல்ஏ பருப்பு இங்கே வேகாது” என்றார்.

பின்னர் ஒரு நாள் போஸ்ட் மாஸ்டர் ஓடிவந்து கூறினார்: “நம்ப பஞ்சாயத்து யூனியன்லே ஒரு இளநிலை உதவியாளர் வேலை காலியா இருக்காம். எம்எல்ஏ மூலமா ஏற்பாடு செய்யுங்க.”

அப்பா எம்எல்ஏயிடம் ஓடினார். அவர் என்னா சொன்னாரோ, வீட்டுக்கு வந்ததும் அவனை அவசரப் படுத்தினார். ‘பணம் கொடுத்தாலொழிய எந்த வேலையும் கிடைக்காது’ என்று அமைதியாக எடுத்துக் கூறினான்.

அவருக்கு அடக்க முடியாத கோபம்.

‘தெண்டச்சோறு தின்னுக் கிட்டே, வீட்டு நிழல்லேயே இன்னும் எத்தனை நாளைக்கு குந்தியிருக்க நினைக்கிறே...’

உஷ்ணமான வார்த்தைகள் உள்ளத்தில் ஊடுருவி இரத்தத்தைக் கொதிக்க வைத்தன. அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

மணி பத்துக்கும் மேலாகிவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. சிலர் வெளியில் போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

எம்எல்ஏ வீடு ஊருக்கு ஒதுக்கமாக இருந்தது. விஸ்தாரமான கொல்லை. வாசலில் பெரிய புளியமரம். வீட்டின் பின்புறம் தென்னையும் வாழையும் நிறைந்திருந்தன. அதனை அடுத்து நெல் வயல். வளர்ந்த நாற்று, அப்போது தான்நட்டது, கதிர் விட்டது, சாய்ந்து படுத்தது, இப்படி பல நிலைகளில். போரிங் செட் மூலைக்கொன்றாக தண்ணீரை வாரிக்கொட்டிக் கொண்டிருந்தன. தற்போது இருந்த பெரிய ஓட்டு வீட்டின் இடதுபக்கம் புதுவீட்டிற்கு அடித்தளம் போடப்பட்டிருந்தது.

“எம்எல்ஏ எப்போ வருவாங்க?”

புளியமரத்தின் வேரில் குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்த தலைப்பாகை கட்டிய பெரியவர் கேட்டார்.

“யாருக்குத் தெரியும்? நானும் உங்களைப் போலத்தான் காத்திருக்கேன்” பக்கத்தில் நின்று கொண்டிருந்த பேண்ட் போட்ட ஆள் அலுத்துக் கொண்டார். மாறுதல் வாங்கவோ, வந்த மாறுதலை தடை செய்யவோ வந்திருப்பார் போலிருக்கிறது. முகத்தில் சிந்தனையும் ஒருவித இறுக்கமும் இருந்தன.

வேலி ஓரத்தில் பல் குத்திக் கொண்டிருந்த துண்டு போட்டவர் திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் வைத்திருந்த கருப்புத் தோல் பையைக் கையில் எடுத்துக்கொண்டு அருகில் வந்தார்.

“ஒரு திருட்டு கேஸ் விஷயமா அண்ணன் போலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிருக்காரு. இப்ப வந்திடுவார்.”

தகவல் தந்ததுடன் நிற்காமல் மேலும் அவரே விவரித்தார்: ‘முந்தாநாள் ராத்திரி மங்களம் சோழகர் வீட்டுக் கொட்டகையில்ல கட்டியிருந்த இரண்டுஜோடி உழவுமாடுகளைக் காணோமாம். ஜோடி மூவாயிரம் பெறும். நேத்தி பூரா சுத்து வட்டாரத்தையே அலசியாச்சு. கிடைக்கவில்ல. காலையில சோழகர் வந்து சொன்னாரு. அவரு வேறக் கட்சி தான். இருந்தாலும் எம்எல்ஏயோட சொந்தம் இல்லையா! அதான் போலிஸ் ஸ்டேஷன் போயிருக்காரு.’

‘சாதிக்காரங்க மேலே எப்பவும் பற்றுதல் உண்டு. அவரு கள்ளரு! நாம தேவமார். முக்குலத்தோர் மாநாட்டுலே நாம எல்லாரும் ஒரே ரத்தம்னு பேசினார் தெரியுமா! நீ அங்கேயெல்லாம் எங்க வர்றே?’- அவன் அப்பா சொன்னது நினைவிற்கு வந்தது.

மேலும் கும்பல் சேர்ந்தது. பாதிப்பேருக்குப் புளிய மரத்தின் நிழலே இடம் தந்தது. மிகவும் முக்கியமானவர்கள், வெள்ளை வேட்டி, சட்டை போட்டவர்கள் மட்டும் வீட்டின் முன்னால் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தார்கள். சிலர் கொல்லைப்பக்கம் போய் வயல் வேலைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த

(13ம் பக்கம் பார்க்க)






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காத்திருந்த வேளையில்...

12ம் பக்கத் தொடர்ச்சி..

எம்எல்ஏயின் தங்கையிடம் நலம் விசாரித்து விவசாயம் பற்றிய அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். தாங்கள் எம்எல்ஏயின் குடும்பத்துடன் நெருக்க மானவர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதில் அவர்களுக்கு மிகுந்த ஆசை.

புளிய மரநிழலில் ஒரு அழகியும் வந்து சேர்ந்தாள். கைப்பையை விம்மிய மார்பில் சேர்த்தணைத்து, கழுத்தில் போட்டிருந்த தங்கச் சங்கிலியை வாயில் வைத்து முன் பல்லால் கடித்துக்கொண்டு மருட்சியுடன் நின்றாள். அவளும் தன்னைப்போல வேலை தேடி வந்திருக்கலாம், ஏன் தனக்கே போட்டியாகக் கூட வந்திருக்கலாம் என்று அவன் நினைத்தான்.

'உனக்கு எந்த வூர் அம்மா... எம்எல்ஏஐப் பார்க்க வந்திருக்கியா?" பெரியவர் கேட்டார்.

வாயைத் திறக்காமல் தலையை மட்டும் மேலும் கீழும் ஆட்டினாள்.

"வேலை விஷயமாவா?"

இல்லை என்பதற்கு குறியீடாக பக்கவாட்டில் தலையை ஆட்டினாள். 'பேசமாட் டாளா! அழகியின் குரல் எப்படி இருக்கிறது பார்க்கலாம்' என்ற ஆசையில் சுற்றியிருந்தவர்கள் கவனித்தார்கள்.

"அப்புறம் எதுக்கம்மா வந்திருக்கிங்க?" பெரியவரின் கேள்வியைக் கேட்டதும், விடுவிடுவென்று பந்தலை நோக்கி நடந்தாள்.

"அது வேற விஷயங்க..." பேண்ட் போட்டவர் கூறினார்.

"அம்மா மாட்டிக் கிட்டாங்க" நமட்டுச் சிரிப்புடன் கண்ணைச் சிமிட்டினார். அவர் முகத்தில் இருந்த இறுக்கம் எங்கோ பறந்தது.

"சத்துணவு ஆயாவா வேலை பார்த்தாங்க. வேலையை எப்படி வாங்கினாங்கன்னு கேட்டா, அது ஒரு கதை. ஊர்ல கேட்டா, விதம் விதமா சொல்லுவாங்க. டாக்சியில போனது, வெளியூர்ல தங்கினது, இப்படி. சரி எப்படியோ வேலை வாங்கினாங்க. வாங்கின வேலையை காப்பாத்திக்க வேண் டாமா. அரிசி, பருப்பு, பாம் ஆயில் எல்லாம் அபேஸ் பண்ணி நைலக்ஸ், உள்ளி உள்ளி, ஃபாரின் புடவைங்க. செண்ட்பாட்டில் எல்லாம் வாங்கினாங்க. கழுத்துல எத்தனை நாளைக்குப் பாசி மணி மாலை போடறது! தங்கத்தில் மாட்டினாங்க. திடீர்னு ஆபிசருங்க சோதனை போட வந்தாங்க. அம்மா மாட்டிக்கிட்டாங்க."

"அம்மா மாட்டிக்கிட்டாங்க" ராகத்தோடு சொன்னார்.

"இந்த நாள்ல வேலை கிடைச்சதே பெரிய காரியம்; கிடைச்ச வேலய தக்கவெச்சிக்க வேண்டாமா...? பெரியவர் தலையில் அடித்துக்கொண்டார்.

"இதெல்லாம் தெரிஞ்சு வெச்சிருக்கீங்களே நீங்க யாருங்க?" அவன் கேட்டான்.

"அந்தக் பொண்ணு வேலை பார்த்த ஊரிலதான் கிராமநல ஊழியரா வேலை பார்த்தேன். என்னை மாத்திப் புட்டானுங்க. எம்எல்ஏயிடம் சொல்லி ஆர்டரை கேன்சல் பண்ணி, என் டிரான்ஸ்பருக்கு காரணமான வனுங்கள ஒரு கை பார்க்கலா முன்னு வந்திருக்கேன்."

அவன் 'அனுமானம் சரிதான்' என்று எண்ணினான்.

தூரத்தில் மோட்டார் சத்தம் கேட்டது. பந்தலில் குந்தியிருந்த பெரிய மனிதர்கள் எழுந்து நின்று வேட்டி சட்டையைச் சரிசெய்து கொண்டார்கள். துண்டு போட்ட வர்கள் அதை எடுத்து உதறி மடித்து கழுத்தைச் சுற்றிப் போட்டு அழகு பார்த்துக்கொண்டார்கள்.

புளிய மரத்தடி கும்பலும் வராத புன்னகையை வரவழைத்துக் கொண்டு கும்பிடு போடத் தயாராக இருந்தது. சத்தம் அருகில் வரவர அவனுக்கும் நெஞ்சு படபடத்தது. எம்எல்ஏ வந்தவுடன் முதல் ஆளாகப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட நினைத் தான். இருக்கிற கூட்டத்தைப் பார்க்கும்போது, அது நடக்கிற காரியமில்லை என்று எண்ணினான்.

எல்லாரும் தயாராகக் காத் திருக்கும் போது, வந்தவர் எம்எல்ஏ இல்லை. ஒன்றியப் பெருந்தலைவர். ஒன்றிய ஜீப்பில் வந்து இறங்கினார்.

"நம்ப சேர்மன். எம்எல்ஏயும் அவரும் ஒரே ஜாதிங்க. சேர்மன் சீட்டே நம்ப எம்எல்ஏதான் வாங்கிக் கொடுத்தார்."

யாரும் கேட்காமலேயே கருப்புப் பை அளந்தார்.

சேர்மன் எல்லாரிடமும் நலம் விசாரித்தார். "ஊர்ல விவசாயம் எப்படி இருக்கு? போரிங்ல தண்ணி சப்ளை தாராளமா இருக்கா...?"

"கொழுந்தியாவுக்கு டிரான்ஸ்பர் கேட்டீங்களே, கிடைச்சுதா? அவங்க பட்டுக்கோட்டையிலதானே டாக்டரா இருக்காங்க? கவலைப் படாதீங்க... அடுத்த மாசம் நம்ப ஊரு ஆஸ்பத்திரிக்கே மாத்திடு வோம்..."

"வாண்டையாரா! சவுரியமா இருக்கீங்களா? தொழிற்சாலை வேலை மும்முரமா ஆகுதுபோல..."

இப்படி இப்படி, பல விசாரிப்புகள் பந்தலில் நடை பெற்றன. புளிய மரத்தின் கீழிருந்தும் பலர் அங்கே போனார்கள்.

"அண்ணன் இல்லையா?" சேர்மன் கேட்டார்.

"மருங்கூர் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிருக்காங்க."

"போலிஸ் ஸ்டேஷனுக்கு இவர் எதுக்குப் போவணும்? அந்தப் பசங்களை வரச் சொல்லாம..."

"புதுசா வந்த எஸ்.ஐ. ரொம்ப அடாவடித்தனம் பண்றான் அண்ணே. நம்ப கட்சி ஆளுங் கன்னா ரொம்ப இளக்காரமா பாக்குறான். உடனே அவனை மாத்தியாவணும்"

கண்ணாடி போட்டவர் கோபமாகக் கூறினார்.

"கவலைப்படாதீங்க. உடனே செஞ்சிடுவோம். பழைய டி.எஸ்.பி. என்னா ஆனான்? அவனுக்கே அப்ப டின்னா இவன்லாம் எந்த இடம்..."

கள்ளச் சாராயத்தை அப்பகுதியில் அடியோடு ஒழித்த பழைய டி.எஸ்.பி.சஸ்பண்ட் செய்யப்பட்டார். எல்லாம் எம்எல்ஏ வேலை என்பார்கள். அதைத்தான் சேர்மன் நினைவூட்டினார்.

"சரி. நான் போயிட்டுவாரேன். காரைக்கால்ல ஒரு வேலை இருக்கு. அண்ணன் வந்ததும் சொல்லுங்க. நான் சாயங்காலம் வந்து பாக் கறேன்."

கம்பீரமாக நடந்து ஜீப்பில் தாவி ஏறி உட்கார்ந்தவரின் பார்வை தற்செயலாக சத்துணவு ஆயா மீது பட்டது. உடனே அகமும் முகமும் மலர கீழே இறங்கினார். தன்னை நோக்கி விரைந்து வந்த பெண்ணுடன் தனியே போய் சிரித்துப் பேசினார். எல்லார் பார்வையும் அவர்கள் மீதே விழுந் தது. பிரியாவிடை பெற்று மீண் டும் ஜீப்பில் ஏறி கையை ஆட்டவும் உறுமிக்கொண்டு ஜீப் பாய்ந்து சென்றது.

'எத்தனை அதிகாரிங்க கால் நடையாகவும் சைக்கிளில் ஏறியும் கேம்ப் போய்க்கொண்டிருக்கிறார் களோ'- அவன் நினைத்தான்.

அவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. கையில் கட்டியிருந்த நாற்பது ரூபாய் டிஜட்டல் கடிகா ரத்தைப் பார்த்தான். மணி 11-10

"எம்எல்ஏ எப்போ வரப்போறார். எப்போ பார்த்திட்டுத் திரும்பப் போறோம்"- தலை வேறு வலித்தது.

தாழ்ந்த கிளை ஒன்றை வளைத்து புளியம் பூ ஒன்றைப்பறித்தான். மஞ்சள் இதழ்களில் செவ்வரக்குக் கோடுகள் ஒவ்வொரு இதழாகப் பிய்த்தானா.தூலையும் அடிக்காம் பையும் வாயில் வைத்துக் கடித்தான். புளிப்பு வாயில் சுகம் தந்தது.

மேலும் ஒரு பூவைப் பறிக்க கிளையை வளைத்தான்.

"வறட்சி அதிகமா இருக்கிறதாலே, இந்த வருஷம் புளி நல்லா காய்க்கும்." பெரியவர் கூறினார்.

"குடிக்க தண்ணியில்ல. விதைக்க வழியில்லை. மேட்டூர்ல இப்பக் குள்ளாற தண்ணி திறக்கமாட்டா னுங்க. இப்படியே போனா பஞ்சம் பொழைக்க எங்காச்சும் போக வேண்டியது தான்." துண்டுக் காரர் முகத்தைத் துடைத்துக் கொண் டார்.

"நம்ப எம்எல்ஏ இருக்கறச்சே நமக்கு ஏங்க கவலை? நேத்து திட்டச்சேரி கூட்டத்தில பேசினார் பாருங்க... 'கர்நாடக அரசே... தண்ணி விடறியா, இல்லை சோழராஜாக்க மாதிரி படையெ டுத்து வரட்டுமா'ன்னு ஒரு சவால். கைதட்டல் காத பொளந்திடிச்சு!"

கருப்புப் பைக்காரர் உணர்ச்சி வசப்பட்டு விவரித்தார்.

அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'நம்ப எம்எல்ஏ நேத்து பேசின பேச்சு இன்னைக்கு மாலைப் பத்திரிகையிலே வரும். அதை நாளைக்குக் கர்நாடகக்காரன் மொழிபெயர்த்துப் படித்து பயந்து போய் எப்படியும் இந்த வாரக் கடைசியில் தண்ணி உட்டுடுவான். அடுத்த வாரம் குளம் குட்டை நிரம்புகிற மாதிரி ஆறு புடைக்க வண்டல் மண் குழம்பா நுங்கும் நுரையுமா தண்ணி வரப்போகுது'- வாய்திறந்து சொல்லிவிட நினைத் தான். சிரிப்பை அடக்க முடியாமல் சத்தமாகச் சிரித்துவிட்டான்.

"என்னா தம்பி சிரிக்கிறீங்க?" துண்டுக்காரர் கேட்டார்.

"ஒன்னுமில்லைங்க..." அவன் சமாளித்தான்.

'ஏதாவது சொல்லப்போக, மாத்துக் கட்சி ஆள் இவன்னு எல்லாருமா சேர்ந்து ஒதைச்சாலும ஒதைப்பானுங்க...'

"தம்பிக்கு எந்த ஊரு?" பெரியவர் கேள்வி கேட்டு நினைவைத் திருப் பினார்.

"மருங்கூர்ங்க..."

"அடப்பாவமே! தலைவர் அங்கேதான் போயிருக்காரு. அங்கேயே பார்த்திருக்கலாமே!" கருப்புப் பை ஆதங்கப்பட்டார்.

"இங்கே வந்த பின்னாடிதாங்க அது தெரியும்."

"என்னா விஷயமா இங்க வந்திருக்கீங்க?"

"சும்மாதான்..."

"கட்சி ஆளா? ஏதாவது மன்றம், இளைஞர் கூட்டத்திற்கு தேதி வாங்க வந்திருக்கீங்களா?"

"அதெல்லாம் இல்லைங்க. எம்எல்ஏ எங்க அப்பாவிற்குத் தெரிந்தவர். பார்த்திட்டு வரச் சொன்னார். அதான் வந்தேன்."

"மருங்கூர்ல யார் வீடு?" பெரியவர் கேட்டார்.

"உங்களுன்னுத் தெரிஞ்சிருக்கிற மாதிரி செல்வாக்குள்ள குடும்பம் இல்லை. முத்துத் தேவருன்னு எங்க தாத்தா. இப்ப உயிரோட இல்லை."

"பர்மாவெல்லாம் போயிட்டு வந்தாரே அவரா?"

"ஆமாம்."

"இம்..." பெரியவர் எச்சிலைக் கூட்டிக் காலடியில் உமிழ்ந்தார். கால் கட்டை விரலால் மண்ணை நிமிண்டி அதன் மேல் தள்ளினார்.

மணி ஆகிக்கொண்டிருந்தது. பசி மயக்கம் கண்ணை இருட்டியது. திரும்பிப் போய்விடலாம் என நினைத்தான். 'இன்று போய்விட லாம்; நாளை வந்துதானே ஆகவேண்டும்'- அம்மா விட்டாலும் அப்பா விடமாட்டார்.

'மனது இல்லாமல் புறப்பட்டதால், சட்டைப் பையில் சில்லரை இருக்கிறதா என்று கூடப் பார்க்கவில்லை. அம்மாவிடம் கோபங்கொண்டு வந்திருக்க வேண்டாம்.' கடுங் காப்பியுடன் அம்மா நின்றிருந்த தோற்றம் அவன்கண்முன் வந்தது. 'காப் பியைக் குடித்துவிட்டு வந்தி ருக்கலாம். கை செலவிற்குக் காசு கொடுத்து அனுப்பியிருப்பாள்'- அவன் வருத்தமுடன் நினைத்தான்.

பெரியவர் வெற்றிலைப் பையை அவிழ்த்தார். சீவலை அள்ளி வாயில் அடக்கிக்கொண்டு, காய்ந்து போன வெற்றிலையை விரல்களால் நீவி ஒழுங்குபடுத்தினார்.

கரண்டாவத்திலிருந்து சுண்ணாம் பை எடுத்துத் தடவி அழகாக மடித்து வாயில் வைத்து மென்றார். ஆள்காட்டி விரலில் ஒட்டியிருந்த சுண்ணாம்பையும் உருட்டிப் போட்டுக் கொண்டார்.

அவரிடம் பேச்சு கொடுக்க எண்ணினான்.

"அய்யா எதுக்காக வந்திருக் கீங்க?"

தலையை ஆட்டினார். வெற்றிலையை வாயில் ஒரு பக்கம் ஒதுக்கினார். எழுந்து போய் வேலி ஓரம் எச்சிலைத் துப்பிவிட்டு வந்தார்.

"எல்லாம் நேரம். அது நல்லா இருந்தா இங்கே ஏன் வரப் போறேன்?"

அவர் முகத்தைக் கூர்ந்து பார்த் தான். வாழ்வில் அடிபட்டு அடி பட்டு பக்குவமாகிப்போன தோற்றம். வெடித்துக் கிடக்கும் வயல்போல முகத்தில் சுருக்கங்கள். நரைத்து திரண்டு தொங்கும் இமை கள். மீசையும் அப்படியே. முகத்தில் மூன்று மீசைகள்.

மிகவும் மெலிந்த குரலில் கூறினார்:

"ஒரே பொண்ணு. ஆண் வாரிசு இல்ல. உத்தியோகத்தில் இருக்கிற மாப்பிள்ளையா பாப்போமுன்னு அலைஞ்சு திரிஞ்சு ஒரு வாத்தியாரைப் புடிச்சேன். இருவது பவுன் நகை போட்டு மூவாயிரம் ரொக்கம் கொடுத்து கட்டி வச்சேன். முன்னாடியே அவனுக்கும் அவன்கூட வேல பாத்த வாத்திச்சிக்கும் தொடுப்பு இருந்தி ருக்கும்போல. அரச புரசலாக்கூட காதுல விழுல. ஆச்சுமுணு மாசத்துக்கப்பறம் வாத்திச்சி வீட் டுக்கே வர ஆரம்பிச்சிட்டா. எம் பொண்ணு திரும்பி வந்திடிச்சு. எம்எல்ஏ கிட்ட வந்து சொன்னேன். அவனை வரவழைச்சு பேசினாரு. 'வாத்தியாருக்குப் புத்திமதி சொல்லிட்டேன். இனிமே ஒழுங்கா இருப்பாரு. நீங்க கவலைப் படாதீங்க. அவரு மோட்டார் சைக்கிள் வாங்க ஆசைப்படுறாரு. ஏற்பாடு செய்யுங்க'ன்னார். விவசா யம் தான் தரிசா போச்சே. ஒரு ஏக்கர் நிலத்த புடிச்சு வித்தென். பத்தாயிரம் போயிருக்க வேண்டி யது. நம்ப முடை தெரிஞ்சதும் ஆறாயிரம் கொடுத்தான். ஆனது ஆவட்டும் நம்ப பொண்ணு நல்லா இருந்தா சரின்னு பணத்தைக் கொண்டுபோய் கொடுத்தேன்."

மீண்டும் எழுந்துபோய் எச்சிலைத் துப்பிவிட்ட வந்தார்.

"வாத்தி மோட்டாரு சைக்கிள் வாங்கினான். வாத்திச்சியைத் தூக்கி பின்னாடி வச்சிக்கிட்டுப் போக! ஊரே சிரிக்குது! பொண்ணு திரும்பவும் வீட்டுக்கு வந்திடிச்சு."

"இப்ப என்ன செய்ய வந்திருக்கீங்க?"

"கணக்க வெட்டணும்; வேற வழி? நகை நட்டு- சாமான் சட்டு எல்லாத்தையும் கொடுத்திட்டு அந்தப் பய எந்தக் கூத்தியாக்கூடப் போனாலும் போவட்டும். எம்எல்ஏ யிடம் சொல்லி கணக்க முறிக் கணும்..."

குனிந்து காதோடு கூறினார்:

"எம்எல்ஏ எலெக்ஷன்லே வாத்தி உயிரைக் கொடுத்து ஒழச்சானாம். எனவே அவன் பக்கம்தான் எம்எல்ஏ பேசுவாரு. நியாயம் கிடைக் காதுன்னு ஊர்ல எல்லாரும் சொல்றாங்க. இருந்தாலும் சொல் லிப் பாப்போம்னு தோணவே, வந்தேன்"- கூறிவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தார், யார் காதிலும் விழுநதிருக்குமோ என்ற பயத்தில்.

'வாத்தியார் நாசமா போக' வென்று அவன் சபித்தான்.

"தம்பி வாரிங்களா, தேத்தண்ணி குடிச்சிட்டு வருவோம்...அவர் வர நேரமாகும்போல இருக்கே..." பெரியவர் அழைத்தார்.

தன்னிடம் காசு இல்லை என்று சொல்ல வெட்கமா இருந்தது. "வேணாங்க... நான் டீ சாப்பிடறது இல்லை. நீங்க போயிட்டுவாங்க."

"பரவாயில்ல..கூட வாங்களேன். தண்ணியாவது குடிச்சிட்டு வரலாம். வெயிலு நெருப்பா தகிக்குதே..."

சைக்கிளை ஓரமாக நிறுத்தி பூட்டிவிட்டு பெரியவரோடு நடந்தான். டீக்கடையில் நல்ல கூட்டம். உள்ளே நுழைந்தார்கள்.

அவன் தண்ணீரைத் தேடினான். மூலையில் பெரிய சிமிண்ட் தொட்டி இருந்தது. அதில் மிகுந்த பழுப் பேறிய அலுமினிய தம்ளரில் மொண்டு குடித்தான். நான்கு குவளைகள் குடித்தபின்னரே வயிறு நிரம்பிக் குளிர்ந்தது.

பெரியவர் பேப்பரில் ஆவி பறக்கும் மசால் வடைகளோடு வந்தார். 'வேண்டாம்' எனத் தடுத்தும் கைகளில் திணித்தார். வேறு வழியின்றி வடைகளை பிட்டான்.

இரண்டே வாயில் சாப்பிட்டு முடித்த பெரியவர் ஒரு கையில் டீயும், மறுகையில் பாலுமாக வந்தார்.

அவசரமாகக் சாப்பிடாமல் மெதுவாகவே பாலைக் குடித்தான். சீக்கிரமே குடித்து விட்டால் கல்லாவில் வெறும் கையுடன் போய் நின்று பெரியவருக்காகக் காத்திருக்க வேண்டும் என்ற பயம் அவன் நெஞ்சில்.

வெற்றிலைக்குப் பாக்குப் பையை அவிழ்த்துக்கொண்டு கல்லாவிற்குப் பெரியவர் போனார்.

"நான் கொடுத்துடுறேனுங்க"- வெறும் பையில் கையை விட்ட வாறு கூறினான்.

"பரவாயில்ல. மெதுவா சாப் பிட்டுவிட்டு வாங்க,"

அவர் கொடுத்த அழுக்கு ஐந்து ரூபாய் நோட்டை வாங்கி உயரத்தில் பிடித்து, திரும்பித் திரும்பிப் பார்த்தான் கடைக்காரன்.

'இது செல்லாது; வேற கொடுங்க' என்று கடைக்காரன் சொல்ல, பெரியவரிடம் வேறு நோட்டு இல்லாவிட்டால் தன் கதி என்னாகும் என்று அவன் நினைத்துப் பார்த்தான். இதயம் பயங்கரமாக அடித்துக் கொண்டது. இது போன்ற சங்கடமான நிலையில் அவன் என்றுமே இருந்தது இல்லை.

கடைக்காரன் நோட்டை வைத்துக்கொண்டு மீதியைக் கொடுத்ததும்தான் அவனுக்கு உயிர் வந்தது.

மெதுவாக நடந்தார்கள். வயிறு நிறைந்துவிட்டதால் வெயில் உறைக்கவில்லை.

அவர்கள் எம்எல்ஏ வீட்டை நெருங்கும்போது எர்ல்லாரும் வெளியே கும்பலாக வந்து கொண்டி ருந்தார்கள். அதில் கருப்புப் பையும் இருந்தார்?

அவரிடம் அவன் கேட்டான்: "என்னா சார் விஷயம்?"

"தலைவரு அப்படியே கலக் டரைப் பார்க்கப் போய்ட்டாராம். ராத்திரிக்குத்தான் திரும்புவாராம். இப்ப போன் வந்தது..." அவர் நகர்ந்தார்.

இவ்வளவு நேரம் காத்துக் கிடந்ததுதான் மிச்சமா? இனிமே இங்கே உட்கார்ந்து என்ன செய்யறது... ஊரப் பாக்கப் போவோமா?" பெரியவரு கேட்டார்.

"நீங்க இப்படி நிழல்ல நில்லுங்க. நான் சைக்கிள எடுத்துக்கிட்டு வாரேன்"- வேகமாக நடந்தான்.

எம்எல்ஏ வீட்டில் கூட்டம் முழுமையாகக் கலைந்திருந்தது. சைக்கிளைத் திறந்து தள்ளிக்கொண்டு வெளியே வந்தான்.

"தம்பி, போயிட்டு வாங்க. நாளைக்கும் வந்தீங்கனா பார்ப்போம்."

"இல்லைங்க. நீங்க பின்னாடி உட்காருங்க. உங்களைக் கொண்டாந்து விட்டுட்டு வாரேன்."

"வேணாம் தம்பி. நான் மேற்கால மூணு மைலு போவணும். நீங்க கிழக்கே அஞ்சு மைலு பொவணும். வெவ்வேற திசையா போவ வேண்டியிருக்கு. வெயிலு இந்தப் போடு போடுது. அலையாம ஊருக்குப் போய் சேருங்க..."

அதெல்லாம் ஒன்னும் இல் லைங்க. உங்கள கொண்டாந்துவிட பத்து நிமிஷம் ஆகாது. அரை மணி நேரத்துல வீட்டுக்குப்

(18ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வெளிநாட்டுதலையீடு..

11ம் பக்கத் தொடர்ச்சி....

தவறிவிட்டோம். நாம் வென்றவை எல்லாம் இன்று பூஜ்யமாகிவிட்டன; அவை எதிர்மறையாகின்றன.

ஆக, நாம் சாதித்தவை என்று சொல்வதானால் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமும் அதைச் செய்வதற்கு வழிசமைத்த இந்திய இலங்கை ஒப்பந்தமுமே. நாம் பெற்ற உயர்ந்தபட்சபேறு இதுவேதான். இதை வலுவாக்கி, தற்காலிகமாக உள்ள வட-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கி அதிலிருந்து எம்மை பலப்படுத்தி இரண்டாம் கட்ட நிலைக்குத்தான் நாம் போயிருக்க வேண்டும்.

**ஆக, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?**

இந்த ஒப்பந்தம் ஒட்டுமொத்தமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதல்ல. ஆனால் அதையாவது முழுக்க முழுக்க எடுத்திருந்தால் இன்று பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குமுன் இந்த இணைப்பு பிரச்னைக்கு இடமிருந்திருக்காது. எமது ஆட்சியைப்பலப்படுத்தி பொருளாதார விருத்திக்கான நடவடிக்கைகளையும் நாம் உருவாக்கியிருக்கலாம்; தவற விட்டு விட்டோம்.

**இப்போது இந்தியாவின் நிலைப்பாடுபற்றி என்ன சொல்கிறீர்கள்?**

வி.பி.சிங், சந்திரசேகர் அரசாங்கங்களில் 'இலங்கைக் கொள்கை' என்று ஒன்று இருந்ததாகவே தெரியவில்லை. இந்திய இராணுவம் திரும்பியதிலிருந்தும் பின்னர் ராஜீவ் கொலைச் சம்பவத்தின் பின்னரும் தமது மண்ணில் குழப்பங்கள் எதுவும் வேண்டாம் என்பதிலேயே அவர்களின் கவனம் கூடுதலாக இருந்தது. அதுதவிர இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக எந்தவிதமான தீர்க்கமான நிலைப்பாடும் இருக்கவில்லை.

இந்தியா பிராந்திய வல்லரசு என்பதை இராணுவ ரீதியில் அல்ல- வெளிவிவகார ரீதியில், அதன் உணர்ச் நடவடிக்கைகள் மூலம் இலங்கை மறுத்த நிலைமை இனியும் ஏற்பட்டால் இலங்கைக்குள் தனது இராணுவத்தை ஒரு தடவை அனுப்பிவிட்டதில், இனி தாம் அதை கவனித்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு வந்து விட்டது. தமது தேசிய பாதுகாப்பை தாம் நேரடியாகவே கவனிக்க வேண்டும்; இலங்கை போராளிகள் குழுக்களை அதற்கு பயன்படுத்தியது தவறு என்பதையும் இந்தியா இப்போது உணர்ந்திருக்கிறது. அதேவேளை, எல்லையை விஞ்சினால்- அவசியமேற்பட்டால் தமிழர் பிரச்னையைக் காரணமாக வைத்துத்தான் என்றல்ல, நேரடியாகவே தலையிடுவோம் என்ற 'செய்தி'யையும் புது டில்லி கொழும்புக்கு தெரிவித்துவிட்டது. அதுமாத்திரமன்றி, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு- பிராந்திய ஒற்றுமை என்பனவும் இலங்கைத் தமிழரின் நீதியான தீர்வு என்பதும் ஒன்றிலிருந்தொன்று வேறுபடுத்தப்பட்டும் விட்டன.

**இப்பொழுது நரசிம்மராவ் இந்தியாவின் பிரதமராகவிருக்கிறார். முதிர்ந்த அரசியல்வாதியான அவர் இலங்கைத் தமிழர் பிரச்னையையும் நன்கு அறிந்தவர்; தொடர்பாயிருந்தவர். அந்த நிலையில், பிரச்னையை அவரிடம் முன்னெடுப்பதற்கு இலங்கைத் தமிழர்சார்பில் ஒருவர் இல்லை என்றநிலை இல்லையா?**

அந்தக் குறைபாடு- வெற்றிடம் நிச்சயமாக இருக்கிறது. மரபுவழி வந்த அரசியல் தலைமை சிதறுண்டு போயிற்று. போராட்டமூலம் வந்த தலைமைகளும் அரையும் குறையுமாக- ஒன்றுபடுத்த இயலாதனவாகவே இருக்கின்றன. இந்த நிலைமையில் இப்போது திரு மு. சிவசிதம்பரம் அரசியல் பேச்சு வார்த்தைகள் சிலவற்றில் கலந்து கொள்கிறார். பழைய தலைவர் என்ற ரீதியில் அவருடைய இந்த ஈடுபாடு ஒரு பிரதான பேச்சாளர் போன்ற ஒருவராகி அனைவரையும் ஒன்றுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பாகலாம். அந்த நிலைமை இன்னமும் ஏற்படாவிட்டாலும் அப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஏற்பட்டுள்ள இந்த வெற்றிடத்தை ஓரளவுக்காவது நிரப்பக்கூடியவர் அவர்தான்.

**ஏழு கட்சிகள் கூட்டு பற்றி....**

இந்த ஏழு கட்சிக்கூட்டு தேர்தலுக்கான ஒரு கூட்டு அல்ல. தமிழ்மக்களின் சில அடிப்படைப் பிரச்னைகளில், குறிப்பாக குடியேற்றம், வடக்கு-கிழக்கு இணைப்பு, அடிப்படை உரிமைகள் என்பன சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு கூட்டு அது. இவற்றில் நாம் ஒன்றுமையாக சில நியாயமான கோரிக்கைகளை ஜனநாயகரீதியில் அரசுக்கு முன்வைத்து அதை அரசு நிராகரிக்குமானால் போராட்டத்துக்கு மாற்றான ஜனநாயக திட்டங்களையும் இலங்கை அரசு ஏற்கவில்லை என்பதை உலக அரங்கில் நாம் முன்வைக்க அது வாய்ப்பாகும்.

**புலிகளை விடுத்து ஓர் உடன்பாட்டுக்கு வரலாமா?**

புலிகள் இதைவிட அதிகம் கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை ஏற்கமுடியாவிட்டால் எப்படி புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்கமுடியும்!

**பிரேமதாசாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மற்றொரு சிங்கள அரசியல்வாதி; ஆட்சிக்கு வந்துள்ளார்.

அவரது பதவியை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்பதில்தான் அவருடைய கவனமெல்லாம். அப்படியான நிலைமையில் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதென்பது ஒரு சிக்கலான நிலைமையே.

**ஆனால் தமிழ் வாக்குகள் அவருக்குத் தேவை?**

ஆம்; தமிழ் வாக்குகளும் பதியப்பட்ட வாக்குகள் எவ்வளவாக விருக்கும் என்பது கேள்விக்குரியதே. இலட்சக்கணக்கானோர் உள்ளூரிலும் இந்தியா, மற்றும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இந்த நிலையில் பதியப்படும் தமிழரின் வாக்கு வீதம் எப்படி இருக்கும் என்பது தெரியாது. எனினும் அவருக்கு தமிழ் வாக்கு தேவை. தொண்டமான் மூலம் மலையகத் தமிழரின் வாக்கையும், அஷ்ரப் மூலம் தமிழ் முஸ்லிம்களின் வாக்கையும் யாராவது இன்னுமொரு தமிழ்த் தரகர் மூலம் தமிழர் வாக்கையும் பெற்றுவிட்டாரானால் மீதி சிங்களவாக்குகள் அவருக்கு போதுமானதாகலாம்.!

**அங்குள்ள தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?**

இராணுவத்துடன் இன்னமும் தங்களுடைய பாதுகாப்புக்காக போராடும் ஒரே இயக்கம் புலிகளே என்பதால் அதை அவர்கள் நிராகரிக்க முடியாது. போர்கால நிலைமை என்று கூறி பல சுமைகள் அவர்கள் மீது சுமத்தப்பட்ட நிலையிலும் அவர்களுக்கு மாற்று இல்லை. அமைதி ஒன்றே அவர்களுக்கு வேண்டியது. புலிகளிடம் ஆட்சியைக் கொடுத்தாவது 'அந்த அமைதி கிட்டாதா?' என்பதே அவர்களுடைய ஆவல். அரசுடன் இராணுவரீதியில் ஒத்துழைக்க வேண்டாம் என்பது எப்போதும் அவர்கள் எங்களுக்கும் கூறுகின்ற ஒன்றாகும்.

**எப்படியிருந்தாலும் புலிகளை இராணுவம் வெல்லுகின்ற ஒருநிலை ஏற்கக்கூடியதா?**

அப்படியொரு நிலையில் நிச்சயமாக நாம் பங்களிப்பாக இருப்போம்.

**ஆக இந்தப் பிரச்னைக்கு முடிவு என்ன?**

வெளிநாட்டு தலையீடு எதுவுமின்றி இப்பிரச்னைக்கு தீர்வு கடினம் என்பதே எனது எண்ணம். இப்பொழுதுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு இதற்கொரு தீர்வைக் காணாவிட்டால் ஜனநாயகரீதியில் இதற்கு தீர்வு இல்லை.

**வெளிநாடு என்றால்?**

அவுஸ்திரேலியா, சுவீடன் போன்ற நாடுகள் தங்கள் விருப்பைத் தெரிவித்திருக்கின்றன.

**ஆனால், இந்தியா இதில் சம்பந்தப்படாதபோது ஏனைய நாடுகளின் இந்த விருப்பு சாத்தியமாகுமா?**

அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இதை ஒரு பிராந்தியப் பிரச்னை என்று கருதினால் இந்தியாவின் பங்கும் அவசியமானதே.

**கடைசியாக, புலிகளைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

அவர்களுடைய அபரிமிதமான நம்பிக்கை; தாம் சாதிப்போம் என்ற துணிவு; இந்த தைரியத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்கள் போராடுகிறார்கள்.

மற்றைய இயக்கங்கள் இருக்கக் கூடாது என்ற ஒன்று எதிர்மறையானது. ஐக்கியத்தை அணைத்துச் செல்லும் திறமைதான் அவர்களிடம் இல்லை.

## பாரதத்தின் ஜனாதிபதிகள்...

4ம் பக்கத் தொடர்ச்சி




புதிய ஜனாதிபதி சர்மா பெறும் பரம்பரைச்சொத்து நன்றி: ஈநாடு (தெலுங்கு நாளிதழ்)

அனந்தப்பூரில் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தபோது அவர் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்ந்தார். சுதந்திர போராட்டத்தில் நீண்டகாலம் சிறையில் இருந்தார். வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டதற்கு 5 ஆண்டு சிறை தண்டனை பெற்றார்.

பிறகு ஒன்றாக இருந்த சென்னை ராஜ்ய சட்டசபை உறுப்பினர் ஆனார். பிறகு அவர் வீட்டுவசதி-வனஇலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

1956-ம் ஆண்டு சஞ்சீவரெட்டி ஆந்திர முதன்மந்திரி ஆனார். அந்த பதவியை துறந்துவிட்டு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஆனார். பிறகு மீண்டும் முதன் மந்திரி ஆனார். அதையடுத்து 1964-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை சஞ்சீவரெட்டி மத்திய மந்திரியாக இருந்தார். 1967-ம் ஆண்டு முதல் மக்களவையில் புகழ் பெற்ற சபாநாயகராக விளங்கினார். 1977-ம் ஆண்டு ஜூலை 25-ந் தேதி இந்தியாவின் 6-வது ஜனாதிபதியாக பதவி ஏற்றார். அந்த பதவியில் 5 ஆண்டுகள் நீடித்தார்.



**ஜயில்சிங்**

பஞ்சாபில் உள்ள பரீத்கோட் மாவட்டம் சாஜ்வான் கிராமத்தில் 1916-ம் ஆண்டு மே மாதம் 5-ந் தேதி ஜயில்சிங் பிறந்தார். அவர் 15 வயது இளைஞனாக இருந்தபோது பஞ்சாப் சிங்கம் பகத்சிங், வெள்ளைக்காரர்களால் தூக்கிலிடப்பட்டார். இது அவர் மனதை மிகவும் தொட்டது. அதுமுதல் காங்கிரசில் சேர்ந்து விடுதலை போராட்டத்தில் குதித்தார்.

1956-ம் ஆண்டு ஜயில்சிங் மாநிலங்களவை உறுப்பினர் ஆனார். பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் துணை தலைவராகவும் பொறுப்பு வகித்தார். 1962-ம் ஆண்டு பஞ்சாப் மாநில மந்திரி ஆனார். சீன ஆக்கிரமிப்பை தொடர்ந்து அவர் மந்திரி பதவியை துறந்தார். 1972-ம் ஆண்டு பஞ்சாப் முதன்மந்திரி ஆனார். அந்த பதவியில் 5 ஆண்டுகள் நீடித்தார்.

1980-ம் ஆண்டு மக்களவைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார். மறைந்த பிரதமர் இந்திராகாந்தி மந்திரி சபையில் உள்துறை மந்திரி ஆனார். 1982-ம் ஆண்டு ஜூலை மாதம் 25ந் தேதி ஜயில்சிங் ஜனாதிபதியாக பதவி ஏற்றார். 1987-ம் ஆண்டு ஜூலை 29-ந் தேதி வரை அந்த பதவியில் நீடித்தார்.



**ஆர்.வெங்கடராமன்**

இந்தியாவின் 8-வது ஜனாதிபதியான ஆர்.வெங்கடராமன் 1910-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் தேதி தஞ்சாவூர் மாவட்டம் ராஜமடம் என்ற ஊரில் பிறந்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் பொருளாதார துறையில் எம்.ஏ பட்டம் பெற்றார். சென்னை சட்டக்கல்லூரியில் படித்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கறிஞராக பணியாற்றினார்.

1952-ம் ஆண்டும், 1957-ம் ஆண்டும் வெங்கடராமன் மக்களவைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார். ஆனால் எம்.பி. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழக மந்திரிசபையில் சேர்ந்தார். 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை அவர் மந்திரியாக பல்வேறு இலாகாக்களை கவனித்தார். தமிழக மேல்சபை தலைவராகவும் இருந்தார்.

1967-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை திட்டகமிஷன் உறுப்பினராக இருந்தார். 1977ம் ஆண்டு அவர் இந்திராகாந்தி மந்திரிசபையில் மந்திரி ஆனார். நிதி இலாகா, ராணுவ இலாகா ஆகிய பொறுப்புக்களை கவனித்தார். 1984-ம் ஆண்டு அவர் துணை ஜனாதிபதி ஆனார். 1987ம் ஆண்டு அவர் ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

## கே.ஆர்.நாராயணன் புதிய உபஜனாதிபதி

(புதுடில்லி)

பாரதத்தின் புதிய உபஜனாதிபதியாக கேரள மாநிலத்தைச் சேர்ந்த கே.ஆர்.நாராயணன் எதிர்ப்பில்லாமல் தெரிவு செய்யப்பட இருக்கிறார். ஆகஸ்ட் 19ம் தேதி நடைபெறவுள்ள தேர்வில் திரு நாராயணன் பெயரை காங்கிரஸ், பி.ஜே.பி, ஜனதா தள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் முன்மொழிந்திருப்பது இந்திய உபகண்டத்தில் ஒரு புதுமை.

அரிஜன வகுப்பைச் சேர்ந்த நாராயணன் ஆசிரியராகவும், பத்திரிகை உதவி ஆசிரியராகவும், மந்திரியாகவும், பல நாடுகளில் இந்தியப் பிரதிநிதியாகவும் கடமை பார்த்து வெகுஜன மதிப்பைப் பெற்றவர்.

## வறுமை கோட்டில் 24 கோடி

(புதுடில்லி)


இந்தியாவில் "வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் 23 கோடியே 77 லட்சம் பேர்" என்று சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அமைச்சர் சுக்ராம் தெரிவித்துள்ளார். 1987-88-ம் ஆண்டுக் கணக்கின்படி இந்த நிலவரம் என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்லூர் அரசாளும் பெருமாளே



யாழ்ப்பாணத்தில் கந்தன் கோவில் கொண்டுள்ள நல்லூர் மிகவும் திவ்யமான அருட்சக்தி வாய்ந்த ஆலயமாகும். என்ன அரசியல்சிக்கல்கள் இருந்தபொழுதும் நல்லூர்க்கந்தனின் திருவருட் சக்தி, திருவிழா, சுற்றுச்சூழல், நிர் வாக ஒழுங்கு இவைகளில் மாற் றம் எதுவும் என்றும் நிகழுவதில்லை. இவையாவற்றுக்கும் மூலகாரணமாக விளங்குவது, ஒன்று; முருகனின் வேலின் அபாரமானசக்தி. முருகன் கைவேல் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யுப்பட்டுள்ளது. முருகனும் அவனது வேலும் ஒன்று என்று சமய சாஸ்திரங்கள் பகர்கின்றன.

வேலுக்கும் ஆறுமுகங்கள் உண்டு என்று கந்தபுராணம் பகர்கின்றது. இரண்டாவது; இவ்ஆலயத்தை பல ஆண்டுகளாக பரிபாலித்து வரும் கோவில் எசமான் மிகவும் எளிமையானவர். இவரை எவரும் எளிதில் அடையாளம் காணமுடியாது.

முருகன் புகழ் கூறும் கந்தர் அநுபூதியில் மனிதன் தனது ஆணவ மலத்தை அறுத்து அடியவனாக வாழ்ந்தால் மட்டும் இவனது திருவடிப்பேறு கிடைக்கும் என்று திடமாக கூறுகின்றது. நாம் சில உயர்வுகளைப் பெற்றதும் மதிமயங்கி திண்டாடுகிறோம். அருணகிரிநாதர், இப்பூவுலகில் மயங்கி, ஆணவம் கொண்டு அலையாமல், நமது கல்வி, அறிவு யாவும் வேலவர் தந்தது என்று கருத்திற் கொண்டுவாழும்படி அறிவுறுத்தியுள்ளார்.

“யாமோதிய கல்வியும்
  எம் அறிவும்
தாமேபெற வேலவர்
  தந்த தனால்,
பூமேல் மயல்போய்
  அறமெய்ப் புணர்வீர்,
நாமேல் நடவீர்
  இனியே இனியே”
(கந்தர் அநுபூதி)

முருகன் புகழைப்பாடுவதையே தன் பணியாகக் கொண்டவர் அருணகிரிநாதர். கிளி உருவத்தில் முருகனைப்பாடிய 51 பாடல்களே கந்தர் அநுபூதியாகும். கற்கண்டைச் சுவைத்தவருக்குத்தான் அதன் அருமை தெரியும். அருணகிரிநாதர் முருகனின் பெருங்கருணையை சுவைத்தவர். முருகனோடு பேசித் திளைத்தவர். ஆகவே அருணகிரிநாதரின் கந்தர் அநுபூதி உயர்ந்த பாராயணநூல். 51 பாடல்களும் 51 அட்சரங்களாக அமைகின்றன. இவையாவும் ஒருமுறை பாராயணம் செய்தால் முருகன் மேல் ஒரு மாலையாக புனையப்பட்டதாக கருதலாம்.

முருகன் நமக்கு தாயும் தந்தையும் ஆவர். நம்மனத்தில்தோன்றும் கேடுகளை களையக்கூடியவர். வேதங்களுக்கு அப்பாற்பட்டவனே, ஒளி பொருந்திய வேலாயுதத்தை உடையவனே, உமையின் மைந்தனே என்று அருணகிரிநாதர் விளிக்கின்றார்.

“எந்தாயும் எனக்கருள்
  தந்தையும் நீ
சிந்தாகுல மானவை
  தீர்த்து எனையாள்,
கந்தா கதிர்வே
  லவனே உமையாள்
மைந்தா, குமரா
  மறைநா யகனே”
(கந்தர் அநுபூதி)

அளக்கொணா அருட்பிரவாகம் கொண்ட ஆறுமுகப் பெருமான் நல்லூரில் வீற்றிருந்தருளி 25 நாட்கள் சிறப்பாக நடக்கும் உற்சவத்தில் நம் தமிழ் மக்களின் தீரா வினையெல்லாம் தீர்த்தருளி, நமக்கு பேரின்ப வாழ்வு அளிக்கின்றான். நாம் இவனுக்கு கொடுக்கக்கூடியது நமது முதிர்ந்த பக்தியேயாகும். நல்லூர் கந்தன் இதனையே பெரிதும் விரும்புகின்றான். ஆகவே நாம் அவனை நோக்கி பக்தியாக அடியெடுத்துவைக்க அவனது திருவருட்சக்தியும் பார்வையும் நம் பக்கம் வந்து சேரும். இதனால் எல்லா வினைகளையும் அறுக்க நேரிடும். தமிழ் மக்களுக்கு சுகானந்த வாழ்வு கிடைக்க இதுவே வழியாகும். “வேலுண்டு வினையில்லை; மயிலுண்டு பயமில்லை”

## சுவாமி சித்ருபானந்தா




நன்றி:கல்கி

# ஆன்மீகத்துக்கும் கலாச்சாரத்துக்கும் ஒரு புனித யாத்திரை

நான்கு வருடங்களுக்கு முன் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினருடன் ஆரம்பிக்கப்பட்ட வோல்சிங்ஹாம் புனித யாத்திரை, தற்போது மடு திருத்தல யாத்திரையை ஈடுசெய்வதைப் போல் விமரிசையாக நடைபெறுகின்றது. இவ்வருட புனித யாத்திரை கடந்த மாதம் 19 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இங்கிலாந்து, மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆயிரத்து எண்ணூறுக்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்புனித யாத்திரையின் தமிழ்ப் திருப்பலியை வண.பிதா.எஸ்.எவ்.கிருபானந்தன், வண.பிதா.தேவராஜன் ஆகியோர் கூட்டாக ஒப்புக் கொடுத்தனர்.

லண்டனிலிருந்து 125 மைல்களுக்கு அப்பாலுள்ள இவ் வோல்சிங்ஹாம் ஆலயத்திற்கு லண்டனின் பல பாகங்களிலிருந்து பிரத்தியேக பஸ் வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வோல் சிங்ஹாம் புனித யாத்திரை மக்களின் ஆன்மீக தேவையை நிறைவேற்றுவதுடன், சமூக ஒன்று கூடலாக அமைந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இங்கு நிறைவேற்றப்பட்ட திருப்பலிப்பூசைதமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வண்ணம் சற்று வித்தியாசமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கத்தோலிக்க திருப்பலிப்பூசையில் முக்கிய நோக்கங்களில் ஒன்று இறைவனுக்கு நன்றி சொல்வதாக அமையவேண்டும். இந்நன்றி கூறும் செயற்பாடு, சம்பந்தப்பட்ட நாட்டினரின் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டுமென இப்புதிய அணுகுமுறையை கையாண்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர். திருப்பலி பூசை நேரத்தில் கலாச்சாரத்தை பிரதி பலிப்பதன் மூலம் பக்தியான சூழ்நிலைக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகிறார்கள் என்ற எதிரான கருத்தும் பலரிடம் பரவலாக இருந்தது.

எது எப்படியிருப்பினும் தமிழர்களால் மிகவும் ஒற்றுமையாக இவ்வளவு பிரமாண்டமான முறையில் ஒரு யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயம். வோல்சிங்ஹாம் மாதா கோவிலுக்கான அடுத்த புனித யாத்திரையை அடுத்த ஆண்டு யூலை 18இல் நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

என்பீல்டைச் சேர்ந்த டாக்டர் ஏ.நிக்கலஸ்பிள்ளை இதற்கான ஏற்பாடுகளை கவனிக்கின்றார்.

காயத்திரி கொன்ஸ்டன்ரைன்

## விரத தினங்கள்

21-08-1992 வெள்ளி
ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி (கார்த்திகை)
31-08-1992 திங்கள்
ஆவணிச் சதுர்த்தி
05-09-1992 சனி
ஆவணி மூலம்
10-09-1992 வியாழன்
நடேசர் அபிஷேகம்
11-09-1992 வெள்ளி
பூரணை, உமாமஹேஸ்வர விரதம்

## நல்லை உற்சவம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 3ஆம் தேதி ஆரம்பமாகி நடைபெறுகிறது. 26ந் தேதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த் தோற்சவமும் நடைபெறும். 28ந் தேதி பூங்காவனத்தன்று தொண்டமானாறு செல்வச்சந்நிதி கொடியேற்றமாகும்.


**The Eelabhoomi Publication's**
**Triangle Cricket Tournament**

**On**
**23-08-1992 Sunday**
**At**
**Thomas Wall Ground**
**Green Lane**
**Rosehill, Sutton**

**Teams**
**Tooting Blues**
**Serendip**
**&**
**Greenford C.C**

**Admission £1.00**
**Under 12 Free**

ஈழபூமி வெளியீட்டகம் நடாத்தும்
மும்முனைக் கிரிக்கட் போட்டி
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**Food Stores Available**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ராசிபலனை எப்படி?

**சோமசன்மா**

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எங்கெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும். இப்போது நடக்கும் ஜூலை மாதத்தில், சந்திரனைத் தவிர மற்றைய எட்டுக் கிரகங்களும் எங்கெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதைப் பஞ்சாங்கத்தில் பார்த்து, அந்த வகையில் சந்திரன் இருந்த வீட்டிலிருந்து,

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்கு சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்..............................மேடம்
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடத்து முன்னரை..............................இடபம்
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்..............................மிதுனம்
புனர்பூசத்து நாலாங்கால், பூசம்,
ஆயிலியம்..............................கர்க்கடகம்
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்..............................சிங்கம்
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை..............................கன்னி
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்..............................துலாம்
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை..............................விருச்சிகம்
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்..............................தனு
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை..............................மகரம்
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்..............................கும்பம்
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி..............................மீனம்

## மேடம்

விரோதிகளெல்லாம் விரோதிகள் என்று முடிவுகட்டிவிடவேண்டியதில்லை. அவர்களிலும் திடீரென எதிர்பாராத உதவியைச் செய்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவசியம் என்ற நேரத்தில் ஆபத்துக்குதவும் உதவி அது. மனைவி பக்கத்திலிருந்து புதிய உறவு வருவது குடும்பச் சூழ்நிலையைப் பாதிக்கலாம். தவிர்க்க முடியாத நிலைமைகளை என்ன செய்ய முடியும். வயிற்று நோய் எல்லாருக்கும் வரும்.

அதிஷ்ட எண் 5.

## இடபம்

குடும்பம் பெரிதுதான், அதற்கென்ன செய்ய முடியும்? அதற்கு வேண்டியதை ஆண்டளப்பான் தரத்தான் செய்வான். பிரயாணம் செய்யும் பாதையை நன்றாக ஆராய்ந்து வைத்துக்கொள்வது நல்லதல்லவா. பெண்களுக்கு சில சலுகைகள் தேவை என்பதை நாம் மறக்கலாகாது. செலவுதான், என்ன செய்ய முடியும்?

அதிஷ்ட எண் 3.

## மிதுனம்

அரசாங்கத்திடமிருந்து வரும் கடிதத்தைப் பார்த்தவுடன் என்னவோ எதுவோ என்று சிலர் பீதியடைவது சகஜம்தான். ஆனால் அது எதிர்பாராத நன்மையைத் தரப்போகிறது என்று உடனே தெரியாது. வெளியூரிலிருந்து புதிய உறவுக்கும் வழியுண்டு. பிரயாணம் இப்போது அவசியமா? இருப்பிடம் சிறியதுதான், பெரியதாகப் பார்க்க சிறிது பொறுத்திருப்பது நல்லதல்லவா? செலவுகளை மட்டுப்படுத்திவிட்டு அப்புறம் பார்க்கலாம்.

அதிஷ்ட எண் 7.

## கர்க்கடகம்

தம்பியுடையான் சண்டைக்கஞ்சான் என்று சொல்வது வழக்கம். சகோதரி புருஷன் உடையானும் அந்தச் சலுகையைப் பெறுவான் என்பதை இவர்கள் தெரிந்துகொள்வார்கள். அப்படியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கலாம். கால வித்தியாசம் புதிய சூழ்நிலையைத் தரும்போது இஷ்ட தெய்வத்தை வழிபடவேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். மோட்டார் வாகனம் சில சமயங்களில் தன் சேவையை நிறுத்திக்கொள்ளும் பழக்கமும் உண்டு.

அதிஷ்ட எண் 1.

## சிங்கம்

எல்லாக் குடும்பத்திலும் இம்மாதிரி ஒரு பிள்ளை சிறந்த கல்விமானாக உருப்படுவதில்லை என்பதை சிலர்தான் காண்பார்கள். தாய்வழி வரவு இது. பொருள் சம்பந்தமாக எல்லாருக்கும் உள்ள சிரமம் இங்குமுண்டு. புகழ் போதாதா? விரைவிலே புதிய உறவையும் சிலர் எதிர்பார்ப்பார்கள். வேறுமாதிரியான தொடர்புகளும் வந்து சேர்வதை ஒருசிலர்தான் வரவேற்பார்கள். இடைஞ்சல் என்பதை அவர்கள் தெரிந்து கொள்வர்.

அதிஷ்ட எண் 2.

## கன்னி

ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள் என்று சிலர் கேட்கக்கூடும். அது அவர்கள் பார்வைக் கோளாறு. புதிதாகச் சிலருக்கு உள்ளுணர்வில் ஞானோதயம் ஏற்படுவது ஒரு மாற்றம் என்று சொல்லவேண்டும். தலை தட்டுவதல்ல, உண்மையில் புதிய வழியில் வாழ்க்கை திசைதிரும்புவதற்கு அறிகுறி என்பார்கள். குடும்பத்துக்கு நல்ல காலம் என்றும் சொல்லலாம். எதற்கும் இவர்கள் அமைதியாகப் பொறுத்திருப்பது நல்லது.

அதிஷ்ட எண் 6.

## துலாம்

புதிய உலக மாற்றங்களில் நமது உறைவிடங்களும் மாறும் நிலை சகசம்தான். அதற்காகக் கவலைப்படவேண்டியதில்லை. பொருளாதார வசதிக்குறைவு இன்னும் சிலகாலத்துக்கு இருக்கும் என்று அரசியல்வாதிகள் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. நமக்கே தெரியும். பொருளாசைக்குப் பிரயாசை முக்கியமென்று பெரியவர்கள் சொல்லித் தந்திருக்கிறார்கள். மனைவியர் வேலை செய்யும் அவசியம் இங்கு எல்லாக்குடும்பங்களுக்கும் உண்டுதானல்லவா? அதில் மாற்றம் வேண்டாம்.

அதிஷ்ட எண் 3.

## விருச்சிகம்

செலவு செலவு என்று சொல்லிக்கொண்டு முக்கியமாகச் செலவு செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போடுவது புத்திசாலித்தனமா? பின் ஒருபோது வரவேண்டியது வரத்தான் செய்யும். புதிய சொத்து சேர்வதை வேண்டாமென்பீர்களா? அதே சமயம் புதியதோர் சிநேகிதம் சேர்வதிலும் முன்னெச்சரிக்கை வேண்டும் என்றும் பெரியவர்கள் எச்சரிக்கை செய்வார்கள். ஒரு வீடுபோதும். அதையே காப்பாற்றிக்கொள்ளவும்.

அதிஷ்ட எண் 4.

## தனு

பழைய நண்பர் ஒருவரைத் திடீரெனச் சந்திப்பதில் குதூகலம்தான். அவர் தரும் அனுபவ அறிவுரைகள் கை தூக்கி விடலாம். வியாபார நுணுக்கங்கள் எல்லாருக்கும் வருமா. இன்னும் சில மாதங்கள் போகட்டும். காலம் மாறும். வெளிநாட்டுப் பிரயாணத்தை ஒத்திவைப்பது நல்லது. குடும்பப் பிரச்சினை முதலில் தீரட்டும். தாம்பத்திய உறவு மேலும் கீழும்தான். வீட்டுக்கு வீடு வாசற்படி என்று ஏன் சொல்லி வைத்தார்கள்?

அதிஷ்ட எண் 2.

## மகரம்

மழலைச் செல்வத்தை ஒரு சிலர்தான் பூரணமாக அனுபவிப்பார்கள். அவர்கள் அதிஷ்டசாலிகள். செல்வம் செல்வமாயிருந்தால் பரவாயில்லை ஆனால் செல்வங்களாகிவிட்டால் எப்படி? கவலையில்லை அதுவும் தெய்வம் தந்தது என்று நிம்மதியடையவேண்டியதுதான். அதற்கும் வருவாய் கிடைக்காமலா போகும். உத்தியோகம் புருஷலட்சணம் என்பார்கள். அந்த லட்சணம் லட்சியமாக இடமிருக்கிறது. நண்பர்கள் நல்லவர்கள்.

அதிஷ்ட எண் 9.

## கும்பம்

பிரயாண ஒழுங்குகளில் திடீர் மாற்றம் ஏற்படுவது மனதிற்குக் கவலைதான். குடும்பம் பெரிது என்பதை மறக்கவேண்டாம். பொருளாதாரம் நல்லது, ஆனால் அருளாதாரம் அவ்வளவாக ஒத்துழைக்கவில்லையே. விரைவில் இருப்பிடம் மாற ஏதுவாகும் என்று நண்பர்கள் சொல்கிறார்கள். எல்லாம் நன்மைக்கே என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். மேடும் பள்ளமும் எங்குமுண்டு.

அதிஷ்ட எண் 4.

## மீனம்

இந்த லாபம் உங்களுக்கு எதிர்பாராது வந்ததல்ல. கடின உழைப்புத்தான் காரணம். இந்த உழைப்பைச் சோரவிடுவார்கள் சிலர். அதுதான் ஆபத்து. பெரியவர்கள் சகாயம் சில காலத்துக்கு உண்டு என்பதை நினைவில் வைத்திருப்பது நல்லதுதானே. புதிய உறவு ஒன்று காத்திருக்கிறது. அது விபரீதமான உறவு என்பதை உணர்ந்து கொள்வது முன்னெச்சரிக்கை என்பார்கள். ஆசை அறுபது நாள் என்று ஒரு பழமொழி இருக்கிறதாக்கும்.

அதிஷ்ட எண் 6.


**லண்டன் மெலொடீஸ்**
**வழங்கும்**

**பொன் மாலைப் பொழுது**

இடம்
LLOYD PARK THEATRE
WIINNS TERRACE (OFF FOREST ROAD)
WALTHAMSTOW, LONDON E17
(Nearest Tube: Walthamstow.
Buses: 123,69,96,315)

காலம்
22.08.92 சனிக்கிழமை மாலை
6.30 மணி

நிகழ்ச்சிகள்

* தாளலய நாடகம்
**"மேலும் கீழும்"**
* ஈழத்தின் தலைசிறந்த இளம் கலைஞர்களால் ஒன்று கூடி அமைக்கப்பட்ட
**லண்டன் மெலொடீஸ்**
இசைக்குழுவினர் வழங்கும்
" **"பொன் மாலைப் பொழுது**
* ரசிகர் அவையிலிருந்து
**லண்டன் மெலொடீஸ்**
இசைக்குழுவினரின் இசையில்
**"தேன் இசை மழை"**

குறிப்பு–
"தேன் இசை மழை" நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்பும் இலை மறை காய் போல் உள்ள பாடகர்கள் உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

அமலவண்ணன் தொலைபேசி– 081-520 9819 அல்லது
ஸ்கந்தமூர்த்தி தொலைபேசி– 081-531 0818

அன்பளிப்பு–£4.00 (தனிநபர்)
£8.00 (குடும்பம்– 2வளர்ந்தோர், 2சிறுவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சாதனையில் சங்கமித்த பார்சலோனா

Barcelona'92

ஸ்பெயின் நாட்டின் பார்செலோனாவில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்துவிட்டன. அனைத்துலக நாடுகளிலிருந்தும் விளையாட்டு வீரர்களும் வீராங்களைகளும் வந்து கலந்து தங்கப் பதங்கங்களை வெள்ளிப்பதங்கங்களைச் சுவீகரித்து சென்றிருக்கிறார்கள்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் ஆரம்பமாகப் போகின்றன என்றதும் முதலில் அபசுரங்கள் சில கேட்பது வழக்கம். "'அந்த நாட்டில்' என்றால் நாங்கள் வரமாட்டோம்" என்று ஒரு நாடு அறிக்கை விடும். அறிக்கை விடுத்த நாட்டுக்கு ஆதரவான நாடுகளும் விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்கும்- புறக்கணிக்கும்!

கிழக்கு பேர்லின் சுவர் உடைக்கப்பட்டு, சோவியத்யூனியன் கலைக்கப்பட்டபின் அரசியல்வாதிகள் தமது அரசியல் சதுரங்க விளையாட்டுக்களை நிறுத்தினார்கள். ஒவ்வொரு நாட்டினதும் உண்மையான விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் உணர்ச்சி பொங்க ஆர்வத்துடன் வந்து போட்டியிட்டார்கள்.

28 வருடங்களுக்கு முன் 1964ல் ஜப்பானியத் தலைநகர் ரோக்கியோவில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டிதான் உண்மையில் எல்லா நாடுகளும் மனமுவந்து பிரதிநிதித்துவம் வகித்த முழுமையான போட்டி!

நான்கு வருடங்களுக்கு முன் கொரியாவின் சோல் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டிகூட பலநாடுகளினால் பகிஷ்கரிக்கப்பட்டது நினைவில் நிற்கிறது. 1992ம் ஆண்டின் ஒலிம்பிக்போட்டியை நடத்தும் கௌரவம் ஸ்பெயின் நாட்டின் பார்செலோனா நகருக்கு கிடைத்தது. எல்லாநாடுகளும் அரசியல் பாகுபாடுகள் இன்றி 28 வருடங்களுக்கு பிறகு 'புறக்கணிப்பு' இல்லாமல் ஒன்று கூடியது ஸ்பெயின் நாட்டுக்கு கிடைத்த பெரிய கௌரவம்! இவை எல்லாவற்றையும் விட சற்றேனும் எதிர்பாராத விதத்தில், யாரும் மதிப்பிடாத விதத்தில் ஸ்பெயின்நாடு- ஒன்றிரண்டு பதக்கங்களை அல்ல- மொத்தம் 13 தங்கப்பதக்கங்களை அள்ளிக்கொண்டு போனது ஸ்பெயினுக்கு மிகப் பெரும் கௌரவமாகும்.

அமெரிக்கா 37 தங்கப்பதக்கங்களை, ஜேர்மனி 33 தங்கப்பதக்கங்களை, சீனா 16 தங்கப்பதக்கங்களை எடுக்கும்போது ஸ்பெயின் 13 தங்கப்பதக்கங்களை எடுப்பது என்ன கௌரவம்? அங்கேதான் விஷயம் இருக்கிறது!

கடந்த 96 ஆண்டுகளில் ஸ்பெயின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மொத்தம் நாலேநாலு தங்கப்பதக்கங்களை மட்டுமே பெற்றிருக்கிறார்கள். ஒலிம்பிக் விளையாட்டுகளை ஸ்பெயின் நாடு நடத்துவதோடு சரி. தங்கப்பதக்கமாவது, பெறுவதாவது என்று கேலி செய்த ஸ்பெயின் குடிமக்கள் பலர். அவர்களில் ஒருவர் 'பக்கோமட்' என்ற மின்சார பாவனைப்பொருள் உற்பத்தி நிறுவன உரிமையாளர்!

ஜூன் மாதம் 3ம் திகதிக்கும் ஜூலை 24ம் திகதிக்கும் இடையில் அவர் ஒரு வர்த்தகப் பிரச்சாரம் செய்தார். இந்தத் திகதிகளுக்கிடையில் எங்கள் கடையில் உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குங்கள்! எங்கள் ஸ்பெயின் நாடு 10 பதக்கங்களுக்கு மேல் (தங்கமோ, வெள்ளியோ எதுவோ) பெற்றால் ரசிதைக் கொண்டுவாருங்கள். உங்கள் பணத்தை திருப்பித் தருகிறோம் என்று விளம்பரம் செய்தார் அந்த முட்டாள் மனிதர்! வியாபாரம் பெருகியது. பொருட்கள் ஜே! ஜே! என்று விற்றன. ஸ்பெயின் நாடு 11வது பதக்கத்தை பெற்றதும் அந்த வர்த்தகரின் முகத்தில் விளக்கெண்ணெய் வடிந்தது!


ஸ்பெயின் நாட்டின் அசாதாரண வெற்றியில் புளகாங்கிதம் அடைந்தோர் 'பக்கோமட்' கடையில் பொருட்களை வாங்கியோர் மட்டு மல்ல. ஸ்பெயின் நாட்டின் மன்னர்- ஜூவான் கார்லோஸ் கூட தலைகால் தெரியாமல் மகிழ்ச்சியில திளைத்துப் போயிருந்தார். பல்வேறு போட்டிகளிலும் ஸ்பெயின் வீரர்கள் வெற்றி பெற்றுவர அந்தந்த மைதானங்களுக்கு விரைந்து சென்று கொண்டிருந்த மன்னர் கார்லோசைப் பார்க்கும்போது "மிட்டாய்கடை ஒன்றுக்குள் தடுமாறிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனைப் போலிருந்தது" என்று ஒரு உவமை கூறப்பட்டது! பிரிட்டனுக்கு மொத்தம் 20 பதக்கங்கள் ( 5 தங்கம் உட்பட) கிடைத்தன. ஆகக்கூடிய பதக்கங்கள் 112ஐப்பெற்ற நாடு- நாடு அல்ல கழகம்! முன்னாளில் சோவியத்யூனியன் எனப்பட்ட இங்நாள் சுதந்திர நாடுகளின் பொதுநலக்கழகம்! அமெரிக்காவுக்கு மொத்தம் 108 பதக்கங்கள்! மலேசியா, தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு ஒவ்வொரு பதக்கம்!

மலேஷியாவிலிருந்து வந்திருந்த பட்மின்டன் குழுவுக்கு பயிற்சியாளராக 'கோச்' என்ற முறையில் வந்திருந்தார் தமிழர் ஒருவர்! பஞ்சலிங்கம் குணாளன் என்ற இந்த மலேசியத்தமிழரினால் பார்சலோனாவிலும் தமிழ்க்குரல் கேட்டது! புத்தமத அனுட்டானங்கள் செய்வதற்காக புத்தமத பிக்கு ஒருவர் திபேத்திலிருந்து வந்திருந்தார்! பார்சலோனாவின் ஒலிம்பிக் கிராமத்தில் காலை நேரத்தில் அந்தந்த நாடுகளின் வீரர்கள் வீராங்கனைகள் 'ஜொகிங்' மெது ஓட்டம் ஓடுவார்கள். ஒலிபெருக்கிகள் தேசிய கீதங்களை இசைக்கும். காலை ஆகாரத்தின் நறுமணம் காற்றில் கலக்கும். அது ஒரு சுகானுபவம்தான் என்கிறார் பதக்கம் பெறாவிட்டாலும் அனுபவம் பெற்றுத் திரும்பிய வீராங்கனைகளில் ஒருவர்.

28 வருடங்களுக்கு பிறகு பிரிட்டனுக்கு ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுத்த வீராங்களை சலி கனேல்.

அடுத்த ஒலிம்பிக் போட்டி 1996ல் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடைபெற இருக்கிறது. அதற்கடுத்த போட்டி 2000ம் ஆண்டில் பிரிட்டனில் மஞ்செஸ்டர் நகரில் நடத்தப்பட வேண்டும் என்ற பிரச்சாரங்கள் இப்போதே ஆரம்பித்து விட்டன.

-விமல்.



நூலினைத் தாண்டும் நூலிடை சலி கனேல்



செல்வி தாரிணி பாலதரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 8ஆம் தேதி ஹென்சிங்டன் பொதுநல நாடுகள் மண்டபத்தில் நடைபெற்றது. நடன கலைஞர் செல்வி ஷோபனா ஜயசிங் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விம்பிள்டன் கணபதி ஆலய பிரதம இணைப்பாளர் திரு ஏ.ரி.எஸ்.இரத்தினசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

லண்டன் நாட்டியாலயா திருமதி ராகினி ராஜகோபாலின் மாணவியான தாரிணி திரு திருமதி பாலதரன் தம்பதிகளின் புதல்வியாவார்.

## அடையாளங்கள்

அறிமுக அட்டைகள் தானா
அடையாளம் காட்டுகின்றன;
சவமணிந்த சட்டைகளுந்தான்
அடையாளம் காட்டுகின்றன.

அடையாளம் தெரியாமல்
முகங்கள் கருக்கப்பட்ட
பிணங்களிலும்,
மனித நேயமற்றோர்
மறைக்க முயன்ற,
மா நிசங்களின்
அடையாளங்கள் தெரிகின்றன.

-நெடுந்தீவு மகேஷ்

## அன்புடன் ஒரு மடல்......!

அன்புள்ள அண்ணாவிற்கு!
அன்புடன் ஒரு மடல்,
அன்புத் தங்கை வரைவது,
பிரியமுடன் படியண்ணா...

வெளிநாட்டு மோகமதில்
எங்களை மறந்தாயோ....?
பழகிய உறவுதனைக்
காற்றினில் தொலைத்தாயோ....?

புகையிலை விற்ற பணம்
கடன் கொடுக்கப் பிந்தினாலும்;
நாமிருந்த காணியையும்,
விற்றல்லோ உனை விட்டோம்!

போனதற்கு ஒரு கடிதம்....
அத்தோடு முடிந்ததன்றோ?
"அயலட்டம்" கேக்கு தண்ணா....
என்ன பதில் நாங்கள் சொல்ல?

என்பிள்ளை வெளிநாட்டில்....
எனச் சொல்லும் பெற்றவர்கள்,
மிதக்கின்றார் செல்வத்தில்!
எங்களுக்கும் கண்ணிருக்கே!

எதை நீ மறந்தாலும்
பத்து மாதம் சுமந்தவளை;
உன்னைஅனுப்பி வைத்தவளை...
எப்படி அண்ணா நீ மறந்தாய்?

-வண்ணையூரான்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# சொற்சதுரங்கம் 2

ஆகஸ்ட் 24ங் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு பரிசு 40 பவுண்கள்.

**(சொற்சதுரங்கம்-1 க்கு எந்த ஒரு வாசகரும் சரியான விடை அளிக்காததால் சொற்சதுரங்கம்-2 க்கான பரிசு இரட்டிப்பாக்கப் பட்டுள்ளது.)**

£40



**உங்கள் முகவரி**

பெயர் :....................................................

முகவரி :....................................................

....................................................

....................................................

....................................................

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**சொற்சதுரங்கம்-2**

**THAMIZHOSAI**
253 WESTERN AVENUE
LONDON W3 0PP

## இடமிருந்து வலம்

1. நாச்சியாரின் ஓங்கி உலகளந்த உத்தமன்.
3. மாதர்பிறையானையும் மிருகங்களையும் பிடிப்பது.
5. படுக்கைத் தழுவல்.
6. கல்விச்சாலையில் துயிலுதல்.
7. கொடுத்தவருக்கும் வாங்கினவருக்கும் தீராத தொல்லை.
8. கணேசரின் முகம்.
9. மாதங்களில் இது நான் என்றான் கண்ணன்.
11. நடுவில் அமைந்தது.
12. கண் தெரிவது.
13. பொழுது விடிந்தால் தெரிந்து விடும்.
14. அத்தையின் இது மெத்தை என்றார் கவிஞர் வாலி.(தலைகீழாக)
15.--18 மேலிருந்து கீழுக்குரியவன் அழகன்.
18.--10 மேலிருந்து கீழ் தருவது.
21. இலக்கியத்தில் வனிதையரின் கைகளில் இருந்து விழுவது விரகத்தில்.(தலைகீழாக)
22. கோடையில் வருவது- தண்ணீரில்லாவிட்டால்.
23. இதைத் தேடி அலையாதவர் உண்டா?
24. இது வேண்டுமா கவிதை வேண்டுமா என்றார் கவிஞர் கண்ணதாசன்.(தலைகீழாக)
25. பெண்களின் இடையை அலங்கரிக்கும் சங்க கால நகை.(தலைகீழாக)
26. குதிரையும் தொண்டை வரண்டவரும் செய்வது.
27. திருப்பாவையில் கோட்டுக்காலாக வருவது.(தலைகீழாக)
28. சிறிதானாலும் காரம் பெரிது.

## மேலிருந்து கீழ்

1. இப்படி நின்ற நந்தகோபன் ஆண்டாளின் தலைவன்.
2. கடைசியில் வருவான் இந்த சாவித்திரியின் எதிரி சத்தியவானுக்காக.
3. அம்பும் இலக்கிய மிருகமும் சேர்ந்து விரலை அலங்கரிப்பது.
4. இலக்கிய கால பெண்களின் நடையில் தெரிவது.
9. மனிதன்.
10. பிரம்மாவின் முச்சக்திகளில் ஒரு சக்தி.
12. கையில் அங்கம்.
13. மேகவண்ணனின் நிறம் வாகனமாகிறது.(தலைகீழாக)
14. படுக்கையின் இன்னொரு பெயர்.
16. வேலவனின் வாகனம்.
17. குளிரில் மென்மையானது.(தலைகீழாக)
18. ஐவகை மலரம்புகள் எய்ய உதவுவது.
19. இனிப்பு- கண்டு பிடியுங்கள்.
20. கண்ணனை இந்த நதித்துறைவன் என்றாள் ஆண்டாள்.
21. கள்ளம்-வில்லன் செய்வது.
22. அன்புக்கும் உண்டோ இது?
25. பொன்னார் உடம்புடையவன் சிவன் (தலைகீழாக)
26. திருக்குறளின் 111ஆவது அதிகாரத்தில் முக்கிய அங்கம்.

**தொகுத்தவர்: ஜனா**

## சொற்சதுரங்கம்-1 விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ட் | ச | ண | ம் | | | தீ | ப | ம் | | ந |
| ல் | | ப் | | | | | ர் | | ன | | க |
| ல | | பா | | | க | ல | வை | | ச | த | ம் |
| க் | | த் | | | ண | | | | ஞ் | | |
| கு | த் | து | வி | ள | க் | கு | | | அ | ன் | பு |
| | | | சா | | கு | ள | வி | | | | ன |
| | ப | | ர | | | ம் | | வி | ட் | டி | ல் |
| ப | ஞ் | ச | ணை | | | பு | | ல் | | | |
| | ச | | | வி | | | ன் | | க | ட் | சி |
| | பூ | ச் | ச | ர | ம் | | க | ட | ல் | | க |
| | த | | | த | | | டி | | | | ர |
| அ | ம் | மா | | ம் | ர | க | ந | | வ | ர | ம் |

# காத்திருந்த....

13ம் பக்க தொடர்ச்சி

போயிடுவேன்.. வாங்க உட்காருங்க..."

வலது கால் பெடல் கட்டையை மிதித்துக் கொண்டிருக்க,இடது காலைத் தரையில் ஊன்றி, பெரியவர் ஏறுவதற்கு வசதியாக சாய்ந்து நின்றான். அவர் தடுத்தார். அவன் கேட்கவில்லை. வலுக்கட்டாயமாக ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

'மனிதனுக்கு எப்பவோ கொஞ்ச நேரம் சந்தோஷம் கிடைக்கிறது. அதையும் அனுபவிக்காமல் விடுவது முட்டாள் தனம்'- மனதில் நினைத்துக் கொண்டு உற்சாகமாக சைக்கிளை மிதித்தான்.

(தீபம்-ஆகஸ்ட்1987)

# ஸ்கந்தவேல் கருணைஇல்லம்

(நமது நிருபர்)

வேல்ஸ் ஸ்கந்தவேல் ஆலய கருணை இல்ல நிதிக்காக செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி சனிக்கிழமை காலை 10மணிக்கு விம்பிள்டன் டேண்ஸ்போட் அவனியூ விற்றிள் மண்டபத்தில் ஏலவிற்பனை, மதியபோசனமும் மாலை 3 மணிக்கு றிச்மன்ட் பூங்காவில் குரு சுப்ரமுனிய தலைமையில் 7 மைல் ஆதரவு நடையும் நடைபெறும்.

குடும்பத்தில் அனைவரும் கூதூகலித்துக் களிக்கக்கூடிய இவ் வைபவத்தில் கிடைக்கும் நிதி அனைத்தும் ஸ்கந்தவேல் ஆலய கருணை நிலையத்துக்காக- அங்கு வசிக்கும் அந்த ஜீவன்களுக்காக பயன்படுத்தப்படும்.

# திருப்பியனுப்பப்படுவர்

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கு அனுப்பப்பட வேண்டிய 84 ஆயிரம் வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை, திருப்பி அனுப்புவதென்ற அரசாங்க கொள்கையில், எவ்வித மாற்றமும் இல்லை என்று பிரதமர் டி.பி.விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இங் நாட்டிற்கு நான்கு தலைமுறைகளாக உழைத்த இந்திய வம்சாவளி மக்களில் ஒரு பகுதியினரை, அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நாடு கடத்தது வதோ நாடு கடத்த நினைப்பதோ மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமைகளுக்கும், விரோதமான செயல் என மலையக தொழிற்சங்கங்கள் தமிழர் அமைப்புகள் பலத்த, கண்டனம் தெரிவித்துள்ளன.



இவ்வாண்டுக்கான ஸ்ராட்போட், கிழக்கு லண்டன் இசைவிழாவில் பங்குபற்றிய 17 இசைக்குழுக்களில் லண்டன் வீணை இசைக்குழு அதி திறமை வாய்ந்த குழுவாக தெரிவுசெய்யப்பட்டது. இக்குழுவினர் பிரபல வீணை இசைக்கலைஞர் திருமதி அருந்ததி சிறிஸ்கந்தராஜாவின் மாணவியராவர்.

அபிரா யோகராஜா(9வயது), லக்ஷ்மி சிறிகாந்தராஜா(4வயது), மாதினி மனோகரன்(11வயது), காயத்திரி தியாகராஜா(10வயது) ஆகியோர் இதில் பங்குபற்றினார்கள்.

# அழுத்தம்

பேய்கள் வராமலே
குருதி நாடியுள்
உறைந்த தென் கனவில்

வயற்காற்றுலாவும்
வகுப்பறை வாசலைக்
காலையில்
ஒற்றைக் கூந்தலும்
ஈரமல்லிகையும்
கடந்து போகும்.

அசோக மரத்தைக்
கடக்கிற வரையில்
இமைகள் இருப்பதே
மறந்து போகும்.

சுவர்க்கப்பாலும்
நெற்றியில் புரளும்
ஒற்றை மயிர்க் கற்றையினைக்
காற்றலைப்பதைக்
கண்கள் அறியும்.

துருவத் தொலைவில்
உறைபனிக் காலையில்
பத்து வருடப்
பிறகும்-
ஒரு கணம் எரிந்தேன்.

-இளவாலை விஜயேந்திரன்
நோர்வே.

# சூழ்நிலை

மஞ்சள் பத்திரிகைகள்
இல்லை
சிவப்புவிளக்குப் பகுதிகள்
இல்லை
ஆபாசப் பாடல்கள்
சுவரொட்டிகள்:
'A' படங்கள் நீலப்படங்கள்
இவைகளும் இல்லை-
இராமன் காலத்தில்.
அவனால்,
ஏகபத்தினி விரதத்தை
இறுக்கிப் பிடிக்க
முடிந்தது!

-எஸ்.பி.சிவனேஷ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# VASAN LITHO PRINTER

We are offering Four Colour Offset
Litho Printing, Design, Typesetting and Desk Top Publishing
using quality equipment such as
**ORIGINAL HEIDELBERG**
Printing Machines

## QUALITY, SPEED & COMPETITIVE RATES

Business Cards, Letterheads, Complement slips,
N.C.R Forms, Leaflets, Invoices
Wedding Cards, Menu Cards, Show Tickets,
Labels, Envelopes, Calendars,
Programme Brouchures, Magazines and Books.

## ALL PRINTING SERVICES UNDER ONE ROOF

60 P PITCAIRN ROAD, MITCHAM, SURREY CR4 3LL

**TEL: (081) 640 4366**

# EVERGREEN ENTERTAINMENTS

பெருமையுடன் வழங்கும்

# பொப்பிசைப்புயல்



பொப்பிசைச் சக்கரவர்த்தி
ஏ.ஈ.மனோகரன்



பொப்பிசை ஆசான்
நித்தி கனகரத்தினம்

**15 ஆகஸ்ட் 1992 சனி**
மாலை 7 மணி
At
**Harrow Leisure Centre**
Christ Church Avenue, Middx HA3 5BD

துள்ளிசைக்கு பின்னிசை வழங்க லண்டனின் தலைசிறந்த இசைக்குழு **SOFT OPTION**
ஆடும் இளைஞருக்கு நவீன றெகே, டிஸ்கோ டி.ஜே **REFLEX**

பொப்பிசைப்புயலில் அறிமுகம்
**உதயசூரியன் இசைக்குழு**

தொகுத்தளிப்பவர்
எஸ்.கே.ராஜென் (பிரான்ஸ்)

பொப்இசை வாணி
சரோஜா செல்வகுமார்

முதல்முறையாக
லண்டன் ரசிகர்களை
மகிழ்விக்க
அவுஸ்திரேலியாவிலிருந்து
வந்துவிட்டார்
நித்தி

அனுமதி
வயது வந்தோர் £10
10 வயதுக்கு கீழே இலவசம்



ஒலிதா பிரேமதிரத்னா

Baskar Foods

**CONTACT: 081-992 8537**

**Licenced Bar & Food Available**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

G COM

பரிசளிப்பீர் !!

கோடை
விடுமுறையில்
சிறார்களின்
தொல்லையா?
தவிர்த்திடுவீர்!



# 386SX , 386DX, 486

## உங்கள் கம்ப்யூட்டர் தேவை எதுவாயினும் நாடுங்கள்

## கம்ப்யூட்டர் தயாரிப்பிலும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதிலும் ஆறு ஆண்டு கால அனுபவம் வாய்ந்த நிறுவனம்

**G-COM COMPUTERS LTD**
**253 Western Avenue, London, W3 OPP, United Kingdom.**
தொலைபேசி : 44-(0)81-992 8384